விலை
ரூபா
20.00



கொலைவெறிக்கு
முதலிடம்

9



பஸ்விபத்தில்
எண்மர் சாவு

11

எப்போது முடியும்
இழுபறி?

15



இலங்கையருக்கு
இடமில்லை.

25



www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

★

உதயன்

கதிர் 38

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 18 செவ்வாய்க்கிழமை (03/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கிளிநொச்சிக்கு ரயில் சேவை இந்த ஆண்டின் இறுதிக்குள்

## பணிகளைத் துரிதப்படுத்துகிறது ரயில்வே திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜனவரி 3

இந்த ஆண்டின் இறுதிக்குள் கிளிநொச்சி வரை ரயில் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ரயில்வே திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் இருந்து ஓமந்தை வரை ரயில் சேவை தற்போது சீராக இடம்பெற்று வருகின்றது. ஒழுங்கான நேர அட்டவணையின் கீழ் பயணிகள் ரயில்கள், பொருள்களை ஏற்றி இறக்கும் ரயில்கள் என்பன சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. இந்தச் சேவைகளுக்கு மேலும் புதிய ரயில் எஞ்சின்கள், பெட்டிகள் என்பனவற்றை இணைத்து சேவையைமேலும் விரிவு படுத்துவதற்கான ஆலோசனைகளிலும் ரயில்வே திணைக்களம் ஈடுபட்டுவருகிறது.

தற்போது ஓமந்தை வரை நடைபெறும் ரயில்சேவையை இந்த ஆண்டின் இறுதிக்குள் கிளிநொச்சி வரை நீடிப்பதற்கான முயற்சிகளில் ரயில்வே திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து சேவைகளை மேலும் மேம்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார். இதற்கமையவே ரயில்வே

27

# இந்தியா பாதுகாப்பு ரீதியாக இலங்கையை சார்ந்துள்ளது

## எஸ்.எம்.கிருஷ்ணா கூறுகிறார்

கொழும்பு,ஜன.3

இந்தியா பாதுகாப்பு ரீதியாக இலங்கையில் தங்கியுள்ளது. எனவே மூன்றாவது நாடு (சீனா) ஒன்றுடனான கொழும்பின் உறவு கவலை அளிக்கக் கூடியது தான் அதற்காக எமது நலன்களை அவர்கள் மீது திணிக்க முடியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, புதுடில்லியில் இருந்து வெளியாகும் ''பிஸ்னஸ் ஸ்ரான்டட்'' இதழுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான உறவுகள் முன்னேற்றமடைந்துள்ளன. ஆனால் விடுதலைப் புலிகளின் கொள்கையை பிரபாகரன் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றபோதுகூட உறவு நன்றாகவே இருந்தது. இலங்கையுடன் இருதரப்பு உறவுகளைப் பேணிக் கொள்வதற்காக இந்திய அரசு எந்தக் குழுவுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவே உதவி வழங்கவில்லை.

பாதுகாப்பு ரீதியாக, நாங்கள் இலங்கையில் தங்கியுள்ளோம். அங்கு பாதுகாப்புப் பற்றிய பாரிய கவலைகள் உள்ளன. அவை இந்தியப் பெருங் கடலில் இரு நாடுகளையும் பாதிக்கக் கூடியவை.நாங்கள் தொடர்ந்தும் இலங்கையை வலப்புறமாக வைத்துப் பார்க்கவே விரும்புகிறோம்.

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுக்கு

27

# சஜித் தரப்பினரின் பதவிகள் பறிப்பு

கொழும்பு, ஜன.3

சஜித் பிரேமதாஸ தரப்பைச் சேர்ந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து தொகுதி அமைப்பாளர் பதவிகள் பறிக்கப்படவுள்ளன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சஜித் பிரேமதாஸ தரப்பைச் சேர்ந்த தயாசிறி ஜயசேகர, புத்திக்க பத்திரண, சுஜீவ சேனசிங்க மற்றும் அசோக ஆகியோரின் அமைப்பாளர் பதவிகளே பறிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்த வருடம் பல தொகுதிகளுக்கு பல புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மறுசீரமைப்பின்போது ஏற்கனவே தொகுதி அமைப்பாளர்களாகவுள்ள சஜித் பிரேமதாஸ தரப்பினர் பலர் நீக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு

27

# இலங்கையின் காதலி இந்தியா முத்தம் தரும்; அழுத்தம் தராது

## சாடுகிறது ஐக்கிய சோஷலிசக் கட்சி

கொழும்பு, ஜன.3

இந்தியாவின் உயர் காதலியான இலங்கைத் தீவுக்கு அந்தநாடு முத்தம் கொடுக்குமே தவிர ஒருபோதும் அழுத்தம் கொடுக்காது. இந்தியாவின் மௌனத்தில் பல கோடி ரூபா வருமானம் பதுங்கியுள்ளது. எனவே, மௌனத்தைக் கலைப்பதற்கு அது விரும்பாது.

- இவ்வாறு ஐக்கிய சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய மேலும் கூறியதாவது:-

இந்திய அரசுக்கு ஏதாவது அழுத்தம் வரும்போதே அது இலங்கை விவகாரத்தில் தலையிடுவதுபோல் நாடகம் ஆடுகின்றது. இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முதலீடு செய்துள்ளது. எனவே, இலங்கையை அது ஒருபோதும் பகைத் துக்கொள்ளாது. இலங்கையுடன் காதல் உறவைப் பேணும் இந்தியா, இலங்கையை உச்சக்கட்ட இடத்தில் வைத்தே பார்க்கும். இல்லையேல் இலங்கைக்குள் சீனா புகுந்துவிடும் என்ற பயம் பாரதத்திற்கு உள்ளது.

இந்திய அரசுக்கு ஜனாதிபதி மஹிந்த பல்வேறு உறுதிமொழிகளை அள்ளி வீசினார். ஆனால், உறுதிமொழிகள் யாவும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. இந்திய அரசுக்கு மஹிந்த அரசு காட்டும் பூச்சாண்டி விளையாட்டைப் பார்த்துக்கொண்டு இந்தியா மௌனமாகத்தானே உள்ளது. இந்தியாவின் மௌனத்தில் பல அர்த்தங்கள் உள்ளன. வருமானமும் [illegible] விடயங்கள் வாயைத் திறக்க[illegible] இந்தியாவை ஊமையாக்கிவிட்டன - என்றார். (ஒ-சி)

# இலங்கைக் கடலில் மூழ்கிய கப்பல்கள்; ஆய்வுகளை நடத்த சீனா விரும்புகிறது

## இரு நாடுகளிடையே உயர்மட்டப் பேச்சு

கொழும்பு, ஜன.3

இலங்கைக் கடற்பரப்புக்குள் மூழ்கியதாகக் கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கப்பல்கள் தொடர்பில் ஆய்வு நடத்துவதற்கு கொழும்பிடம் சீனா கோரிக்கை விடுத்திருக்கிறது என்று அறியப்படுகிறது.

முன்னதாக, இலங்கைக் கடல் எல்லைக்குள் எண்ணெய் வள ஆய்வுகளை முன்னெடுக்க சீனாவின் கம்பனி ஒன்று விடுத்த கோரிக்கைக்கு இலங்கை சம்மதம் தெரிவித்திருக்கும் நிலையில், சீனாவின் இந்தப் புதிய கோரிக்கை இந்தியாவைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது எனக் கூறப்படுகிறது.

இலங்கை சீனாவின் பக்கம் சாய்கின்றது என பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தப் புதிய தகவலும் வெளியாகி உள்ளது.

பராக்கிரமபாகு மன்னன் இலங்கையை ஆட்சிசெய்த காலகட்டத்தில் இலங்கைக் கடற்பரப்புக்குள் மூழ்கியதாகக் கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கப்பல்கள் தொடர்பில் ஆய்வு நடத்துவதற்கே சீன அரசு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றது.

ஆய்வு நடத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இலங்கை தொல்பொருள்

27

# வீடுகளை கிருஷ்ணா கையளிப்பார்

கொழும்பு, ஜன.3

இந்திய அரசினால் யாழ். மாவட்டத்தில் அமைக்கப் பட்டு வரும் முன்னோடி வீட்டுத்திட்டத்தில்பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை கைய[illegible] எதிர் வரும் 18 ஆம் திகதி

27

# ஜே.வி.பி. கிளர்ச்சியாளரின் குடும்பம் கைதாகி விடுவிப்பு

கொழும்பு, ஜன.3

ஜே.வி.பியின் கிளர்ச்சிக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் பிரேம்குமார் குணரத்தினத்தின் மனைவி, பிள்ளைகள் ஆகியோரைப் பாதுகாப்புத் தரப்பினர் நேற்று அதிகாலை கைது செய்தனர். பின்னர் அவர்கள் நேற்றிரவு விடுவிக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜே.வி.பியின் மாநாடு நடைபெற்று முடிந்த கையோடு மாற்றுக்குழுவின் தலைவரின் குடும்பத்

27

### விளக்கமறியல் தமிழினிக்கு நீடிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பிரிவின் பொறுப்பாளரான தமிழினியின் விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் ரஷ்மி சிங்கப்புலி நேற்றுப் பிறப்பித்தார். தமிழினி மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று குற்றத்தடுப்புப் பொலிஸார் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியதனையடுத்தே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. (ந-சி)

### ஜே.வி.பியை இணைத்து புதிய கட்சி உதயம்

ஜே.வி.பியின் உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் புதிய கட்சியொன்றை உருவாக்கப்போவதாக அந்த முன்னணியின் அதிருப்திக் குழு தெரிவித்துள்ளது. ஜே.வி.பியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகித்த 9 உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தெபரவெளயில் இடம்பெற்ற வருடாந்த மாநாட்டின்போது செயற்குழுவில் இருந்து அகற்றப்பட்டனர். இதையடுத்தே அதிருப்திக்குழுவின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### படையினரால் ரூ. 3.7 பில்லியன் வருமானம்

அரசின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பங்களிப்புச் செய்து, 3.7 பில்லியன் ரூபாவினை படையினர் சேமித்துக் கொடுத்துள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். கல்வி, விவசாயம், பொருளாதாரம், சுயதொழில் முயற்சிகளுக்கு படையினர் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் எனவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அவர்கள் உதவி வழங்கி வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-சி)

### யாழ். ஆஸ்பத்திரியில் மாணவன் சாவு

இனம்தெரியாத காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவர் ஒருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார். யாழ்.மத்தியகல்லூரியில் 2013 வணிகப்பிரிவில் கற்கும் மாணவனான புஸ்பராசா பிரவின் (வயது 17) என்ற மாணவனே மரணமானவர் ஆவார். (ஒ-10-4)

### சசியோடு சமரசமில்லை ஜெயலலிதா உறுதி

இனி எக்காலத்திலும் சசிகலாவோடு தான் சமரசம் செய்யப் போவதில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அவரோடு ஏற்பட்ட பிரிவால் எந்த இழப்பு வந்தாலும் தன்னால் அதைச் சமாளிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச சட்ட உதவிகள்

மன்னார், ஜன.3

மன்னாரில் இலவச சட்ட உதவிகள் வழங்கும் வேலைத் திட்டம் இடம்பெற்று வருகின்றது.

மன்னார் பெற்றா கிராமத்தில் அமைந்துள்ள சர்வோதயம் பணிமனையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு இலவச சட்ட உதவிகள், சட்ட ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. காணி வழக்கு மற்றும் சிவில் வழக்கு தொடர்பாகவும் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணி ஜெபநேசன் லோகு என்பவரால் மேற்படி சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை தமது அலுவலகத்தில் நாளாந்தம் வழக்குகள் பதிவு செய்யப்படுவதாக மாவட்ட நீதிச் சேவை இணைப்பாளர் பிரதீபன் தெரிவித்தார். (க-601)

## முக்கிய வீதிக்கே இந்த நிலை

அக்கராயன், ஜன.3

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளத்தின் முக்கியமான வீதியொன்று பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. சோலையிலிருந்து ஜெயபுரம் செல்லும் நான்கு கிலோ மீற்றர் நீளமான வீதியே புனரமைக்கப்படாது அவல நிலையில் காட்சியளிக்கின்றது. சோலை, குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தினமும் இந்த வீதியூடாகவே நடந்து செல்வர். ஏனென்றால் இதனூடாகச் செல்லும்போது ஜெயபுரம், பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களை அடைவதற்கு இவர்கள் மிகக் குறுகிய தூரமே செல்ல வேண்டும். (க-410)

# 2,841 பேரைக்காணோம்

### போரின் பின்னர் கரைச்சியில் மட்டும்

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் கடந்த காலப் போர் காரணமாக 2 ஆயிரத்து 841 பேர் காணாமற் போயுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலப் போர் காரணமாக ஏராளமானவர்கள் காணாமற் போயுள்ளனர். இந்த நிலையில் கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள 42 கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் அடிப்படையில் சுமார் 2 ஆயிரத்து 841 பேர் காணாமற் போயுள்ளனர்.

இதனைவிட 244 சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்து அநாதைகளாகக் காணப்படுகின்றனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் இன்னும் அவர்களைத் தேடிப் பல்வேறு சிறைச்சாலைகள், அரச திணைக்களங்கள் பொலிஸ் நிலையம் எனப் பல்வேறு இடங்களிலும் தினமும் அலைந்து திரிகின்றனர். (க-6)

# சொந்த இடத்தில் மீளக்குடியமர மன்றாடும் மக்கள்

### நாமல் ராஜபக்ஷவிடமும் மனு

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதி மக்கள் தம்மைத் தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்த்துமாறு கோரும் மனுவொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட திருமுறிகண்டிப் பகுதியின் ஒரு பகுதி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்காததுடன் அந்தப் பகுதிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர்.

> 46 குடும்பங்கள் மெனிக்பாம் நலன் புரி நிலையத்திலும், ஏனைய 69 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றன. இந்த 115 குடும்பங்களும் தமது சொந்த இடங்களிலேயே மீளக் குடியமர வேண்டும் .

இந்த நிலையில் இந்தப் பகுதியில் மீளக்குடியமர வேண்டிய 46 குடும்பங்கள் மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலும், ஏனைய 69 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வருகின்றன. இந்த 115 குடும்பங்களும் தமது சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர வேண்டும் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிறிதொரு இடத்தில் இந்தக் காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு இடங்களில் தமக்குக் காணி வழங்க வேண்டிய தேவையில்லையெனவும் தமது காணிகளையே தமக்கு வழங்க வேண்டுமெனவும் கோரும் மனுவொன்றைக் கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் இவர்கள் வழங்கியுள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்தே இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது. (க-6)

## ஓயாது தொடரும் திருட்டுக்கள்

மன்னார், ஜன.3

மன்னாரில் திருட்டுச் சம்பவங்கள் இன்னமும் ஓயாத நிலையில் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



முன்பு நிலவிய கிறீஸ் பூதம் தொல்லை ஓய்ந்த நிலையில் தற்போது திருடர்கள் மக்களை அச்சத்தில் உறைய வைக்கின்றனர்.

மேலும் சாமியார், பிச்சைக்காரன், வியாபாரிகள் போன்ற வேடங்களைப் பூண்டு பகலில் வீடுகளை நோட்டமிடும் திருடர்கள் இரவில் தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர்.

> கிறீஸ் பூதம் தொல்லை ஓய்ந்த நிலையில் தற்போது திருடர்கள் மக்களை அச்சத்தில் உறைய வைக்கின்றனர்.

தற்போது பண்டிகைகள் முடிவடைந்த நிலையில் அந்நியர்களின் வருகை குறைவடைந்துள்ளது. இந்த நிலையில் மக்கள் விழிப்புடன் இருந்து திருட்டுக்களைத் தவிர்க்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் சகல கிராமங்களிலும் பொலிஸாரின் உதவியுடன் இளைஞர்களை இணைத்து விழிப்புக் குழுக்களை அமைக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-601)

## குளத்தில் வீழ்ந்து இளைஞர் சாவு

வவுனியா, நெடுங்குளம் பகுதியில் குளத்தில் வீழ்ந்து இளைஞர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். புதுவருடத்தை முன்னிட்டு நண்பர்களுடன் குளக்கரையில் பொழுதைக் கழிக்கச் சென்ற சமயம் இவர் தவறி குளத்தில் வீழ்ந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பை சேர்ந்த நித்தியானந்தனே (22 வயது) உயிரிழந்தார்.

## 3,000 நுளம்பு வலைகள் மடுவில் விநியோகம்

மன்னார் மடு உதவி அரச அதிபர் பிரிவில் 3,000 நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டம் மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராமங்களிலும் மன்னார் சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் மருந்து பூசப்பட்ட நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தெரிவித்தார்.

மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட 17 கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைந்துள்ள கிராமங்களில் இந்த நுளம்பு வலைகள் வழங்கப்படுகின்றன. சுகாதாரத் திணைக்களம் மற்றும் மலேரியாத் தடை இயக்கம் ஆகியவற்றின் ஆலோசனைக்கு அமைவாக இவை வழங்கப்படுகின்றன. (க-601)

## வவுனியா இலக்கிய வட்டத்தின் 'மாருதம்' சஞ்சிகை வெளியீடு

வவுனியா, ஜன.3

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் 14 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் 'மாருதம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 'மாருதம்' சஞ்சிகையின் 12 ஆம் இதழ் வெளியீடும், கந்தையா ஸ்ரீ கந்தவேல் எழுதிய "கருவறையில் இருந்து நாடக எழுத்துருக்கள்" நூலும், செல்வி நந்தீஸ்வரி துரைராசா எழுதிய "உயிர்க்கும் விழுதுகள்" என்ற கவிதை நூலும், கலாநிதி ந.இரவீந்திரன் எழுதிய "முற்போக்கு இலக்கிய எழுச்சி" ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.

சான்றோர் விருது வழங்கும் நிகழ்வில் தேகாந்த நிலையில் கவிதைக் கலைச் செல்வர் என்ற விருதினை அமரர் கவியெழில் கண்ணையாவுக்கும், ஊடக கலைச் செல்வர் என்ற விருது அமரர் தம்பு விவேகராசாவுக்கும் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(க-421)

## சாதகமான சூழல்


சர்வதேசத்தின் அணுகுமுறை எமக்கு சாதகமாக திரும்பத் தொடங்கி உள்ளது. இதனைப் பயன்படுத்தி நம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அதுவே நீடித்த அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறினார். கிராமிய அமைப்புக்களுக்கு பொருள் உதவி செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# கிராமத்தையும் வீடுகளையும் பிரிந்து நாம் செல்ல முடியாது

**சன்னார் மக்களின் தொடரும் கவலை**

> வாழ்வாதாரத்துக்கே நாளாந்தம் பிரச்சினை என்ற நிலையில், எமது முயற்சியில் உருவான கிராமத்தையும் வீடுகளையும் விட்டு நாங்கள் எப்படிச் செல்ல முடியும்?



மன்னார், ஜன.3

எமது கிராமம் மற்றும் வீடுகளைவிட்டு எம்மால் வேறு இடங்களுக்குச் செல்ல முடியாது - இவ்வாறு மீண்டும் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் மன்னார் மாவட்டம் சன்னார் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

[illegible] தமது சொந்தக் கிராமத்திலிருந்து வெளியேற்ற அரச அதிகாரிகள் தொடர்ந்து வற்புறுத்தி வருவதாகவும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டனர்.

சன்னார் கிராமத்தில் 154 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 850 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் கடந்த வன்னிப் போரின்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவர்கள்.

போரின்போது உறவுகளை இழந்துள்ளனர். பலர் எவரும் இன்றித் தனி மனிதராக உள்ளனர். சில பெற்றோர் தமது பிள்ளைகளையும், சில பிள்ளைகள் தமது பெற்றோரையும் யுத்தத்தில் பலி கொடுத்துள்ளனர்.

இவர்களுடைய மனதில் இழப்புக்கள் தொடர்பான சோகங்கள் காணப்படுகின்றன. தமது நிலை தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது நாங்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்டுள்ள போதிலும் எமது கிராமத்துக்கெனப் பொது மலசலகூடம் ஒன்றுகூட இல்லை. உரிய போக்குவரத்து வசதிகள் இல்லை. குடிதண்ணீர் போதிய அளவு இல்லை இவ்வாறு

பிரச்சினைகளுக்கு நாங்கள் நாளாந்தம் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் தற்போது எமது முயற்சியில் உருவாக்கப்பட்ட எமது கிராமம் மற்றும் எமது வீடுகளை விட்டு அதிகாரிகள் கூறுவது போன்று நாங்கள் எப்படிச் செல்ல முடியும் என மக்கள் கேள்வி எழுப்பினர். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆக்கபூர்வமான பலன் கிட்டட்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களை வாட்டும், அச்சுறுத்தும் சமூக விரோதச் செயல்கள், குற்றச்செயல்கள் படுவேகமாக அதிகரித்து வருகின்றன. தட்டிக் கேட்க எவருமில்லை என்ற ஒரு வகையான சுதந்திரத்துடன் அவற்றில் ஈடுபடுவோர் தமது இலக்குகளை எய்தி வருகின்றனர். அதனால் பொது மக்கள் பெரும் கஷ்டங்களை மட்டுமன்றி, நட்டமும் அடைந்து வருகிறார்கள்.

நவீன வாழ்க்கை முறை மீதான பெரும் ஈடுபாடு காரணமாக, இளைய சமூகத்தினர் தமது தகுதிக்கும் தேவைக்கும் அதிகமாகப் பணம் தேடும் கைங்கரியங்களில் மனம் போன போக்கில் செயற்படுகிறார்கள். ஒழுக்கம், பண்பு, கட்டுப்பாடு இவை எல்லாம் என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப் போகிறது. இந்த நிலைமை இப்பிரதேசத்தின் வாழ்வியல், பண்பாடு உட்பட்ட சகல நல்லியல்புகளையும் அரித்துச் கெடுத்து வருகிறது.

போதைவஸ்துப் பாவனை, மது அருந்துதல், புகைத்தல் போன்ற ஒவ்வாத பழக்கங்களுக்கு மாணவர்கள் உட்பட இளையோர் சமுதாயம் வேக வேகமாக ஆட்பட்டு வருகிறது.

பெற்றோராலோ அன்றி மூத்தவர்களாலோ திருத்த முடியாத, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை நாளாந்தம் மோசமுற்றுச் செல்கிறது. குடும்பநிலை எவ்வாறு இருந்தால் என்ன, பெற்றோரின் வருமானம் குறைவாக இருந்தால் என்ன, எங்கள் இளைஞர்களுக்கு இப்போது மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி மட்டுமன்றி மதுபானங்களும் தேவைப்படுகின்றன. அவற்றில் தமக்குள்ள அதீத ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல், அவர்கள் திருட்டு மற்றும் சண்டித்தனங்களில் ஈடுபடும் அளவுக்கு கெட்டுப் போயுள்ளனர்.

போரினால் பல வகைகளிலும் பாதிப்புற்ற பெற்றோர், தப்பிஒட்டியிருக்கும் தமது பிள்ளைகள் மீது கட்டுப்பாடு விதிக்கவும் முடியாது தடுக்கவும் முடியாத கையறு நிலையில் உள்ளனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஊறித் திளைத்தவர்களால், இளைஞர்களும் மாணவர்களும் ஈர்க்கப்பட்டு, சமூகப் பெறுமானங்களும், நல்லொழுக்கம் மற்றும் நற்பண்புகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றைத் தடுப்பதற்குப் பெற்றோருடன் சேர்ந்து உழைக்கும் பொறுப்பு, இப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸாருக்கும் உண்டு. அதனை அரசும், பொலிஸ் தரப்பும் உணர்ந்து உள்ளன என்பதற்கான சமிக்ஞைகள் குடாநாட்டில் தென்படுகின்றன.

இப்பிரதேசத்தில் அண்மைக் காலமாக, குற்றச் செயல்கள் விண்மண் தெரியாமல் அதிகரித்து வருகின்றன. இரவு நேரங்களில், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு உதவும் பொருட்டு கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பொலிஸார் உருவாக்கியுள்ளனர்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட மொத்தம் ஐம்பத்தாறு கிராம சேவகர் பிரிவுகளுக்கு, சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகள், கிராம சேவகர்கள், சமூகத் தொண்டர்கள் அங்கம் வகிக்க ஏற்பாடாகி உள்ளது. சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

சமூக விரோதச் செயல்கள், குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் பொலிஸார் அடங்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது வெறும் வார்த்தைகளில் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் நிகழவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது குற்றச்செயல்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. அவற்றைக் கண்டறிந்து தீர்வு காண்பதோடு மட்டுமன்றி தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியம்.

* கிராமங்களில் நடைபெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸாரால் மட்டும் இயலாது. பொதுமக்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

* இளைஞர்களைக் கிராம மட்டத்தில் திரட்டி, அவர்களின் பாதுகாப்பு, கிராமங்களின் அபிவிருத்தி, சமூகக் குற்றச் செயல்களுக்குத் தீர்வு என்பனவற்றை எந்தவித அரசியல் கலப்பின்றியும் செயலாக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா, வெளியிட்டுள்ள இக்கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

வெறும் குற்றச்செயல்களோடு மட்டுப்படுத்திக் கொள்ளாமல், சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். இந்தக் குழுக்களில் மக்களோடு பொலிஸ் அதிகாரிகளும் சேர்ந்து கூட்டு முயற்சி மேற்கொள்ள இருப்பதால், அவை திட்டமிட்டுள்ளவாறு செவ்வனே செயற்பட்டால், சமூக விரோதச் செயல்களை கணிசமாகவேனும் குறைக்க முடியும். சிவில் பாதுகாப்புக் குழுக்கள் தமது இலக்குகளை அடைவதற்கு செயல் திறனுடன் பணியாற்றினால் மக்களின் காத்திரமான ஒத்துழைப்பும் கனதியான பங்களிப்பும் கிடைக்கும்.

மிக உடனடியாக உத்வேகத்துடன் இக்குழுக்கள் குழம்பல் சிதம்பல் இன்றிச் செயற்பட்டால், ஆக்கபூர்வமான பலன் கிடைக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இன்றே செய்க, அதனை நன்றே செய்க. அதுவே சமூகத்தைக் கவ்விப் பிடித்துள்ள விரோதச் செயல்களைத் துரத்தி அடிக்க வகை செய்யும்.

# அவலச்சாவு 179

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 179 பேர் தற்கொலை செய்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகிறது. இது 2010 ஆம் ஆண்டின் தற்கொலை மரணங்களிலும் பார்க்க 21 சதவீதம் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| அவலச்சாவு – 2011 | |
|---|---|
| தூக்கு - 56 | நஞ்சு - 50 |
| மூழ்கி - 43 | எரிந்து - 30 |

கடந்த வருடம் தூக்கில் தொங்கி 56 பேரும், நஞ்சருந்தி 50 பேரும் நீரில் மூழ்கி 43 பேரும் நெருப்பில் எரிந்து 30 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஜனவரி மாதம் 19பேரும், பெப்ரவரி மாதம் 19 பேரும் மார்ச் மாதம் 23 பேரும், ஏப்ரல் மாதம் 17 பேரும், மேமாதம் 23 பேரும் ஜூன் மாதம் 15 பேரும்

ஜூலை மாதம் 11 பேரும் ஓகஸ்ட் மாதம் 11 பேரும் செப்ரெம்பர் மாதம் 9 பேரும் ஒக்ரோபர் மாதம் 11 பேரும் நவம்பர் மாதம் 9 பேரும் டிசெம்பர் மாதம் 12 பேருமாக மொத்தம் 179 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இது கடந்த 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதிகரித்த மன அழுத்தமே இந்த திடீர் தற்கொலை அதிகரிப்புக்கு காரணமென வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (த-15)

| | |
|---|---|
| ஜனவரி | 19 |
| பெப்ரவரி | 19 |
| மார்ச் | 23 |
| ஏப்ரல் | 17 |
| மே | 23 |
| ஜூன் | 15 |
| ஜூலை | 11 |
| ஓகஸ்ட் | 11 |
| செப்ரெம்பர் | 9 |
| ஒக்டோபர் | 11 |
| நவம்பர் | 9 |
| டிசெம்பர் | 12 |

## பசுக்கொலை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்பாணம், ஜன.3

இறைச்சிக்காகச் சட்டவிரோதமாகப் பசுக்களை வெட்டிக்கொன்ற நபர் மீதான குற்றப்பத்திரத்தைப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முன்வைக்கத் தவறியதனால் வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

புதுவருடப்பிறப்பன்று அதிகாலை யாழ். மடத்தடியில் இறைச்சிக்காக மூன்று பசுக்களைக் கொன்றதோடு மேலும் இரண்டு பசுக்களை வெட்டிக் கொல்ல முயன்றார் என்று ஒருவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தியிருக்கின்றனர். மாவட்ட நீதிபதி மா.கணேசராசா முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(ஒ-10-04)

## உலகின் மிக உயர்ந்த கோபுரம் கொழும்பில் அமைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன.3

உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள்கோபுரத்தை மிஞ்சும் வகையில் உயரமானதொரு தொலைத்தொடர்பு கோபுரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தக் கோபுரத்தில் இருந்து தூரத்திலுள்ள காட்சி களைப் பார்ப்பதற்கான ஒரு மேடை, சுழலும் உணவு விடுதி, 24 அறைகளைக் கொண்ட ஒரு ஹோட்டல்என்பனவும் இந்தக் கோபுரத்தில் அமைக்கப்பட உள்ளன.

கொழும்பில் டி.ஆர்.விஜயவர்தன மாவத்த அமைந்திருக்கும் இடத்தில் இந்தப் புதிய கட்டடம் நிறுவப்படும் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சு இப்பொழுது அமைந்துள்ள இடத்தில் 7 ஏக்கர் நிலம் இதற்காக பயன்படுத்தப்பட இருப்பதாக தொலைத்தொடர்புகள்ஒழுங்கமைப்பு அமைச்சர் அனுஷா பல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு 104 மில்லியன் அமெரிக்கடொலர் (ரூ11.9 பில்லியன்) செலவாகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. 30 மாதங்களில் முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அரசின் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தக் கோபுரம் முன்னதாக பெலியகொடையில் அமைப்பதாக தீர்மானிக்கப்பட்டிருந் தது. அதிக உல்லாசப் பயணிகளைக் கவர வேண்டும் என்பதற்காக கொழும்புக்கு மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் அடிமட்டத்தில் ஒரு மகிழ்ச்சிப் பூங்காவும், வர்த்தக நிலையமும் அமையும் என்றார் அவர். (ப)

## எத்தனை பட்டதாரிகளுக்கு வடக்கில் அரச நியமனம்?

யாழ்ப்பாணம், ஜன.3

15ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ள நிலையில், அதில் எத்தனைபேர் வடக்கு மாகாணத்தில் இருந்து இணைத்துக்கொள்ளப்படுவர் என்பதை அரசு முன்னரே தெரிவிக்க வேண்டும் என்று அரச சேவை பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

''பட்டதாரி நியமனத்தில் அரசு கூடிய கவனம் செலுத்துவதுடன் போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்துக்கு உரிய ஒதுக்கீட்டை முன்னரே அறிவிக்கவேண்டும்'' என்றார் வடக்கு அரசு சேவைப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் க.உதயராகவன். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2005இல் 40 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத்தின்போது விடுபட்ட வடமாகாண பட்டதாரிகள் 1,700 பேர் இதுவரையிலும் அரச தொழிலைப் பெறவில்லை. தற்போது 6120பேர் வடக்கில் வேலையற்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் அரசு நாடாவிய ரீதியில் 15 ஆயிரம் பட்டதாரிகளை மட்டும் சேர்ப்பதற்கே நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கு மேலாக வேலையற்று உள்ள பட்டதாரிகளுக்கு அரசு முழுமையாக வேலை வழங்குமா? இல்லாவிடில் 100 முதல் 200 பேர் வரை ஆட்சேர்ப்பு செய்துவிட்டு பட்டதாரி நியமனம் முடிந்துவிட்டது என அறிவிக்குமா? போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்களைக் கருத்தில் எடுத்து ஆண்டு மூப்பின் அடிப்படையில் வழங்க அரசு முன்வரவேண்டும்- என்றார் அவர்.

## நீதித்துறையில் விரைவில் மாற்றம்

நீதித்துறையில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய புதிய சட்டங்களும், சட்டத் திருத்தங்களும் விரைவில் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நீதித்துறை அமைச்சில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் தங்களால் இயன்றவரையான கடமைகளை சிறப்பாக செய்வதற்கு அதிகாரிகளும் ஏனைய ஊழியர்களும் முன்வர வேண்டும்.

அமைச்சினூடாகத் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொடர்புகொள்ளும் பொது மக்களோடு சிநேக பூர்வமாக நடந்து கொண்டு தாமதமின்றி அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

கடந்த ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியாதுபோன இலங்கையின் நீதித் துறையில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சில சட்டங்கள் மிக விரைவில் கொண்டுவரப்படவிருக்கின்றன. ஒன்றன் பின் ஒன்றாக அவை துரிதமாக சட்டமாக்கப்பட உள்ளன. அவற்றிற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்பொழுது நிறைவடைந்துள்ளன -என்றார்.

## நிகழ்வுகள் இன்று

### அபிவிருத்திக் கூட்டம்

வடமாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டம் பிற்பகல் 2மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கூட்டத்துக்கு வடமாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தக் கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர் [illegible] இளங்கோவனும் கலந்து கொள்வார். (ம-4)

### நடமாடும் சேவை

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் ஆஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள மருத்துவர்களால் இலவச நடமாடும் மருத்துவ சேவை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.(த-313)

### கூட்டம்

துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான நடப்பாண்டு விடயம் தொடர்பான கூட்டம் முற்பகல் 10 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.(த-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் தொழில் அலுவலகம்

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு மாவட்டத் தொழில் அலுவலகம் மீண்டும் இயங்கவுள்ளது. போர் காரணமாக மூடப்பட்ட இந்த அலுவலகம் நாளை புதன்கிழமை காலை மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு அரச அதிபர் என்.வேதநாயகன் இந்த அலுவலகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் தொழில் அலுவலகத்துடனான தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வவுனியா சென்று வருகின்றனர்.

பணம் மற்றும் நேர விரயங்களை எதிர்கொள்ளும் இவர்கள் முல்லைத்தீவில் அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் சிரமமின்றித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலும் என்று முல்லைத்தீவு செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## ஒட்டுசுட்டானில் கண்காட்சி

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் இராணுவத்தினரால் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

இந்தக் கண்காட்சியில் விவசாயம், சுகாதாரம், தாய் சேய் குடும்ப நலன் பேணல் என்பன மையப்படுத்தப்படவிருக்கின்றன.

மேலும் கண்காட்சிக்கு இடையே விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள் முக்கியமாக இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டுமென ஒட்டுசுட்டான் 64 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கப்டன் முனசிங்க தெரிவித்தார். (க-500)

# கரைச்சியின் சுகாதாரப் பிரச்சினைக்கு தீர்வு தேடும் பிரதேச சபை உபதலைவர்

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை ஆராய வேண்டுமெனக் கரைச்சிப் பிரதேச சபையின் உபதலைவர் வடிவேல் நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேசத்தில் கழிவகற்றல் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதில்லையெனப் பல தரப்புக்களாலும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அத்துடன் கடந்த ஆண்டு விசர்நாய்க்கடிக்கு இலக்காகி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி நகரமானது இரணைமடுச் சந்தியில் இருந்து பரந்தன் சந்திவரையும், டிப்போ சந்தியில் இருந்து

வரி செலுத்திய வர்த்தகர்களின் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் நகர திட்டமிடல்களுக்கு ஏற்ப கழிவகற்றப்படும்.

கனகபுரம் வரையும் என நீண்டதொரு தொடராக வணிக நிலையங்களைக் கொண்ட ஒரு நகரமாகும். இதனைவிடச்சந்தை, பொலிஸ் நிலையம், மருத்துவமனை, பஸ் நிலையம் என்பவற்றையும் கொண்டுள்ளது. இதனால் அதிக இடங்களில் கழிவுகளை அகற்ற வேண்டிய நிலையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இருந்தும் சகல இடங்களிலும் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

வர்த்தகர்கள் கழிவகற்றலுக்குரிய வரிகளைச் சரியான முறையில் செலுத்த வேண்டும். வரிகளைச் செலுத்திய வர்த்தகர்களின் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் நகரின் திட்டமிடல்களுக்கு ஏற்ப கழிவகற்றல் சீராக இடம்பெறும்.

கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் விசர் நாய்க்கடி தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# ஒழுங்கற்ற பஸ் சேவை காரணமாக வைத்தியத்துக்கும் நடக்கும் மக்கள்

அக்கராயன், ஜன.3

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு ஒழுங்கான பஸ் சேவைகள் இல்லாததால் மக்கள் நடந்து செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இதனால் மருத்துவமனைக்குச் சகல பாதைகளிலிருந்தும் பஸ்கள் வந்து செல்லும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு அக்கராயன் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மருத்துவர் நோயாளர்களைப் பார்வையிடுவதன் காரணமாகப் பெருமளவு நோயாளர்கள் வருகை தருகின்றனர்.

700 மீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கைக்குழந்தைகளுடன் நடந்து செல்வதைக் காணமுடிகிறது.

ஒரு அரச பஸ் சேவையைத் தவிர வேறு எந்த பஸ் சேவையும் மருத்துவமனைக்கு இடம்பெறாமையால் நோயாளர்கள் அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்து 700 மீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கைக்குழந்தைகளுடன் நடந்து செல்வதைக் காணமுடிகிறது.

மேலும் இந்த மருத்துவமனைக்குச் செல்ல முடியாதவாறு கோணாவில், யூனியன்குளம் பாதை துண்டிக்கப்பட்டுள்ளதெனக் கரைச் சிப் பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா சுட்டிக் காட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்தார்.

மீள்குடியமர்வு நடைபெற்ற காலம் முதல் கோணாவில், யூனியன் குளம் பகுதி மக்கள் போக்குவரத்தில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது அக்கராயன் குளம் வான்பாய்ந்ததனால் வீதியில் ஏற்பட்டுள்ள குழிகள் காரணமாக அக்கராயன் மருத்துவமனைக்குச் செல்ல முடியாத நிலையில் கோணாவில், யூனியன் குளம் அமைதிபுரம் மக்கள் உள்ளனர். (க-410)



யார்தான் உதவுவர்? முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடுவில் மக்கள் மீள்குடியமர்ந்த குடிசைகளில் ஒன்றுதான் இவ்வாறு காட்சியளிக்கிறது. (500)

## பொறியியலாளராக பதவியுயர்வு

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி பாடசாலைகள் வேலைப் பரிசோதகர் செல்லையா இரவீந்திரன் அந்தப் பிரிவுக்கான பொறியியலாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இந்தப் பதவியுயர்வு நேற்றைய தினம் 02 ஆம் திகதி முதல் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களாக பாடசாலைகள் வேலைப் பகுதியில் பரிசோதகராக இவர் கடமையாற்றியுள்ளார். (க-410-405)

## வீதிகளை புனரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.3

வன்னியில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மோசமாகச் சேதமடைந்துள்ள பிரதான வீதிகள் உட்படப் பல வீதிகளையும் புனரமைக்குமாறு கிளிநொச்சி மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வன்னியில் கடந்த வாரம் கடும் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஏற்கனவே சீரற்ற நிலையில் இருந்த பல வீதிகள் மோசமாகச் சேதமடைந்து மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு உள்ளன.

பெரும்பாலான வீதிகளின் நிலைமை இவ்வாறு மோசமான நிலையில் உள்ளமையால் கிளிநொச்சியில் பல இடங்களுக்குமான போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் ஏதிர் நோக்கப்படுகின்றன.

வீதிகளின் மோசமான நிலை காரணமாக சில இடங்களுக்கான பஸ்சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதி மக்கள் தமக்கான போக்குவரத்து வசதிகள் இன்றி பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். அன்றாட அலுவல்களுக்காக கிளிநொச்சி நகரப் பகுதிகளுக்கு பயணிக்க வேண்டிய மக்கள் பெரும் சிரமப்பட்டே தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றன. எனவே சேதமடைந்த வீதிகளை விரைவில் புனரமைக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-6)

# இரு பாடசாலைகள் திறந்து வைப்பு

அக்கராயன், ஜன.3

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த இரு பாடசாலைகள் நேற்றைய தினம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை, கிளாலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியனவே மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளாகும். மேலும் ஒரு பாடசாலையை மலையாளபுரத்தில் புதிதாக ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளாலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் புதிய அதிபராக சூ.அகஸ்தீன் நியமிக்கப்பட்டுள்ளார். இதைப் போன்று மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலைக்கு சி.விசுவாசமும், கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு திருமதி இ.ரவீந்திரநாதனும், பன்னங்கண்டி இந்து தமிழ் வித்தியாலயத்துக்கு நா.உதயகுமாரும், கட்டைக்காடு அ.த.க.பாடசாலைக்குத் திருமதி கா.பாலச்சந்திரனும், கரியாலை நாகபடுவான் இல.3 அ.த.க.பாடசாலைக்கு திருமதி அ.குலசேகரமும் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவல்களைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார். (க-410-405)

# 5 கிராம அலுவலர் பிரிவுகளில் குடியமர்வு இன்னும் இல்லை

அக்கராயன், ஜன.3

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்வு இடம்பெற வேண்டியுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கிளிநொச்சி நகரை அண்மித்த பரவிப்பாஞ்சான் கிராம அலுவலர் பிரிவிலும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் ஆனையிறவுப் பகுதியிலும் மீளக் குடியமர்வு இடம்பெற வேண்டும்.

ஆனையிறவுப் பகுதியில் 1990 இல் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் மோதல் வெடித்தபோது உப்பளத் தொழிலையே முக்கிய தொழிலாகக் கொண்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

இன்று வரை இந்த மக்கள் மீளக்குடியமர முடியவில்லை. மேலும் முகமாலைப் பகுதியில் மோதல் வெடித்தபோது இடம்பெயர்ந்த முகமாலை, இத்தாவில் வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவு மக்களும் இதுவரை மீளக்குடியமர்வு செய்யப்படவில்லை.

முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி, பரவிப்பாஞ்சான், ஆனையிறவு ஆகிய இடங்களில் இன்னும் மீள்குடியமர முடிவில்லை.

இந்தக் கிராம மக்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகக் கிளிநொச்சி அரச செயலகம் விவரம் தெரிவிக்கின்றது.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வு இடம்பெறுமெனத் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை இடம்பெறவில்லை. இதனால் இந்த மக்கள் பல ஆண்டுகளாக வெவ்வேறு இடங்களில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (க-410)

# வைகுந்த ஏகாதசிப் பெருவிழா

கிளிநொச்சி, ஜன.3

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலில் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை முதல் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை வரை இந்தப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் ஸ்ரீமத் பகவத் கீதை முற்றோதல், ஆண்டாள் நாச்சியாரின் திருப்பா ஓதல், மூலமூர்த்திக்கும் ஏனைய மூர்த்திகளுக்குமான அபிஷேக ஆராதனை, முதலாம், இரண்டாம், மூன்றாம் சாமப் பூசைகள், நாமசங்கீர்த்தனம், சமய வினா விடைப் போட்டிகள், வைகுந்த வாசல் திறத்தல், இறந்த முன்னோருக்கான பரமபத மோட்ச அர்ச்சனை, திருப்பாவை உற்சவம், ஏகாதசி விரதகாரர்களுக்கு விரத உணவு வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (க426)

# நெரிசல் மிகுந்த வீதி

அக்கராயன், ஜன.3

கிளிநொச்சி கனகபுரம் வீதி நெரிசல் மிகுந்த வீதியாக மாறியுள்ளது.

மிகக் குறுகிய பாதையில் பெருமளவு மக்கள் பயணிப்பதன் காரணமாகவே நெரிசல் நிலை காணப்படுகிறது.

பஸ், லொறி என்பன இந்த வீதியில் பயணிப்பதன் காரணமாக நடந்து செல்லும் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் அம்பாள்குளத்தில் அமைந்துள்ள சந்தைக்குப் பெருமளவு மக்கள் செல்வதன் காரணமாகவும் கனகபுரம் வீதி நெரிசலை எதிர்கொள்கின்றது.

இந்த வீதியை அகலமாக்குவதன் மூலம் இந்த வீதியின் நெரிசலைக் குறைக்க முடியும்.

கிளிநொச்சி மேற்குப் பகுதியின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த வீதியாக இந்த வீதி உருவெடுத்துள்ளது. (க-410)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலவச உதவிகள் எவற்றையும் பாடசாலைகள் பெறத் தடை!

## ஆளுநர் கடும் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.3

பாடசாலைகளிலுள்ள பதிவு செய்யப்படாத அபிவிருத்திச் சங்கங்கள் யாவும் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

பாடசாலைகளுக்கு கிடைக்கும் இல வச உதவிகள், அன்பளிப்பு கள் எதுவாக இருந்தாலும் அதிகாரிகளின் அனுமதியின்றி அதிபர்கள் எவரும் அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

இதை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக் கப்படும் என்று வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் உத்தரவுக்கமைய வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், சகல பாடசாலை அதிபர்கள், வட மாகாண பண்பட்டலுவல்கள் , மற்றும் விளையாட்டுத்துறைத் திணைக்களப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளார்.

வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் சிபார்சு இல்லாது பிற முகவர்களிடம் எதுவித முன்மொழிவுகளோ, வேண்டுகோள்களோ விடுக் கக்கூடாது. உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள், தனி நபர்கள் குழுக்கள், நண்பர்கள் என்று எவருட னும் தொடர்பு கொண்டு செயற்படுத்தவோ, நேரடியாக அவர்களிடமிருந்து உதவிகள், அன்ப ளிப்புகள் பெறுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தொடர்பு கொண்டு உதவி பெறுவதாயின் அதிகாரிகளுக்கு அறிவிக்கப் படல் வேண்டும். கல்வித் திணைக்களங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் இயங்கும் பதிவு செய்யப் படாத அபிவிருத்திச் சங் கங்கள் யாவும் உடனடியாகப் பதிவு செய்யப்படல் வேண்டும். பதிவு செய்யப் படாத அபிவிருத்திச் சங்கங்கள் எவையும் எதிர் காலத்தில் செயற்பட முடியாது.

பாடசாலைகளுக்கான இலவச உதவிகள், உபகரணங்கள், தளபாடங்கள், பயிற்சிகள் என எதுவாக இருந்தாலும் அவை ஏற்றுக்கொள்ளப்படலா காது.

உதவி பெறுவதாக இருந்தால் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரது அனுமதி பெறப்படல் வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# சாரதி அனுமதிப் பரீட்சைக்கு கடந்த ஆண்டு 19,500 பேர்

யாழ்ப்பாணம் , ஜன.3

கடந்த ஆண்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினூடாக யாழ். மாவட்டத்தில் 19 ஆயிரத்து 500 பேர் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை எழுதியுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து டிசெம்பர் மாத இறுதி வரையில் 19 ஆயிரத்து 500 பேர் சாரதி அனுமதிப் பத்திர பரீட்சை எழுதியுள்ளனர். இதில் சகல வகையான வாகனங்களுக்குமான பரீட்சைகள் எழுதியுள்ளவர்களும் அடங்குவர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 14 ஆயிரம் பேர் வரையிலேயே சாரதி அனுமதிப் பத்திர பரீட்சை எழுதியுள்ளனர். ஆனால் 2011 ஆம் ஆண்டு அது 5 ஆயிரத்து 500 பேரால் அதிகரித்துள்ளது.

இதற்கான காரணம் தொடர்பில் கேட்டபோது பொலிஸார் சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பில் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றுவதாலும், 49 சி.சி. ரக வாகனங்களுக்கும் இப்போது சாரதி அனுமதி பத்திரம் அவசியம் என்பதாலும் திடீரென இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-15)




கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வருடாந்தக் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கைதடி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண கணக்காய்வு அலுவலருமாகிய வே.தயாளன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம- 288)

# 2011 இல் விபத்துக்களில் 61 பேர் சாவு

யாழ்ப்பாணம் , ஜன.3

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டை விட மூன்று மடங்கால் அதிகரித்துள்ளது எனவும் 2011 இல் 61 பேர் விபத்துக்களால் மரணமானார்கள் எனவும் யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு முழுவதும் இடம் பெற்ற வீதி விபத்துக்களில் 61 பேர் மரணமாகியுள்ளனர். 2010 ஆம் ஆண்டில் வீதி விபத்துகளால் 21 பேரே மரணமானார்கள். இது கடந்த ஆண்டு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

வீதி விபத்துக்களால் ஜனவரி மாதம் 6 பேரும், பெப்ரவரி மாதம் 3 பேரும், மார்ச் மாதம் 5 பேரும், ஏப்ரல் மாதம் 5 பேரும் மே மாதம் 4 பேரும், ஜூன் மாதம் 4 பேரும், ஜூலை மாதம் 6 பேரும், ஓகஸ்ட் மாதம் 5 பேரும், செப்ரெம்பர் மாதம் 5 பேரும், ஒக்ரோபர் மாதம் 5 பேரும் நவம்பர் மாதம் 6 பேரும், டிசெம்பர் மாதம் 7 பேரும் மரணமாகியுள்ளனர்.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த ஆண்டே வீதி விபத்துக்களினால் அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இதற்கு முன்னர் 2005 ஆம் ஆண்டு 30 பேர் உயிரிழந்ததே இதுவரை காலமும் அதிக பட்ச உயிரிழப்பாக இருந்து வந்தது. வாகனப் பாவனைகளின் பெருக்கமும், மது போதையில் வாகனம் செலுத்துதல், கட்டுப்பாடற்ற வாகன வேகம் என்பவற்றாலேயே அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-15)

# வாழைக்குலை உற்பத்தி வலி. கிழக்கில் வீழ்ச்சி

வலி- கிழக்கில் வழைக்குலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. சீரற்ற காலநிலையால் யாழ் மாவட்டத்தின் முக்கிய உற்பத்தியான வழைக்குலை உற்பத்தி வலி கிழக்கு கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் கணிசமான வீழ்ச்சி கண்டுள்ளது.

இக்காலப் பகுதியில் விவசாயிகள் தமது தோட்டங்களை மீள் சீர்ப்படுத்தி பாத்திகளை அமைத்து வருகின்றனர்.

உற்பத்தி பாதிப்பு காரணமாக வழைப்பழங்களின் விலையும் கணிசமான அதிகரிப்பை கண்டுள்ளது. இதேவேளை, தைப்பொங்கல் பண்டிகை நெருங்கும்போது மேலும் விலை அதிகரிப்பு ஏற்படலாம் என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது. (ம-ரி)

# இந்திய வீட்டுத் திட்ட அனுமதி மாநகர சபை வழங்கவில்லை

## மாநகர முதல்வர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் , ஜன.3

யாழ்ப்பாணம் மகேந்திரபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டத்துக்கான அனுமதி எதையும் யாழ். மாநகர சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்று மாநகர சபைக் கலந்துரையாடலில் முதல்வர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கட்டடங்கள், ரவர்கள் அமைப்பது தொடர்பான விவாதம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. இதன் போது மேற்படி விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது. ரவர்கள் அமைப்பது குறித்து மாநகர சபையிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவை பெறப்படவில்லை. நகரின் எந்தப் பகுதியிலும் கட்டடம் அமைப்பது, ரவர் அமைப்பது போன்றவற்றுக்கு மாநகர சபையின் அனுமதி முறைப்படி பெற்றிருக்க வேண்டும் .

தற்சமயம் இடம்பெற்று வரும் இந்திய வீட்டுத் திட்டங்களுக்கான அனுமதியை பிரதேச செயலகங்கள் பெற்றிருக்க வேண்டும்.

கரையோர பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி வழங்காமையால் இந்திய வீட்டுத்திடத்தின் பயனாளிகள் 16 பேர் மகேந்திரபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குடும்பங்களுக்கு மகேந்திரபுரம் கிராமத்தில் வீடுகள் கட்ட பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளது. மாநகர சபை இதற்கு அனுமதி வழங்க கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி தேவை.

மாநகர சபை கரையோர பாதுகாப்பு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-7)

# 50 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.03

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இவர் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் குறித்த நபருக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை, உடுத்துறை பகுதியில் சட்ட விரோதமாகச் சாராயம் விற்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பிறிதொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார். இவரும் நேற்று நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

# 12 வருடங்களின் பின்னர் அறிவூட்டல்





தென்மராட்சி, ஜன.3

எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம் பன்னிரெண்டு வருடங்களின் பின்னர் நேற்று ஆரம்பிக்கப் பட்டது.

பாடசாலையில் இணைவதற்கு வந்த பெருமளவு மாணவர்களையும் பெற்றோர்களையும் அதிபர் வே.சடாச்சரம் வரவேற்று மாணவர்களின் பதிவுகளை மேற்கொண்டார்.

2000 ஆம் ஆண்டு இடம் பெற்ற போரின் போது மூடப்பட்ட இந்தப் பாடசாலை அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்பட்டதையடுத்து நேற்று மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது.

போர் வேளையில் பாடசாலைக் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்ததால் [illegible] தொகுதி வலயக் கல்வி அலுவலகத்தால் அமைக்கப் பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், எழுதுமட்டுவாழ் தெற்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் [illegible]லைநாதன் [illegible] கலந்துகொண் டனர். (ம-207)

# வீதியைக் கடந்தபோது ஏற்பட்டது விபத்து

தென்மராட்சி, ஜன.3

வீதியைக் கடக்க முயன்ற மாணவியை ஏ-9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் இருவரும் காயமடைந் தனர்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இந் தச் சம்பவத்தில் கிளிநொச்சிப் பகுதி வர்த்தகரான யாழ்ப்பாணம் கொட்டடி, சோலைபுரத்தைச் சேர்ந்த தில்லைபதி தயாகரன் (வயது-22), பளை முல்லையடியைச் சேர்ந்த பளை மத்திய கல்லூரி மாணவி வீ.நிதர்சினி (வயது- 15) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

சுயநினைவிழந்த நிலையில் பளை மாவட்ட வைத்தியசாலை அன்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டு தி.தயாகரன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மாணவி பாடசாலை முடிந்து வெளியே வந்து வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் அவலப்பட்ட அவசர நோயாளர்கள்

**சத்தியப் பிரமாணம் செய்து கடமைகளைத் தொடங்கிய போதும் நோயாளர் விடயத்தில் முதல்நாளே தளம்பல்....**

யாழ்ப்பாணம், ஜன.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்தியப் பிரமாணம் மற்றும் கலந்துரையாடலில் வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் கலந்து கொண்டதால் அவசர நோயாளர் உட்பட வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்களும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அரச சுற்று நிருபத்துக்கமைய சத்தியப் பிரமாணம் மற்றும் கலந்துரையாடலில் வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் பங்குபற்றியதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடல் முடிவதற்குள் பெரும் எண்ணிக்கையானோர் வெளிநோயாளர் பிரிவுகளில் நிறைந்ததால் குறிப்பிட்ட அளவு நோயாளர்களுக்கு மட்டும் பரிசோதனைத் துண்டு கொடுக்கப்பட்டது.

ஏனையோரைப் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வருமாறு வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றியவர் தெரிவித்ததாக நோயாளர்கள் கவலையுடன் கூறினர்.

இந்த நிகழ்வால் காலதாமதம் ஏற்பட்ட போதும் வெளிநோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை.

வெளிநோயாளர் பிரிவு வழமையாக மூடப்படும் நேரத்துக்கே மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நோயாளர்கள் பலர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (ம)

## மோட்டார் சைக்கிள் தீப்பற்றியதில் பரபரப்பு

தென்மராட்சி, ஜன.3

கைதடி எரிபொருள் நிலையத்தில் மோட்டார் சைக்கிள் தீப்பிடித்ததில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த கால் ஊனமுற்றவர் அதனை நிறுத்த முற்பட்ட வேளையில் திடீரென சரிந்து தீப்பற்றிக் கொண்டது.

அருகில் வாகனம் ஒன்றுக்கு பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்ததால் அங்கு நின்றவர்கள் தீப்பற்றிய மோட்டார் சைக்கிளை தூரத்துக்கு இழுத்துச் சென்றனர். எரிபொருள் நிலையத்தில் ஏற்படவிருந்த பெரும் ஆபத்தைத் தவிர்த்து விட்டனர்.

முதலுதவிச் சாதனம் மூலம் தீ அணைக்கப்பட்ட போதிலும் மோட்டார் சைக்கிளின் பின்பகுதி முற்றாக எரிந்து சேதமடைந்தது. (ம- 207)

## சத்தியப் பிரமாணத்துடன் கடமைகள் பொறுப்பேற்பு

தென்மராட்சி, ஜன.3

யாழ்.குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நேற்றுத் தேசியக் கொடியின் முன்பாக நின்று சத்தியப் பிரமாணம் செய்து தமது கடமைகளைத் தொடங்கினர்.

புதிய வருடம் பிறந்து நேற்று முதல் நாள் கடமைகளை தொடங்கிய போது அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அந்தந்தத் திணைக்களத் தலைவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் சத்தியப் பிரமாணம் செய்து இந்த வருடம் தம்மால் செய்யக் கூடிய அனைத்து பணிகளையும் பொது மக்களுக்கு செய்வோமென உறுதி எடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து உத்தியோகத்தர்களும் இந்த வருடம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக கலந்துரையாடல்களும் திணைக்களத் தலைவர்களால் நடத்தப்பட்டன.

அரச அலுவலகங்களுக்குத் தேவைகளுக்காக வந்த பொதுமக்களும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (ம- 207)

## சாவகச்சேரி நகரசபை செயலாளர் புத்திசிகாமணி

தென்மராட்சி, ஜன.3

சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக சுப்பிரமணியம் புத்திசிகாமணி நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய இவர் மாகாண உள்ளூராட்சி அமைச்சால் சாவகச்சேரி நகர சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக கடமையாற்றிய கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் இலங்கை நிர்வாக சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நேற்று தொடக்கம் கொழும்புக்கு பயிற்சிக்கு சென்றுள்ளார்.

இதனையடுத்து சு.புத்திசிகாமணி நகர சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம- 207)

## ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 848 பேர் சிகிச்சை பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜன.3

கடந்த வருடம் சராசரியாக நாளொன்றுக்கு 468 பேர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 305 பேர் வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைத் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலை, நான்கு ஆதார வைத்தியசாலைகள், 22 பிரதேச வைத்தியசாலைகள் என்பவற்றில் இருந்து இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 129 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 16 ஆயிரத்து 979 பேரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 7 ஆயிரத்து 201 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 9 ஆயிரத்து 822 பேரும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 2 ஆயிரத்து 963 பேரும் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் 3 ஆயிரத்து 80 பேரும் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் 778 பேரும் அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் 242 பேரும், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 738 பேரும், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 455 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 619 பேரும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 47 பேரும், நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் 167 பேரும், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 391 பேரும், வேலணை பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 627 பேரும் சிகிச்சை பெற்றனர்.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் 497 பேரும், அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 13 பேரும், குருநகர் பிரதேச வைத்தியசாலையில் 10 பேரும், கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 87 பேரும், கொடிகாமம் பிரதேச வைத்திய சாலையில் 979 பேரும், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 24 பேருமாக மொத்தமாக ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 848 பேரும் சிகிச்சைகளுக்காக கடந்த வருடம் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-15)



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உடுவில் கோட்ட பாடசாலைகளில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்படுகின்றனர்.

## வேலணை சுகாதாரப் பிரிவு தனியாகப் பிரிந்து கொண்டது

யாழ்ப்பாணம், ஜன.3

வேலணை பிரதேசத்துக்கென தனியான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒன்று புதுவருட தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வேலணை அரசினர் வைத்தியசாலையில் உள்ள விடுதி ஒன்றில் இந்த வைத்திய அதிகாரி பணிமனை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனைக்கெனத் தனியான கட்டடம் ஒன்றும் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஊர்காவற்றுறை பிரதேச வைத்திய அதிகாரியின் கீழ் வேலணை பிரதேச செயலகம் இதுவரை செயற்பட்டு வந்தது.

புதுவருடம் தொடக்கம் அவை இரண்டாகப் பிரிக்கப்பட்டு தனித் தனியான பிரதேச வைத்திய அதிகாரிகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (ம- 26)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான மீள்குடியேற்றக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் நல்லூர் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (த-7)

## குற்றச்செய்தி

யாழ்ப்பாணம், ஜன.3

டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழலைக் கொண்டிருந்த திருநெல்வேலிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறம்பொல தலைமையிலான பொலிஸ் குழுவினர் நல்லூர் பகுதிக்கான பொதுச் சுகாதார பரிசோதகர் க.மதனகுமாருடன்இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது மூன்று வர்த்தக நிலையங்களில் உரிமையாளர்களும் மாட்டிக் கொண்டனர்.

வர்த்தக நிலையங்களுக்குப் பின்புறமுள்ள பகுதிகளில் சிரட்டைகள், ரயர், ரியூப்புக்கள், புற்கள், பியர் ரின்கள் அகற்றப்படாமல் டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான சூழலை கொண்டிருந்தன. நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டத்தின் பிரகாரமே கோப்பாய் பொலிஸாரால் இந்த வழக்குத் தொடரப்பட்டது.

டெங்கு நோய் பரவலுக்கு சாதகமான சூழலை கொண்டிருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று கோப்பாய் பொலிஸாரால் தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (ம-14)

## கசிப்பு ஒழிப்பு வாரம்

யாழ்ப்பாணம், ஜன.3

அனைத்துலக சமூக சேவைகள் நற்பணி, பொதுப் பணி தலைமைச் செயலகமும் எம்.ஜி.ஆர் பேரவையும், இணைந்து கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி வரையான காலப் பகுதியை கசிப்பு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளன.

அனைத்துலக சமூக சேவை கள் நற்பணி பொதுப் பணி தலைமைச் செயலகம் மற்றும் அனைத்து எம்.ஜி.ஆர் பேரவைகளின் உறுப்பினர்களும் இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் வீடுகளுக்குச் சென்று கசிப்பால் ஏற்படும் சீர்கேடுகள் தொடர்பாக விளக்கமளித்து வருகின்றனர். (ம- 23)

## நடமாடும் வைத்திய சேவைக்கு ஆஸ்திரேலியக் குழு வந்தது

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.குடாநாட்டில் நடமாடும் வைத்திய சேவையை மேற்கொள்வதற்கென ஆஸ்திரேலியாவில் இருந்து முப்பது பேர் கொண்ட மருத்துவக் குழு ஒன்று இங்கு வருகை தந்துள்ளது.

இந்த மருத்துவக் குழுவினர் தீவுப் பகுதி மற்றும் குடாநாட்டின் சில் பிரதேசங்களுக்கும் சென்று இலவச நடமாடும் மருத்துவ முகாமை நடத்தவுள்ளனர் என்று சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் நேற்று நயினாதீவு வைத்திய சாலைக்குச் சென்று அங்கு நடமாடும் மருத்துவ முகாமை நடத்தினர். இன்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு வைத்தியசாலைக்கும் இந்த மருத்துவக் குழு சென்று அங்கு சேவை வழங்கவுள்ளதாகக் கூறப்பட்டது.

நாளை புதன்கிழமை வடமராட்சி கிழக்குக்குச் செல்லும் இந்த முப்பது பேர் அடங்கிய மருத்துவக் குழுவினர் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் சேவை வழங்கவுள்ளனர்.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இதன் மூலம் பெரும் பயனடைய முடியும் உன்று தெரிவிக்கப்படுகிறது. (ம- 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் 5,000 ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கை

**உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பால் மரமுந்திரிகை விலை அதிகரித்துள்ளது.**

காத்தான்குடி, ஜன. 3

கிழக்கு மாகாணத்தில் 5,000 ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சிறுபயிர் உற்பத்தி அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுவருவதாக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாண முகாமையாளர் ரி.டி.நிதர்சன் தெரிவித்தார்.

இந்த மாகாணத்தில் 1,000 ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. தற்போதைய சமாதான சூழலில் கரையோரப் பிரதேசங்களில் அதிகமான இடங்களில் மரமுந்திரிகையை செய்கை பண்ணுவதற்காக எமது அமைச்சு மானிய அடிப்படையில் உரம் மற்றும் மரமுந்திரிகைக் கன்றுகளையும் வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, செங்கலடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகமான இடங்களில் மரமுந்திரிகைச் செய்கை பண்ணப்படுகின்றன.

இலங்கையில் அதிகளவில் மரமுந்திரிகை பயிரிடப்படுகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகை விதைகளின் விலை உயர்ந்துள்ளது. ஒருகிலோ மரமுந்திரிகை விதை 1,000 ரூபா முதல் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது 2,200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த மாவட்டத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையே இந்த விலை அதிகரிப்புக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# அரச பொது ஊழியர் சங்கம் அரசியல் கட்சியாக மாற்றம்

மண்டூர், ஜன.3

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கமானது தற்போது பெயர் மாற்றம் பெற்று அகில இலங்கை மக்கள் ஜயநாயகக்கட்சியாகச் செயற்படுவதாக அக்கட்சியின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இது தொட்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க மானது வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்பேசும் மக்களுக்காக எப்பொழுதும் குரல் கொடுத்து வந்த கட்சியாகும். இக்கட்சியானது இம்மாகாணங்களில் வாழும் மக்களுக்குப் பிரச்சினைகள், இடர் பாடுகள் ஏற்படும் போதெல்லாம் அவர்களது பிரச்சினைகளை உரியவர்களுக்கு அறிவித்து அதற்கான தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்த கட்சியாகும்.

10 வருடங்களுக்கும் மேலாக இந்தப் பெயருடன் இயங்கிவந்த இக்கட்சியானது தற்போது ஊழியர்களுக்கு மாத்திரம் இதனது சேவை கிடைப்பதாக மக்கள் கருதியதன் காரணத்தால் இக்கட்சியின் அதியுயர் பீடம் அண்மையில் கூடி இக்கட்சியின் பெயரை அகில இலங்கை மக்கள் ஜயநாயகக் கட்சியாக பெயர் மாற்றம் செய்துள்ளது.

இனிவரும் காலங்களில் எமது கட்சியானது ஏழை மக்களின் கலை, கலாசாரங்களையும் அவர்களினது அடிப்படைப் பிரச்சினைகளையும் எடுத்துக்கூறி, அதற்கான முடிவுகளையும்' பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைக்கும் - என்றார். (ச)

# பாடசாலையில் திருட்டு: இளைஞர்கள் கைது

கம்பளை, ஜன.3

கம்பளை, கஹட்டபிட்டிய பகுதியில் இயங்கிவரும் தமிழ்மொழிமூல பாடசாலை ஒன்று உடைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் களஞ்சிய அறையின் கதவை உடைத்து சுமார் 45 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட கற்றல் உபகரணங்கள் சூறையாடப்பட்டுள்ளன. திருடர்கள் இந்தக் களஞ்சிய அறையின் சகல அலுமாரிகளையும் உடைத்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி அறையும் அலுமாரிகளும் உடைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் கம்பளை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூன்று இளைஞர்களைக் கைதுசெய்துள்ளனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரனைகள் மூலம் பற்றைக் காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதிக் கற்றல் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.



கலாபூஷண விருதுபெற்ற மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதன் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

# அக்கரைப்பற்றின் கல்வி அரசியலால் பாதிப்பு

## ஹனிபா மதனி கண்டித்து அறிக்கை

அக்கரைப்பற்று, ஜன.3

அக்கரைப்பற்று அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகள் காரணமாக மாறுபட்ட சூழலுக்கு மாற்றம் பெற்றுள்ளது என்று அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எல்.எம். ஹனிபா மதனி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

அக்கரைப்பற்றுப் பிரதேசம் கடந்த காலங்களில் கல்வியில் கொடிகட்டிப் பறந்தது. வருடா வருடம் இங்குள்ள பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான, பொறியியல், வைத்திய பீடங்களுக்குத் தெரிவாகினர். ஆனால், அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகள் கல்விக் களஞ்சியமாக இருந்த இம்மண்ணை மாறுபட்ட சூழலுக்கு மாற்றிவிட்டன. தற்போது அக்கரைப்பற்றில் வைத்திய, பொறியியல் பீடங்களுக்கு மாணவர்கள் தெரிவாவது எட்டாக் கனியாகிவிடுமோ என்று அச்சப்படும் நிலை யொன்று தோன்றியுள்ளது - என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# 110 ஆசிரியர்களுக்கு கல்முனைக்கு இடமாற்றம்

மூதூர், ஜன. 3

வெளி வலயங்களில் இரு வருட ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிந்த 110 ஆசிரியர்களையும் மீண்டும் கல்முனை வலயத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு கல்முனை வலயத்தில் மேலதிகமாகவிருந்த ஆசிரியர்களை அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பட்டிருப்பு, திருக்கோயில், மட்டக்களப்பு மத்தி ஆகிய வலயங்களில் இரண்டு வருடங்கள் கடமையாற்றுமாறு கோரி இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இவர்களை கடந்த முதலாம் திகதி முதல் மீண்டும் கல்முனை வலயத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையினால் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்ட யோசனையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் வாரியம் கடந்த முதலாம் திகதி முதல் ஆசிரியர்களைக் கல்முனை வலயத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

# தோட்ட அலுவலகம் தீக்கிரை

பதுளை, ஜன.3

பதுளை, லுணுகல ஹொப்டன் பெருந் தோட்ட அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை தீக்கிரையாகியுள்ளது. திடீரெனப் பரவிய இந்தத் தீ காரணமாகத் தோட்ட அலுவலகம் முற்றாக எரிந்துள்ளது.

இதனால் அங்கு பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்த பல முக்கியமான ஆவணங்கள் அழிந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது ஒரு நாசகா ரச் செயலாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# ஆசாமி சிக்கினார்

கம்பளை, ஜன.3

கம்பளை நகரில் நீண்ட காலம் இயங்கி வந்ததாகக் கருதப்படும் நடமாடும் போலிக் கச்சேரி ஒன்றை நடத்திவந்த நபரொருவரை கம்பளைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவரிடம் இருந்து 17 போலிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், விவாகப் பதிவுப் பத்திரங்கள், மற்றும் பொலிஸ் கடிதத் தலைப்புகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆவணங்கள் கம்பளைப் பகுதி இளைஞர் மற்றும் யுவதிகளுக்குப் பல்வேறு தேவைகளின் நிமித்தம் விநியோகிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச்சந்தேகநபர் கண்டி நகரில் இருந்து கம்பளைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். இந்தச் சந்தேகநபர் கம்பளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# டெங்கை ஒழிக்க ஒத்துழையுங்கள்

மண்டூர், ஜன. 3

கிழக்கில் பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நோய் பரவுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் இருப்பதாகவும் இதனைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் இதுவரையும் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை.

டெங்குநோய் பரவும் இடங்களை இனம் கண்டு அழிப்பதன் மூலம் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

இதற்கு இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புகளும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பார்வையிடுவதன் மூலம் மக்களை இந்தநோயில் இருந்து பாதுகாக்கலாம்- என்றார். (ச)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வீடு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

அம்பாறை,ஜன.3

அம்பாறை - மருதமுனை பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 178 குடும்பங்களுக்கு மேட்டுவட்டை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை வழங்குமாறு கோரி கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னால் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 178 குடும்பங்களுக்கு 7 வருடங்களாகியும் குடியிருப்புக்கள் வழங்கப்படவில்லை.

7 வருடங்களாக குடியிருப்பு இன்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் தமக்கு அமைக்கப்பட்ட வீடுகளை உடனடியாக பெற்றுத் தருமாறு கோரி கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னால் மக்கள் கூடி எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

இதனையடுத்து பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல், மக்கள் பிரச்சினை தொடர்பில் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இரு வாரங்களுக்குள் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

அரச அதிபரின் இந்த உறுதிமொழியைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ச)

# காத்தான்குடியில் 35 டெங்கு நோயாளர்கள்

மட்டக்களப்பு,ஜன.3

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் மாதத்தில் 35 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி . யு.எல். நசிர்தீன் தெரித்தார்.

காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த வாரம் மட்டும் 16 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியமை கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் மிகவும் பிரபலமான நிறுவனம் ஒன்றுக்குப் பாதுகாப்பு மேற்பார்வையாளர் (Security Supervisor) தேவை

பின்வரும் தகைமை உடையோர் நேரில் வரவும்

**கல்வி** : O/L or A/L

**வயது** : 50 - 60

பொலிஸ், இராணுவ சேவையில் கடமையாற்றியோர் விரும்பத்தக்கது.

பல்வேறு நிறுவனங்களின் தேவைக்கமைய பாதுகாப்பு அலுவலர்களை ஒழுங்கமைத்து வழங்கக்கூடிய முன் அனுபவம் / ஆளுமை


மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

முகாமையாளர்,
"உதயன்"
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே. 021 5677602

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 06 . 04 . 1962



மறைவு 04 . 12 . 2011

திருமதி

### கந்தையாபிள்ளை சிவமலர்

எமக்காகச் சிரித்து எமக்காக அழுது
எமக்காய் வாழ்ந்து உறவுகளை அணைத்து
உத்தமியாய் வாழ்ந்து தெய்வத்திடம்
சங்கமமான எம் அன்புத் தாயே
எம் உயிர் உள்ளவரை உம் நினைவுகள் நீங்காது

எமது தாய் நோயுற்று இருந்தவேளையில் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதி இலக்கம் 26 இல் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர் மற்றும் தாதிமார் சிற்றூழியர்கள் அனைவருக்கும், எங்கள் தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.01.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"திருமனை"
நடுத்தெரு,காரைநகர்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா மயில்வாகனம்



வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும், நியூஸிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா மயில்வாகனம் 01.01.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மயில்வாகனம் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி, இராமசாமி, இராசையா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநீலசோதி (பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர், திருகோணமலை, தற்போது கனடா), லட்சுமிசோதி (வவுனியா), வனிதாமணி (பருத்தித்துறை), மங்களேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஆனந்தலேகா மற்றும் நிர்மலா (நியூஸிலாந்து), தேவராணி (லண்டன்), காலஞ்சென்ற கல்பனா மற்றும் நாகரஞ்சனி (தாதிய உத்தியோகத்தர், திருகோணமலை பொது வைத்தியசாலை, தற்போது லண்டன்), வாமதேவா, கமலறூபி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயம் சபாபதி (உதவிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு வலயம்), காலஞ்சென்ற தவராசா மற்றும் வெற்றிவேலாயுதம் (பருத்தித்துறை), கணேசலிங்கம் (கனடா), மகேந்திரன் (இயந்திரவியலாளர், பருத்தித்துறை), பாலராஜ் (நியூஸிலாந்து), ஜானக கேவா விதாரண (லண்டன்), மதிவண்ணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சியாமளா, சர்மிளா, றஜீவன், சத்தியா, கிருஷ்ணா, அமுதா, றதீபா, மயூரன், வினோச்குமார், பிரதீபன், மணிமாறன், ஸ்ரீபிரசாந், சுகன்யா, தர்சிகா, மயூரி, பிருந்தன், சங்கவி, பிரவீன், அஜனி, அபிஷ் ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ரமேஸ், றமணன், சுகிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் சுரேன், றேனோஜா ஆகியோரின் பாசமிகு பூட்டப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| தேவராணி | 00447435716531 | திருநீலசோதி | 0016473485019 |
| நாகரஞ்சனி | 00447466519267 | பாலராஜ் | 006498132422 |
| மங்களேஸ்வரி | 0014165514047 | | |

தகவல்:
குடும்பத்தினர்.

## 24 மணித்தியாலங்களில் 200 வாகன விபத்துகள்!

புதுவருட தினமான நேற்றுமுன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்றுக்காலை 6 மணிவரையான காலப்பகுதியில் நாட்டின் பல பாகங்களிலும் 200 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதில் 5 பேர் பலியாகியுள்ளனர்.124 பேர் காயமடைந்துள்ளதுடன்,வீதி விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 213 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் விபத்துகள் விவரம் வருமாறு -

வீதி விபத்து - 5, கொழும்பு - 3, கம்பஹா - 1, மாத்தளை - 1, கடும் காயங்களை ஏற்படுத்திய வாகன விபத்து - 29, கொழும்பு - 5, மட்டக்களப்பு - 3, இரத்தினபுரி - 3, பாணந்துறை - 4, ஏனைய மாவட்டங்களில் - 14, சிறிய காயங்களை ஏற்படுத்திய வாகன விபத்து - 95, கண்டி - 19, நுகேகொட - 11, களனி - 7, காங்கேசன்துறை - 6, கல்கிஸை - 6, எல்பிட்டிய - 5, ஏனைய பிரதேசங்கள் - 41.

சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்திய வாகன விபத்துகள் - 71

கொழும்பு - 18, நுகேகொட - 10, களனி - 9, தங்கல்ல - 5, ஏனைய பிரதேசங்கள் - 29.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளுக்கு எதிராக 119 வழக்குகளும் அதிக வேகத்தில் வாகனம் செலுத்திய சாரதிகளுக்கு எதிராக 94 வழக்குகளும் குறித்த காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கலால் வரித் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் கீழ் 191 சுற்றிவளைப்புகளும் போதைப் பொருள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 56 சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-சி)

### லாவ் காஸ் விலை உயரலாம்

கொழும்பு, ஜன.03

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு லாவ் காஸ் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துவருவதாகவும் விலை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம் கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 200 ரூபாவால் அதிகரிக்க லாவ் காஸ் நிறுவனம் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கடந்த மாதம் அனுமதி கோரியதாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

சனிக்கிழமை நடைபெற இருக்கும்
முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப் பரீட்சைக்கான
விசேட கருத்தரங்கு
செவ்வாய் (இன்று) 1 மணி 5 மணிவரை
புதன் (நாளை) 9 மணி 2 மணி வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்)
தொடர்பு: 0754164564

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம்பிள்ளை மகேசன் கனகசபை

கொழும்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம்பிள்ளை மகேசன் கனகசபை 29.12.2011 இல் காலமானார்.

அன்னார் கானகசபை முதலியாரின் (மானிப்பாய்) மகனும் பத்மினியின் கணவரும் ஷயமீறா, ஷயனுதா, றமோஷன் ஆகியோரின் தந்தையும் குகதாசன், சிவகாந்தன் (Skansco Trading co.), கங்கா ஆகியோரின் மாமனும் அர்சதா, றிஷ்மிதா, சஷ்விதா, கிறிஷத், கிறவித், பிரயோத், பிரடிஷ்த்ரா, றிஷ்வித்திக், றிஷேத் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (A.F.Raymonds Borella இல்) நேற்று 02.01.2012 திங்கட்கிழமை பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.சிவகாந்தன்.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக விரிவுரையாளர் ஜெ.பிரதீபன் அவர்களின் அன்பு மாமன்

### கந்தையா தம்பிராஜா

அவர்கள் 31.12.2011 அன்று சிவபதமடைந்தமையை அறிந்து ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல் தொழில்நுட் பத்துறை விரிவுரையாளர்கள்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்.

## A/L சித்தியடைந்து விட்டீர்கள்தானே?

லண்டன் பல்கலைக்கழகம் ஒன்றில் எவ்வித ஆங்கிலப் பரீட்சையுமின்றிக் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

**உடனடி அனுமதி**

விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதி:
புதன் 04.01.2012 பி.ப. 4.30 மணி

விசா வியளம் விளம்பும் பிரிவு



**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

021 221 9016
021 4914527
www.thisaikaddi.lk
thisaikaddi@sltnet.lk

(யாழ்.நகரில் இருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா சின்னத்தங்கம்

(போட்டர் மாமி)



மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சின்னத்தங்கம் நேற்று (02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*அம்மன் வீதி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

சின்னத்துரை
குடும்பத்தினர்.

### சாந்தலிங்கம் சண்முகநாதன்

(முன்னாள் உரிமையாளர், எஸ்.எஸ்.நாதன் - மணியம் ஸ்ரோர்ஸ், பராசக்தி ருபாக்கோ சென்ரர், இமதுவ, வட்டயமுல்லை)



வேலணை கிழக்கு, சிவநிலையத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் சண்முகநாதன் (01.01.2012 ) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கன்னிகாபரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுசா, ஜெனா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சற்குருநாதன் மற்றும் அம்பிகாதேவி, சிவநாதன், சரசலாதேவி (லதா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திவாகரனின் அன்பு மாமனும் மகேந்திரன், இராஜலிங்கம், ஜெயகௌரி, தவராஜேஸ்வரன், சற்குணம், சிவநேசன், சிவகுமார், சிவகௌரி, ஸ்ரீகௌரி, காலஞ்சென்ற சுபகௌரி ஆகியோரின் அருமை மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் சிவப்பிரியா, கஜன், மாதினி, சற்குருராஜ், சாகித்தியன் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் சிவானுசன், சிவானுஷா, சிவதனுசன், அபிசேக், ஆகாஸ், ஆதி, கவின் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பராசக்தி, கந்தையா, சிவபாக்கியம், இராசம்மா, நல்லதம்பி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம், அன்னலெட்சுமி, செல்லத்துரை, அன்னம்மா ஆகியோரின் அன்புப் பெறாமகனும் தியாவின் அருமைப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று(02.01.2012) திங்கட்கிழமையும் இன்று (03.01.2012) செவ்வாய்க்கிழமையும் மு.ப. 9 மணிமுதல் பி.ப 6 மணிவரை கல்கிசையில் உள்ள மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (04.01.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிமுதல் நண்பகல் 12 மணிக்குள் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் இரட்டைப் பாய்ச்சல்

## ஏவுகணை, அணுமின் எரிபொருள் : வெற்றிகரமாகப் பரிசோதனை



அணுஉலைகளைப் பார்வையிடும் ஈரானிய அதிபர் அஹமட் நிஜாத்



சீறிப்பாய்கிறது ஈரான் ஏவுகணை

தெஹ்ரான்,ஜன.3

அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும், யுரேனியம் அடங்கிய எரிபொருள் உருளைகளை தயாரித்து, வெற்றிகரமாகப் பரிசோதித்து விட்டதாகவும், அத்துடன் வானில் உள்ள இலக்கை தரையிலிருந்து தாக்கும், குறுகிய தூர ஏவுகணையையும் பரிசோதித்துள்ளதாக, ஈரான் அதிரடியாக அறிவித்துள்ளது. இதனால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் கடும் கோபத்தில் ஆழ்ந்துள்ளன.

ஈரான், தனது சுய தேவைகளுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவதாக கூறி வருகிறது. எனினும் அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், அணு குண்டு தயாரிப்பதற்காகவே. ஈரான் தனது அணுசக்தியைப் பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டி வருகின்றன. அதனால், ஈரான் அணுமின் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்துக்கு அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் தடை விதித்துள்ளன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனம் ஐ.ஆர்.என்.ஏ. - 'வானில் உள்ள இலக்கை தரையில் இருந்து தாக்கும் குறுகிய தூர ஏவுகணை ஒன்று, வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது' என்று தெரிவித்தது.

இந்த ஏவுகணை சோதனைக்குப்பின் ஈரானின் கடற்படைத் தளபதி மவுசாவி கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்த ஏவுகணை, நவீன தொழில்நுட்பத்துடன் கூடியது. அத்தோடு, ராடாரின் கண்காணிப்பில் சிக்காத இலக்குகளையும், தாக்கக் கூடிய வல்லமை படைத்தது" என்றார்.

மேலும், ஈரானுக்குள் வடிவமைக்கப்பட்ட, நவீன தொழில்நுட்பத்தோடு கூடிய ஏவுகணை ஒன்று பரிசோதிக்கப்பட்டது இதுவே, முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏவுகணைப் பரிசோதனை மற்றும்
அணுமின் நிலையங்களுக்கான
எரிபொருள் ஆகிய இரண்டையுமே
தற்போது, ஈரான் தனது சொந்த
தொழில்நுட்பத்தில் தயாரித்துள்ள
விடயம் அமெரிக்கா மற்றும் மேற்குலக
நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதேவேளை, நேற்று ஈரான் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்ட மற்றொரு செய்தியில், ஈரான் அணுமின் நிலையங்களில் மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும், யுரேனியம் அடங்கிய எரிபொருள் உருளைகள் மற்றும் கம்பிகள் என்பன தயாரிக்கப்பட்டு, வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உருளைகள், கம்பிகள் என்பன தெஹ்ரான் ஆய்வு அணு உலையில் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து, "ஈரானால், அணு எரிபொருளைத் தயாரிக்க முடியாது என, கொக்கரித்த மேற்குலக நாடுகள், இந்த தயாரிப்பால், நிச்சயம் திகைத்து விடும்" என ஈரானிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பொதுவாக, அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் கம்பிகளில், குறைவாக செறிவூட்டப்பட்ட யுரேனியம் தான் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும். ஆனால் அணு குண்டு உள்ளிட்ட அணு ஆயுதங்கள் தயாரிக்க, அதிகளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் தேவைஎன்பது குறிப்பிடத்தக்கது.

குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைப் பரிசோதனை மற்றும் அணுமின் நிலையங்களுக்கான எரிபொருள் ஆகிய இரண்டையுமே தற்போது, ஈரான் தனது சொந்த தொழில்நுட்பத்தில் தயாரித்துள்ள விடயம் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதன் காரணமாக, ஈரான் மீது அமெரிக்கா மேலும் பல பொருளாதாரத் தடைகளை, நேற்று விதித்துள்ளது.

(ங)

# கர்நாடகத்தில் பாக். கொடி கண்டித்து பஸ் மீது தாக்கு

ஹைதராபாத், ஜன.3

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் அரச அலுவலகம் ஒன்றில் பாகிஸ்தான் நாட்டுக் கொடியை மர்ம நபர்கள் ஏற்றினர். இதைக் கண்டித்து பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன.

வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

கர்நாடகாவில் சிந்தகி நகரில் புத்தாண்டுக் கொண்டாட்டம் களைகட்டி இருந்தது. இரவிரவாக பலபகுதிகளில் கேளிக்கை நிகழ்வுகள் நிடைபெற்றுக் கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் அங்குள்ள அரச அலுவலகத்துக்குள் புகுந்த மர்ம நபர்கள் சிலர், அங்கிருந்த கொடிக் கம்பத்தில் பாகிஸ்தான் கொடியை ஏற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலையில் அந்த வழியாக சென்றவர்கள் அரச அலுவலகத்தில் பாகிஸ்தான் கொடி பறப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இந்தத் தகவல் நகரம் முழுவதும் பரவியதால் பெரும் பதற்றம் உண்டானது.

ஆவேசமடைந்த மக்கள் அரச அலுவலகத்துக்கு வந்தனர். இதற்கிடையே பொலிஸாரும், அரசு அதிகாரிகளும் விரைந்து வந்து பாகிஸ்தான் கொடியை கம்பத்தில் இருந்து இறக்கினர்.

எனினும் பாகிஸ்தான் கொடியை ஏற்றிய மர்ம நபர்களைக் கைது செய்ய வலியுறுத்தி, பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அந்த வழியாக வந்த பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன. இதில், 2 பஸ்களின் கண்ணாடிகள் உடைந்தன. போராட்டக்காரர்களை சமாதானப்படுத்த முயன்ற அரச அதிகாரிகள் சிலரும், பொலிஸாரும் ஆர்ப்பாட்டக் கார்களால் தாக்கப்பட்டனர்.

இதையடுத்து, பொலிஸார் தடியடி நடத்தி வன்முறையில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்தனர். பாகிஸ்தான் கொடி ஏற்றப்பட்டதை கண்டித்து சிந்தகி நகரில் கடையடைப்பு போராட்டமும் நடைபெற்றுள்ளது.

# 'கொலைவெறி'க்கு முதலிடம்

2011 ஆம் ஆண்டில் உலக மக்களை அதிகம் கவர்ந்த பாடலாக தென்னிந்தியத் தமிழ் நடிகர் தனுஷ் எழுதி, பாடிய "வை திஸ் கொலைவெறி?" பாடல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் முன்னணி ஊடகமான சி.என்.என் நடத்திய கருத்துக் கணிப்பிலேயே 'கொலைவெறி' பாடல் உலகின் ஏனைய மொழிப்பாடல்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் சி.என்.என் நிறுவனம் உலகளவில் அதிகம் விரும்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக தனது வாசகர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி விருது வழங்கி வருகின்றது. அந்தக் கருத்துக் கணிப்பில் பாடல்களுக்கான பிரிவில் உலகின் எல்லா மொழிகளிலும் பிரபலமான பாடல்கள் போட்டியில் குதித்தன.ஆனால் அவையெல்லாம், சென்ற வருடம் தமிழில் வெளியாகி பட்டி தொட்டியெங்கும் பட்டையைக் கிளப்பிய 'வை திஸ் கொலை வெறி' பாடல் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது. இதனால் நடிகர் தனுஷும் அவரது மனைவி ஐஸ்வர்யா மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். (ங)






3 பட அறிமுக விழாவில் தனுஷ், ஐஸ்வர்யா, அமலாபால்

# சிரிய கண்காணிப்பு முடிவுக்கு வரட்டும்

சிரியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு அரபு லீக் கோரிக்கை விடுத்துள்ளது.

அரபு லீக்கின் சமாதான திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதனை கண்காணிப்பதற்காக சுமார் அறுபது கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்குள் பிரவேசித்தது முதல் இதுவரையில் சுமார் 150 பேர் வன்முறைகளினால் உயிரிழந்துள்ளனர். அரபு லீக்கினால் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாமையினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சிரியாவில் தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெற்று வருவதனால் கண்காணிப்பாளர்களை உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென அரபுலீக் தெரிவித்துள்ளது. இதன்படி, சிரியாவின் முக்கிய நகரங்களில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வந்த அரபு லீக் கண்காணிப்பாளர்கள் சிரியாவை விட்டு வெளியேறவுள்ளனர்.

சிரிய அரசு அப்பாவி பொதுமக்களை கொன்றொழித்து வருவதாக அரேபிய நாடாளுமன்றப் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த பத்து மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல்களில் 5000த்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதேவேளை, ஆயுதக் கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் இரண்டாயிரம் சிரிய இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக ஜனாதிபதி பஷர் அல் அசாட் தெரிவித்துள்ளார்.(ங)



சிரியாவில் தொடரும் வன்முறை

# பெற்றோல் விலை உயர்வை எதிர்த்து மக்கள் போராட்டம்

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் எரிபொருள்விலையை அந்நாட்டு அரசு திடீரென இரு மடங்காக உயர்த்தியதால், மக்கள் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

எண்ணெய்வளம் தேவையான அளவுக்கு நைஜீரியாவில் உள்ளபோதும், அது மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்துவிட்டு, சுத்திரிகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்துவருகின்றது. இந்த நிலையில் பெற்றோலிய இறக்குமதிக்காக வழங்கப்பட்டு வந்த மானியத்தை நைஜீரிய அரசு புது வருடத்தில் இருந்து நிறுத்தியுள்ளது. இதனால் அங்கு எரிபொருள்களின் விலை சடுதியாக உயர்ந்துள்ளது.0.40 அமெரிக்க டொலர்களாக இருந்த பெற்றோலின் விலை இப்போது 0.86 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

எரிபொருள் உயர்வால் மக்களின் அன்றாடப் பணிகள் முடங்கியுள்ளன. அத்தோடு தமது கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் மக்கள் போராட்டங்களிலும் இறங்கியுள்ளனர்.


(ங)

# ஆயிரம் பேருக்கு எய்ட்ஸ் பரப்பிய அமெரிக்கர்

நியூயோர்க், ஜன.3

அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர், ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு எய்ட்ஸ் நோயைப் பரப்பியுள்ளார். இந்த விவகாரத்தால் ஒட்டு மொத்த அமெரிக்காவும் அதிர்ச்சியில் உறைந்து போயுள் ளது.





அமெரிக்காவை சேர்ந்தவர் டேவிட் டீன்ஸ்மித். அண்மைக் காலமாக சந்தேகப்படும்படியாக இவருடைய நடவடிக் கைகள் இருந்ததால், அமெரிக்கப் பொலிஸார் டேவிட் டைக் கைது செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

அப்போது, இதுவரை ஆண்கள், பெண்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு எய்ட்ஸ் நோயைப் பரப்பி யிருக்கிறேன் என்று டேவிட் கூறியதை கேட்டு பொலிஸார் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து அமெரிக்கப் பொலிஸார் கூறியதாவது:

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட டேவிட், பல ஆண்டுகளாக ஆண்கள், பெண்கள் என 3,000க்கும் அதிகமானவர்களுடன் பாதுகாப்பற்ற உறவு வைத்திருந்தார் என்று கூறியுள்ளார்.

ஆனால், எப்போது எச்ஐவி பரிசோதனை செய்தார், எப்போது நோயை உறுதி செய்தார் என்ற விவரங்கள் தெரியவில்லை. எய்ட்ஸ் பாதிப்பு இருப்பது தெரிந்தும், அதை மற்றவர்களுக்கு பரப்ப வேண்டும் என்ற உள் நோக்கத்துடனேயே மற்றவர்களுடன் பாதுகாப்பற்ற உறவு வைத்து கொண்டதாக டேவிட் கூறியுள்ளார்.

இதனால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை. எனினும், ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

டேவிட் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது- என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீது மேலும் பல தடைகள் பாகிஸ்தானுக்கான நிதி குறைப்பு

வாஷிங்டன்,ஜன.3

ஈரான் மீது மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடிய மற்றும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் நிதியுதவியை குறைக்கக் கூடிய பாதுகாப்பு பிரேரணையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

ஹவாய் தீவில் ஓய்வு பெற்று வரும் ஜனாதிபதி ஒபாமா இந்த பிரேரணையில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டார்.

ஈரான் தனது தொலைதூரம் சென்று தாக்கும் ஏவுகணைப் பரிசோதனையை நிறுத்தி வைப்பதாகவும், அணுசக்தி தொடர்பான பேச்சுக்குத் தயார் எனவும் அறிக்கை வெளியிட்டதற்கு சில மணி நேரங்கள் கழித்து ஒபாமா இந்தப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளார்.



புத்தாண்டுப் பரிசாக பாதுகாப்புப் பிரேரணையில் அமெரிக்க அதிபர் ஒபாமா கைச்சாத்து.

இதையடுத்து பிரேரணை சட்டமாகியுள்ளது.

அதேநேரம் குவான்டனாமோ சிறையில் உள்ள வெளிநாட்டுக் கைதிகளை விசாரணைக்காக அமெரிக்காவிற்கோ அல்லது உடல் நலம் காரணமாக அவரவரின் நாடுகளுக்கோ அனுப்ப வைப்பதில் இந்தச் சட்டம் சில கெடுபிடிகளை வலியுறுத்தியுள்ளது.

உலகளவில் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டுள்ள இந்நிலையில் ஈரான் மீதான தற்போதைய தடைகள் எண்ணெய் வர்த்தகத்தில் மேலும் பல நெருக்கடிகளை ஏற்படுத்தும் எனவும், கைதிகள் பரிமாற்றத்தில் செய்யப்பட்டுள்ள கெடுபிடிகள் தேவையில்லை எனவும் ஒபாமா அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது உரையில், இந்தப் பிரேரணையில் நான் கையெழுத்திட்டேன் என்பதற்காக இதன் எல்லா அம்சங்களையும் ஏற்றுக் கொண்டேன் என்பது அர்த்தமல்ல- என்றார்.

ஆனால் பாகிஸ்தானுக்கான நிதியுதவி நிறுத்தப்பட்டது குறித்து அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. எனினும் பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் நாட்டு வெடிகுண்டுகள் மூலமாக ஆப்கனில் தீவிரவாதிகள் நடத்தும் தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் பலியாகி வருகின்றனர்.

அதனால் நாட்டு வெடிகுண்டு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கை களில் பாகிஸ்தான் முழு மூச் சுடன் ஈடுபட்டால் ஒழிய இந்தத் தடை நீக்கப்படுவ தற்கு வாய்ப்பில்லை- என்றார். (ந)

# ஆர்ஜென்டீனா நாட்டில் ஆளுநர் சுட்டுக்கொலை

ஆர்ஜென்டீனாவில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்ற மாகாண ஆளுநர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

லத்தீன் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவின் ரியோநெக்ரோ மாகாணத்தின் ஆளுநரான கார் லோஸ் சோரியா(61) நேற்று முன்தினம் தனது மனைவியுடன் புத்தாண்டைக் கொண்டாட ஜெனரல்ரூக்கா நகரில் உள்ள தனது வீட்டுக்கு முக்கிய நண்பர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

சம்பவதினம் இரவு அவரது படுக்கையறையிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்கவே அறையில் சென்று பார்த்தபோது அவர் தலையில் குண்டுகாயங்களுடன் பிணமாகக் கிடந்தார். இது குறித்து காவல்துறை அதிகாரிகள் கார்லோஸ் சோரியாவின் மனைவி சுஸானாபெர்ரிடோஸிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட ஆளுநர் கார்லோஸ்சோரியா ஆளும் பெர்னோஸிட் தேசிய கட்சி சார்பில் கடந்த ஆண்டு (2011) டிசெம்பர் 10ஆம் திகதி தான் ரியோநெக்ரோக மாகாண ஆளுநராகப் பதவியேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# புத்தாண்டு தினத்திலும் ரஷ்யாவில் போராட்டம்

### பலர் கைதுசெய்யப்பட்டு விடுவிப்பு

மொஸ்கோ, ஜன.3

ரஷ்யாவில் புத்தாண்டின்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுதந்திரமாகக் கூடுவதற்கான உரிமை வேண்டி, தேசிய போல்ஷ்விக் கட்சியின் சார்பில் நூற்றுக்கணக்கான மக்கள் டிரையம்ஃபால்நயா சதுக்கத்தில் கடந்த சனிக்கிழமை இரவு கூடினர். இவர்களில் பெரும்பாலானோர் பத்திரிகையாளர்கள்.

போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த இக் கட்சியின் தலைவர் எட்வர்ட் லிம்னோவ் போராட்ட இடத்தை அடையும் முன்பாகவே கைது செய்யப்பட்டார்.

மேலும் 60-க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்களும் கைதுசெய்யப்பட் டனர். அனுமதியின்றி கூடியதாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இருந்த போதிலும் கைதுசெய்யப் பட்ட அனைவரும் நள்ளிரவுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர். புத்தாண்டுக் கொண்டாட்டம் ரஷ்யாவில் வழமையாகவே கோலாகலமாகக் கொண்டாடப்படும். இதே வேளை பிரதமர் புதினும் புத்தாண்டு தினத்தன்று தொலைக்காட்சியில் உரை நிகழ்த்தினார்.

அதன்போது அரசியல் பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினருக்கும் புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்த அவர், நடைபெறும் போராட்டங்கள் அரசியலுக்காக நடத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிந்து, அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாதது என்றும் அவர் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்தார். (ந)

# பட்டாசு வெடித்து 200 பேர் காயம்

மணிலா,ஜன.3

பிலிப்பைன்ஸில் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட சக்திவாய்ந்த பட்டாசுகள் வெடித்து, 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 205 பேர் படுகாயமடைந்தனர்.

உலகம் முழுவதும் நேற்று முன்தினம் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கோலாகலமாகக் கொண்டாடிய வேளை பிலிப்பைன்ஸில் அரசின் எச்சரிக்கையையும் மீறி சட்ட விரோதமாகச் சக்திவாய்ந்த பட்டாசுகளை வெடித்தும், துப்பாக்கி குண்டுகள் முழங்கவும் விபரீதமாகக் கொண்டாடினர். அதனால், அங்கு இந்த விபத்து ஏறபட்டுள்ளது.

அதிக சத்தம் எழுப்பும் பட்டாசுகள் வெடித்த விபத்துகளில் 197 பேரும், குண்டடிபட்டு 8 பேரும் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள். வெடி விபத்து குறித்த விழிப்புணர்வு மற்றும் அரசின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் நடந்த இந்த விபத்தால் படுகாயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (ந)

# சுமத்ராவில் நில நடுக்கம்

இந்தோனேஷியாவின் வடபகுதியில் உள்ள சுமத்ரா தீவில் நேற்று அதிகாலை 5.3 என்ற ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுமத்ரா தீவின் தென்மேற் கில் 160 கிலோமீற்றர் தொலைவில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் கடற்கரையை ஒட்டியுள்ள கட்டடங்கள் குலுங்கின. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

## ஓராண்டு நினைவலைகள்



மண்ணுலகில் 31.12.1948

விண்ணுலகில் 16.12.2010

திதி:- மார்கழி பூர்வபட்சதசமி

## அமரர் முருகேசு செல்லையா

(ஓய்வு பெற்ற அதிபர் யா / இளையதம்பி இந்து வித்தியாலயம்)

பாரினில் எம்மைப் பரிதவிக்கவிட்டு சிவனடி சேர்ந்து
ஆண்டு ஒன்று ஆனதே ஆறவில்லை எம் துயரம்
தன் மானமும் தனித்துவமுமே தாரக மந்திரம் என வாழ்ந்து
தரணியில் நாம் தன்நிறைவுடன் வாழ தளம் அமைத்துத் தந்தீர்கள் அப்பா!
நீங்கள் வாழ்ந்த காலமும் நீங்காத உங்கள் நினைவுகளும்
எம்மை விட்டுஒருபோதும் நீங்காது அப்பா!
தங்கள் ஆத்மா இன்பச் சிவனடியில் இருந்து சுகம் பெற
நெஞ்சகம் நயந்து அஞ்சலி செய்கின்றோம்.

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்

- மனைவி, பிள்ளைகள்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள்,பேட்டுக் குஞ்சுகள் 05.01.2012 வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு: 1. நல்லூர் பாம் சென்ரர், 19 முடிவேர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், அம்பாள் குளம், கிளிநொச்சி. 0776225944

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்

மலர்வு 27.10.1961

உதிர்வு 05.01.2001

திதி: தசமி 03.01.2012

அன்புப் பிள்ளையே குஞ்சே தெய்வமே
எங்கள் உயிர் உள்ள வரைக்கும்
உமது நினைவிருக்கும்.

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு.
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## என்றும் நீங்காத நினைவுகளுடன்

6 ஆம் ஆண்டு நினைவு



மண்ணில் 17.01.1923

விண்ணில் 29.12.2006

அமரர் சின்னத்துரை நவரத்தினம்

[பிரபல வைத்தியர், கோப்பாய் மத்தி]

திதி: தசமி [03.01.2012]

9 ஆம் ஆண்டு நினைவு



மண்ணில் 19.08.1925

விண்ணில் 30.12.2002

அமரர் மங்கையர்க்கரசி நவரத்தினம்

திதி : துவாதசி [21.12.2011]

மூவிரண்டு ஆண்டுகள் சென்றால் என்ன!
மும்மூன்று ஆண்டுகள் சென்றால் என்ன!
உற்றோர்கள், கற்றோர்கள், மற்றோர்கள்
போற்றிப் புகழ்மாலை சூடியவர்களே!
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எங்களை விட்டு அகலாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

V.T.S லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

(12436)(6,8,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாடசாலை பஸ் விபத்து குழந்தைகள் 8 பேர் சாவு

## ஹரியானாவில் அவலம்

அம்பாலா, ஜன.3

ஹரியானா மாநிலத்தில் உள்ள அம்பாலா- யமுனா நகர் வீதியில் பாடசாலை பஸ் விபத்துக்குள்ளானதால் சாரதி உட்பட குழந்தைகள் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், குழந்தைகள்15 பேர் படுகாயமடைந்து அருகில்உள்ளமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகவே மருத்துவர்கள் தெரிவித் துள்ளனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

நேற்றுக் காலை ஹரியானா வில் உள்ள அம்பாலா நகரில் இருந்து, குழந்தைகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற பாடசாலை பஸ் அம்பாலாவில் இருந்து யமுனா நகர் செல்லும் வீதியில் கடுமையான விபத்துகுள்ளானதால், சம்பவ இடத்திலேயே சாரதி உட்பட 8 குழந்தைகள் உயிரிழந்தனர்.

மேலும், படுகாயமடைந்த 15 குழந்தைகளை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து இருப்பதாகவும், இவர்களில் பலர் கவலைக் கிடமாக இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. (வ)

# மீனவர்கள் மீண்டும் கடலுக்கு

இராமநாதபுரம், ஜன.3

இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 6 நாள்களுக்கு பின்னர், நேற்று மீண்டும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். 'தானே' புயலின் அச்சுறுத்தல் காரணமாக, ராமேஸ்வரம், பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சில தினங்களாக மீன்பிடிக்கச் செல்லவில்லை. புயலுக்குப் பின்னர், தற்போது கடலில் இயல்பு நிலை திரும்பி இருப்பதால், மீனவர்களுக்கு நேற்று மீன்பிடி அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

இதனிடையே, கூடங்குளம் அணுமின் நிலையம், முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பான போராட்டம் காரணமாக, கடந்த 3 மாதங்களாக கடலுக்குச் செல்லாமல் இருந்த, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களும் நேற்று மீண்டும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். (வ)

# பேரிடர் பாதித்த பகுதியாக புதுவையை அறிவிக்கவும்

## மத்திய அரசுக்கு வலியுறுத்தல்

புதுச்சேரி, ஜன. 3

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை பேரிடர் பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று புதுச்சேரி நகர தலைவர்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் கோ. அ.ஜெகன்நாதன் வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதுச்சேரி மாநிலத்தையும் மக்களையும் புரட்டிப் போட்ட 'தானே' கோரப் புயலின் பாதிப்புக்கு மத்திய அரசு ரூ.3 ஆயிரம் கோடி நிதி வழங்க வேண்டும். புதுச்சேரி மாநிலத்தை பேரிடர் பாதித்த பகுதியாக அறிவித்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 30 ஆம் திகதி அதிகாலை புதுச்சேரி- கடலூர் இடையே 'தானே' புயல் கரையைக் கடந்தது. அதன்போது புதுச்சேரியில் வரலாறு காணாத சேதத்தை ஏற்படுத்தியது. மேலும் கிராமப் பகுதிகளை முழுவதுமாக உருக்குலைத்துள்ளது. இதுபோன்ற புயலை எதிர்கொள்ள பயிற்சியும், வழிகாட்டுதலும் இல்லாத காரணத்தால் புயலின்போது மீட்பு நடவடிக்கையில் அரசுத்துறைகள் ஈடுபடாதது மக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பேரிடருக்கு மத்திய அரசிடமிருந்து, மத்திய அமைச்சர் நாராயணசாமி ரூ.3 ஆயிரம் கோடி பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும், மாநில முதல்வர் மத்திய அர்சிடம் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரியைச் பேரிடர் பாதித்த பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மத்திய 'பட்ஜெட்' தாக்கல் தீர்மானிக்கப்படவில்லை

இந்தியாவில் ஐந்து மாநில சட்டசபை தேர்தலுக்கு பின்னர் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப் படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்திய மாநிலங்களான உத்தர பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், கோவா, உத்தர்கண்ட் ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

இதன் காரணமாக மத்திய 'பட்ஜெட்' தாக்கல் தாமதம் ஆகுமா? என்ற ஊடகங்களின் கேள்விக்கு மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, மத்திய பட்ஜெட்டை எப்போது தாக்கல் செய்வது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனினும்5 மாநில சட்டசபைத் தேர்தல் முடிந்த பின்னர் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப் படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன - என்றார்.

# மாணவருக்கு விற்கவிருந்த ஹெரோயின் சிக்கியது

தூத்துக்குடி, ஜன.3

கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படவிருந்த, 50 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் பறிமுதல் செய்யப் பட்டது.

இது தொடர்பாக, பாலிடெக்னிக் மாணவர் உட்பட, 4 பேர் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடியில் போதைப்பொருள் விற்கப்படுவதாக, எஸ்.பி., ராஜேந்திரனுக்குத் தகவல் கிடைத்தது. அவரது உத்தரவுப்படி, தனிப் படைப் பொலிஸார் அது குறித்து ரகசிய விசாரணை நடத்தினர்.

காமராஜ் கல்லூரி பின்புறம் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற, தூத்துக்குடி அந்தோணி மைக்கேல் இன்னாசி, சந்திர போஸ்,(வயது 51), யாசர் அராபத், விஜய்கரன்,(வயது 21), பாலி டெக்னிக் கல்லூரி மாணவர் மதன்,(வயது 19), ஆகியோரைப் பிடித்துச் சோதனை செய்தனர். அவர்களிடமிருந்து, ஹெரோயின்' அரைக் கிலோ பறிமுதல் செய்யப் பட்டது. இதன் சர்வதேச மதிப்பு, 50 லட்சம் ரூபா . விசாரணையில், இந்த ஹெரோயினை அந்தோணி மைக்கேல் இன்னாசி, மர்ம நபரிடம் இருந்து வாங்கி, இங்குள்ள கல்லூரி மாணவர்களுக்கு விநியோகம் செய்யவும், இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கு கடத்திச் செல்லவும் திட்டமிட்டு, அவர் ஏனைய மூவருடன் இணைந்து பரிமாற்றத்தில் ஈடு பட்டது தெரியவந்தது.

இதையடுத்து, அந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்களி டமிருந்து, 2 மோட்டார் சைக்கிள், 4 கைத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. (வ)



சென்னை விமான நிலையத்தில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டிலை சுற்றுலாத்துறை அமைச்சர் கோகுல இந்திரா மலர்ச் செண்டு அளித்து வரவேற்றார். (வ)

# இந்திய பங்குச் சந்தைகளில் நேரடி முதலீட்டுக்கு வெளிநாட்டவருக்கும் அனுமதி

## மத்திய அரசு அதிரடி!

இந்தியப் பங்குச் சந்தைகளில் வெளிநாட்டினரும் நேரடியாக முதலீடு செய்து பங்குகளை வாங்கலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளைச் சேர்ந்த தனி நபர்க்ள், அறக்கட்டளைகள், ஓய்வூதிய நிதியைக் கையாளும் நிறுவனங்கள் இந்திய பங்குச் சந்தைகளில் முதலீடு செய்யலாம்.

இதன்மூலம் இந்தியப் பங்குச் சந்தைகளில் டொலர்களின் முதலீடு அதிகரிக்கும். டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வரும் நிலையில், டொலர்களை அதிகளவில் ஈர்த்தால், ரூபாயின் மதிப்பு சரிவதையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்று மத்திய அரசு கருதுகிறது.

ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார சிக்கல்களால், அந்த நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் முதலீடு செய்யப் பட்டுள்ள அன்னிய நிதியை முதலீட்டாளர்கள் திரும்ப எடுத்து வருகின்றனர். அதை டொலர்களில் முடக்கி வருகின் றனர்.

இந்த நிலையில், அன்னிய முதலீடுகளை அதிகரிக்கவும், இந்தியாவுக்குள் டொலர்கள் வருவதை அதிகரிக்கவும் பங்குச் சந்தைகளை வெளிநாட்டவருக்கும் திறந்து விட்டுள்ளது மத்திய அரசு. (வ)

# முல்லைப்பெரியாறு அணைக்கு நிலநடுக்கத்தால் பாதிப்பு இல்லை

டில்லி, ஜன.3

முல்லைப்பெரியாறு அணைக்கு நிலந டுக்கத்தால் ஒரு பாதிப்பும் ஏற்படாது என்று நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் 5பேர் கொண்ட உயர் மட்டக் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. அந்தக் குழு பல்வேறு நிபுணர்களின் ஆய்வறிக்கைகள் மற்றும் நேரடி ஆய்வு முடிவுகளை வைத்து விசாரித்து வருகிறது.

முல்லைப் பெரியாறு அணை நில நடுக்கத்தால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கேரள அரசு முறைப்பாடு கூறியதைத் தொடர்ந்து

**முல்லைப்பெரியாறு அணைக்கு நிலநடுக்க அச்சம் நீங்கியது. நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்தது.**

அண்மையில் தத்தே, மேத்தா ஆகிய நிபுணர்களைக் கொண்ட குழுவை இந்த ஐவர் குழு அணைக்கு நேரடியாக அனுப்பி ஆய்வு செய்தது. அப்போது தமக்கு ஏற்றவாறு நடக்குமாறு குழுவினரை கேரளத் தரப்பு வலியுறுத்தியது. ஆனால் அதை நிபுணர் குழு நிராகரித்து விட்டது. இதனால் கடும் வாக்குவாதம் நடைபெற்றது.

இந்தநிலையில் நேற்று ஐவர் குழு கூடியது. அப்போது குழு உறுப்பினர்களுடன் தமிழக, கேரள சட்டத்தரணிகளும் முன்னிலையாகினர். அப்போது தத்தே, மேத்தா ஆகியோர் அடங்கிய நிபுணர் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் தாம் அண்மையில் அணைக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தியது குறித்த விவரங்களையும், முடிவுகளையும் இரு நிபுணர்களும் தெரிவித்திருந்தனர். அதில், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நிலநடுக்கம் மிகவும் சிறிய அளவிலேயே ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால், அணைக்கு நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்று கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

# பீஹாரில் நக்சல்கள் மீது துப்பாக்கிச் சூடு - 3 பேர் சாவு

பீஹார் மாநிலம் ரோகடாஸ் மாவட்டத்தில் சிறப்பு பொலிஸ் படையினருக்கும் நக்சல்களுக்கும் இடையே நடந்த மோதலில் நக்சல்கள் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இது குறித்து மாவட்ட பொலிஸ் அதிகாரி கூறியதாவது:

## அதிகரிக்கும் நக்சல்கள்

பீஹார் மாநிலம் ரோகடாஸ் மாவட்டம் மடிய …வோன் கிராமத்தில் சிறப்பு பொலிஸ் படையினரின் ஒரு பிரிவினரும், மத்திய பொலிஸின் கோப்ரா பட்டாலியன் பிரிவினரும்இணைந்து சோதனை நடத்தியுள்ளனர்.

இந்தச் சோதனையின் போது நக்சல்கள் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இதையடுத்து பொலிஸார் தரப்பில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் 3 நக்சல்கள் பலியானதாக தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் பலியான நக்சல்களின் உடல்கள் மாவட்டத் தலைமையகத்துக்குக் கொண்டு வரப் பட்டுள்ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கா கோலா யாழில் ஆங்கிலத்தை மேம்படுத்துகிறது



கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிடெட் தனது புதிய நீடித்து நிலைத்திருக்கும் முன்னெடுப்பின் கீழ் யாழ்ப்பாணத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கான திறனைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துவதன் மூலம் இலங்கை வாழ் சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை தரமுயர்த்தும் பணியைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிட்டெட்டால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டம் கல்வியமைச்சின் ஒத்துழைப்புடனும் கென்றிட்ஜ் ஆதரவுடனும் நடத்தப்பட்டது.

30 வருட உள்நாட்டு பிரச்சினைகளிலிருந்து மீண்டு வரும் இலங்கை வடமாகாணத்தில் போரால் ஏற்பட்ட வடுக்களை புறம்தள்ளிவிட முடியாது. குறிப்பாக கல்வி கற்பிக்கும் ஆற்றல் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய திறமை பெற்ற ஆசிரியர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு அங்கு நிலவுகின்றது. ஏராளமான ஆசிரியர்கள் இந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறியுள்ளமையால் ஆங்கில அறிவு பெற்ற ஆசிரியர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிடெட் இந்த மாகாணத்தில் தற்போதிருக்கும் ஆங்கில ஆசிரியர்களின் திறமையை அபிவிருத்தி செய்து பயிற்சியளிக்க கல்வியமைச்சுக்கு ஆதரவளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதை நன்குணர்ந்துள்ளது. உலகம் முழுவதும் பரந்திருக்கும் சகல சமூகங்களுக்கிடையேயும் இணை மொழியாக ஆங்கிலம் இருந்து வருகின்றது. வழமை நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களும் நாட்டின் கல்வித் தராதர மட்டத்தை அடைய உதவி செய்ய வேண்டியது அவசியமாகும். பயிற்சிகளை வழக்கும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண் இந்தப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தை கற்பிப்பதில் உள்ள புதிய, நடைமுறைச் சாத்தியமான முறைகளையே கற்பிக்கும். கல்வியமைச்சைச் சேர்ந்த ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பணிப்பாளர் கே.எல்.பிரேமச்சந்திர, சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் மொழிகள் பீடத் தலைவரும் பீடாதிபதியுமான டாக்டர் திருமதி சீ.எணல்.அமரசேகர மற்றும் மனிதவள முகாமைத்துவ உத்தியாளர் ஜானக குமாரசிங்க ஆகியோர் விரிவுரைகளையும் நிகழ்ச்சித் தொடர்களையும் நடத்தினர்.

கொக்கா கோலா நிறுவனத்தின் தென்மேற்கு ஆசியா பொது விவகாரங்கள் மற்றும் தொடர்பாடல்களுக்கான முகாமையாளர் ரோஹித்த அமரபால இது பற்றிக் குறிப்பிடும் போது, ''யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கில ஆசிரியர்களின் திறமையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் அவசியத்தை நாம் ஏற்றுக் கொள்வதுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கு கல்வி அமைச்சுக்கு ஆதவை வழங்க வேண்டிய தேவையையும் நன்குணர்ந்துள்ளோம். பொறுப்புணர்வு மிக்க கம்பனியென்ற வகையில் நாம் சேவை செய்யும் சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ச்சியாக உயர்த்தும் நடவடிக்கைகளுக்கு எம்மை முழுமையாக ஒப்படைத்துள்ளோம். வெற்றிகரமாக இயங்கும் வர்த்தகமொன்று அங்கீகாரம் மற்றும் நம்பிக்கை இரண்டிலுமே தங்கியிருக்கிறது. அத்துடன் சமூகத்தின் செல்வச் செழிப்பை உறுதிப்படுத்தும் பணியும் இப்போது ஆரம்பமாகியுள்ளது. தனித்துவமான இரண்டு திணைக்களங்கள் நவீனத்துவமாகும் போதே வர்த்தகமும் சமூகமும் தழைத்தோங்க முடியும். இந்த இரண்டு துறைகளும் உடனடி அனுகூலங்கள் கிடைப்பதை உறுதிசெய்ய இப்போது வழிபிறந்துள்ளது. அரசும் ஏனைய கல்வி மற்றும் தொழில் நிபுணத்துவ நிறுவனங்களும் நாட்டில் ஆங்கில மொழியின் தரத்த உயர்த்த ஒன்றிணைந்து வேலை செய்ய இப்போது இணைந்துள்ளன. இது தேசிய குறிக்கோளுக்கு எமது ஆதரவை வழங்க வேண்டி யது அவசியம் என நாம் கருதுகின்றோம்என்று குறிப்பிட்டார்.

இலங்கையர் சமூகத்தில் வாழும் மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையை வழங்குவதென்ற கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிட்டெட்டின் நீண்டகால அர்ப்பணிப்புக்கு ஆதரவு வழங்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் வடமாகாணத்தைச் சேர்ந்த 50 ஆசிரியர்களும் ஆங்கில மொழி கற்பித்தலில் காணப்படும் அதி சிறந்த புதிய முறைமைகள் கற்பிக்கப்பட்டன. (த-7)

### கொமர்ஷல் வங்கியின் 24 மணி நேர சேவை நிலையம்

கொமர்ஷல் வங்கி இலங்கையில் அதன் முதலாவது 24 மணிநேர வங்கிச்சேவை நிலையத்தை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் திறந்துவைத்துள்ளது. விமான நிலையத்தினூடாகப் பயணம் மேற்கொள்பவர்களுக்கும் நாட்டுக்குள் வருகை தரும் பயணிகளுக்கும், பிரதேசவாசிகளுக்கும் இரவு, பகல்முழுநேரவங்கிச்சேவையை வழங்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இது கொமர்ஷல் வங்கியின் 210ஆவது சேவை நிலையமாகும். இங்கு வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம், பயணிகள் காசோலை மாற்றம், கணக்குகள் திறத்தல், மாதாந்த பில்களை செலுத்துதல், பணத்தை மீளப்பெறல், வைப்பிலிடல், கொடுப்பனவுக் கட்டளைகள், ஈ எக்ஸ்சேஞ்ச் மற்றும் மணி கிராம் கொடுக்கல், வாங்கல்கள் என ஏனைய கொமர்ஷல் வங்கிக் கிளைகளிலுள்ள அனைத்துச் சேவைகளும் வழங்கப்படும்.

புதிய கிளை இலக்கம் 881 TZ கோபுரம், நீர்கொழும்பு வீதி என்ற முகவரியில் அமைந்துள்ளது. ''கொமர்ஷல் வங்கியின் முதலாவது 24 மணி நேர வங்கிச்சேவை நிலையத்தின் ஆரம்பமானது வாடிக்கையாளர்களின் மாறி வரும் தேவைகளுக்கு ஈடுகொடுக்க வங்கி எடுத்துவரும் நடவடிக்கைகளை பிரதிபலிப்ப தாக உள்ளது'' என்று வங்கியின்பேச்சாளர் ஒருவர் கூறினார். (த)



நல்லூர் சிவன் புது வீதியைச் சேர்ந்த அமரர் வி.ரவிந்திரா என்பவரின் இறப்புக்கு ஆயுள் இழப்பீட்டுத் தொகையை யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இழப்பீட்டு காசோலையை யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் என்.சுகுணன் வழங்குகிறார். அருகில் காப்புறுதி ஆலோசகர்கள் உள்ளனர். இழப்பீட்டுத் தொகையை இறந்தவரின் பின்னுரித்தாளரான செல்வி ரவிந்திரா. சுகன்யா பெற்றுக் கொள்கிறார்கள். (த)

## சீன யுவான் நாணயத்தில் வெளிநாட்டு நாணயக் கணக்கு

சீனாவின் நாணயமான யுவான் நாணயத்தைஇலங்கை மத்திய வங்கி இலங்கையில் கொடுக்கல் வாங்கலுக்கான நாணயமாக ஏற்றுக் கொண்டுள்ளதையடுத்து வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கை (NRFC) யுவானில் பேணுவதற்கு கொமர்ஷல் வங்கி வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

சீனாவுடன் மேற்கொள்ளப்படும் வர்த்தக மற்றும் ஏற்றுமதி - இறக்குமதி கொடுக்கல் வாங்கல்களுக்காக யுவானைப் பயன்படுத்தும்தெரிவைதனது வாடிக்கையாளர்களுக்கு பல வாரங்களுக்கு முன்னர் வழங்கிய கொமர்ஷல் வங்கி, அதன் தொடர்பாக இவ்வசதியையும் வழங்கியுள்ளது. இதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களின் போது பணப்பரிமாற்ற இழப்பு மற்றும் அந்தச் செயற்பாடுகளின்போது ஏற்படும் காலதாமதம் என்பன கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் அனுமதியுள்ள ஏனைய நாணயங்களாக அமெரிக்க டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், ஜப்பான் யென், அவுஸ்திரேலிய டொலர், கனடா டொலர், சிங்கப்பூர் டொலர், டானிஷ் க்ரோனர், ஹொங்கொங் டொலர், நியூசிலாந்து டொலர், நோர்வே க்ரோனர், சுவீடன் க்ரோனர், சுவிஸ் பிராங்க் என்பன வற்றில் மீகீஊஇ கணக்குகளைப் பேண கொமர்ஷல் வங்கி ஏற்கனவே வசதிகளை வழங்கியுள்ளது.

உலகில் உள்ள 1000 தலைசிறந்த வங்கிகளுள் இடம்பிடித்துள்ள ஒரேயொரு உள்ளூர் வங்கியாக கொமர்ஷல் வங்கி 13 தடவைகள் 'குளோபல் பினான்ஸ்' சஞ்சிகையால் இலங்கையின் தலைசிறந்த வங்கியாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## 'த லவ்வர்' 60 ஆவது கிளை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பு

இளம் சமுதாயத்தினரின் உள்ளங்களில் தனி இடம் பிடித்திருக்கும் நிறுவனங்களில் ஒன்றான The Lover/ Teen Girl தனது 60 ஆவது கிளையை யாழ்ப்பாணத்திலுள்ள மின்சார நிலைய வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும் தமது விற்பனை சேவையை விஸ்தரிக்கும் முகமாகவே தனது 10 ஆவது ஆண்டில் யாழ்ப்பாணத்திலும் தமது கிளையை திறந்து வைக்கிறது. மங்கையர் விரும்பும் அணி கலன்களான தோடுகள், வளையல்கள், கழுத்து மாலைகள், மோதிரங்களென குறிப்பாகப் பெண்களின் அழகுசாதனப் பொருள்கள் நவீன காலத்துக்கு ஏற்றவாறு புதிய புதிய வடிவங்களில் அறிமுகப்படுத்தி விற்பனை செய்யவுள்ளது. அதுமட்டுமல்ல ஆடவர்களுக்கான அணிகலன்களும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

நவீன நாகரிக உலகிலே இருபாலாருக்குமான அழகுசாதனப் பொருள்கள், பாதணிகள், பெண்களுக்கான கைப்பைகள் மற்றும் குழந்தைகளுக்கான பொம்மைகள், விளையாட்டுப் பொருள்கள், வைபவங்களுக்கான பரிசுப் பொருள்கள் என அனைத்து வகையான தரமான பொருள்களையும் ஒரு கூரையின் கீழ் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுள் The Lover/ Teen Girl முதலிடம் வகிக்கிறது.

இந்த நிறுவனம் கொழும்பில் பல பாகங்களிலும் தமது கிளைகளை விஸ்தரித்துள்ளதுடன் வடமாகாணத்தில் மின்சார நிலைய வீதி, யாழ். நகரில் தனது 60 ஆவது கிளையை மக்களின் நன்மை கருதி தொடக்கி வைத்துள்ளது. இது இளைய சமுகத்தினரை தன்னகத்தே ஈர்த்து சேவையாற்றி வருகின்றது என்றால் மிகையாகாது.

இந்த நிறுவனம் காலத்துக்கு ஏற்றது போல அனைத்து சமூக மட்டத்தினரும் விரும்புகின்ற தரமான பொருள்களை அறிமுகஞ் செய்து வருவதுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளருக்கு வாய்ப்பை வழங்கி வருகின்றது.

அதேபோல் எல்லா சமூகத்தவர்களது பண்டிகை மற்றும் விழாக்களின் போது பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு அன்பளிப்புகள், [illegible] கழிவுகளையும் வழங்கி வருகிறது. (த)




ஆயுட்காப்புறுதிக் கூட்டுத்தாபன வாடிக்கையாளரான வட்டக்கச்சியைச் சேர்ந்த அகால மரணமடைந்த செபமாலை ஜெயசீலன் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையாக ரூபா 2லட்சத்து 15 ஆயிரத்துக்கான காசோலை அண்மையில் சாவகச்சேரி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. வாடிக்கையாளரின் தாயாரான திருமதி செபமாலை அருளம்மாவிடம் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ம.கோபிதாஸன் காசோலையைக் கையளிக்கிறார். (த-207)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கொரு காட்டில் உதிர்ந்து கிடந்தது பறவையின் இறகு

*(நேற்றைய தொடர்ச்சி)*

மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன்பிடித்துவரக் குறைந்தது ஒரு வார காலமாவது ஆகும். கடலுக்குள் சென்று மீன்பிடிப்பது அவ்வளவு எளிதான வேலையல்ல. ஆனால் ஏரி, குளங்கள் மற்றும் குட்டை போன்ற இடங்களில் வாழக் கூடிய மீன்கொத்திப் பறவை கண் இமைக்காமல் தண்ணீரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்.

சடாரெனத் தண்ணீருக்குள் பாய்ந்து, லபக் என மீனைக் கவ்விக் கொண்டு போவதைப் பார்க்கும் போது நிதானத்தையும் விடாமுயற்சியையும் அதனிடமிருந்து கற்றுக் கொள்ளத் தோன்றும், அழகு என்றால், அப்படியொரு அழகுதான்.



துப்புரவாளர்களை விடச் சுத்தம் செய்வதில் ஒன்றும் சுளைத்தவர்கள் இல்லை என்று சொல்ல நினைத்தால் பிணம் தின்னிக் கழுகுகளைச் சொல்லலாம். பருமனான உடலையும் மொட்டைக் கழுத்தையும் கொண்ட இப் பறவைகள் எப்பொழுதும் ஆக உய ரத்தில்தான் பறந்து கொண்டிருக்கும். கிராமம், நகரம் என்ற பேதமில்லாமல் அனைத்து இடத்திலும் உள்ள அழுகிப்போன பொருள்களையும் செத்துப்போன உயிரினங்களையும் உட்கொண்டு நிலத்தைச் சுத்தம் செய்கிறது. இது எல்லா இடங்களிலும் நேரத்தை வீணாக்குவதில்லை. எப்பொழுதும் சுடுகாட்டிலும் காடு கரைகளிலும்தான் இருக்கும்.

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்று சொல்வது போல் கரிச்சான் குருவி உருவத்தில் சிறியதாக இருந்தாலும் பெரிய பறவைகள் தன்னைத் தாக்க வருகிறபோது பயந்து விடாது, எதிர்த்துக் கடுமையாகப் போராடும். அதனாலேயே வலிமை குன்றிய பறவைகள், கரிச்சான் குருவி இருக்கும் இடத்தில் தங்களது கூட்டினைக் கட்டிக் கொள்ளும்.

கறுப்பு யூனிபா°ர்ம் போட்ட செக்யூரிட்டி மாதிரி பகல் எல்லாம் காவல் காத்துக் கொண்டிருக்கும். இதைக் காவல் காக்கும் பறவை என்றே அழைப்பார்கள். அதிகாலையில் தினமும் இனிமையான தனது குரலால் நம்மை உறக்கத்திலிருந்து எழுப்பிவிடும்.

பகல் எல்லாம் காவல் காக்கும் கரிச்சான் குருவி மாதிரி இரவெல்லாம் காவல் காப்பதில் ஆந்தைக்கு நிகரில்லை. இதனுடைய கண்கள், இரவு நேரங்களில்தான் பிரகாசமாக இருக்கும். இதனுடைய கொக்கி போன்ற அலகும் உறுதியான வளைந்த நகங்களும் பிராணிகளைக் கொல்லுவதற்கு உதவுகின்றன.

இது விளைச்சல் நிலங்களை நாசப்படுத்தும் எலிகளைத் தின்று, விவசாயிகளின் நண்பனாக விளங்குகிறது. ஆகவே இதை ''இரவுக் காவலன்'' என்று செல்லமாக அழைப்பார்கள்.

பறவைகளில் மிகவும் சோம்பேறி குயில்தான். இது தன்னுடைய கூட்டைக் கட்டிக்கொள்வதற்குக் கூட சோம்பறித்தனப்படும். முட்டை இடுவது கூடக் காக்கையின் கூட்டில்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். காக்கைதான் இதனுடைய முட்டையை அடை காக்கும். இதனாலேயே இது சோம்பேறிப் பறவை என்று அழைக்கப்படுகிறது.

குளிர்காலத்தில் நாம் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அதிகாலை தூக்கத்தை ரசித்துக் கொண்டிருப்போம். அச்சமயத்தில் பால்காரி குருவி சீட்டி அடிக்கத் தொடங்கிவிடும். வசந்தகாலத்தில் சின்னக்குயில் சித்ரா போல விதவிதமான ராகத்தில் பாடிக்கொண் டேயிருக்கும். பாடும்பொழுது தன்னுடைய கறுப்பும் வெள்ளையுமான வாலை மேலே தூக்கித் தூக்கி ஆட்டிக் கொண்டே பாடுவதைப் பார்க்கப் பத்துக் கண்கள் இருந்தாலும் போதாது.

பால்காரி குருவி பாடும் என்றால் விசிறிக் குருவியோ தேர்ந்த நாட்டியக்காரி மாதிரி ஆடக்கூடியது. மரக்கிளைகளில் தத்திச் சென்று, திடீரென்று நின்று ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கம் திரும்பி ஆடுகின்றது. இது விசிறி போன்ற தனது வாலை அடிக்கடி சுருக்கியும், விரித்தும் ரம்மியமாக நடனம் ஆடுவதைப் பார்பவர்களுக்கு, அந்த இடத்தை விட்டுப்போக மனம் வராது. என்ன இதை எல்லாம் பார்க்க வேண்டும் போல இருக்குமல்லவா..?

இத்தகைய பறவைகள் அனைத்தும் கிராமப்புறங்களில் எல்லாம் உல்லாசமாகப் பறந்து திரிந்தது. ஆனால் இன்று பறவைகளின் வசிப்பிடங்களை மனிதர்கள் பறித்துக் கொண்டதாலும் இவை உண்ணக்கூடிய தானியங்களில் எல்லாம் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்ததாலும் விஷமாகிப் போன அவற்றை உட்கொள்ளுவதாலும் பெரிய அளவிற்கு இவை எல்லாம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

*(முற்றும்)*

மூர்த்தி

# விவசாயத்தின் மூலம் யாழ்ப்பாணம் தன்னிறைவு பிரதேசமாக மாறவேண்டும்

## அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.மாவட்டம் விவசாயத்தின் மூலம் தன்னிறைவான பிரதேசமாக மாறவேண்டும். மேலும் கால்நடை வளர்ப்பு, இயற்கை வளங்கள் என்பவற்றையும் பாதுகாப்பதன் மூலம் நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வீட்டுத் தோட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் அண்மையில் இடம் பெற்றது. அந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், தெரிவித்ததாவது வீட்டுத் தோட்டம், கால் நடை வளர்ப்பு என்பது நிலையான வருமானத்தை ஈட்டித்தரக்கூடியது. பெண்களின் சுயமுன்னேற்றத்துக்கும் பயனுள்ளதாகப் பொழுதைக் கழிக்கும் விடயமாகவும் உள்ளது.

வீட்டுத் தோட்டப் பயிர்செய்கை கிராம மக்களிடமே அதிகம் காணப்படுகிறது. வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை தொடர்பான மேலதிக தகவல்களைக் கிராம மட்டங்களில் விவசாய திணைக்களங்கள் அறிமுகப்படுத்துவது அவசியம் ஆகும்.

இயற்கை வளங்களை முழுமையாகப் பாதுகாக்கவும் பயன்படுத்தவும் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். இயற்கைப் பசளைகளை தோட்டப் பயிர்களுக்குப் பயன்படுத்தும் போதுதான் ஆரோக்கியமான உணவுகளை உண்ண முடியும்.

மழை நீரையும், நிலத்தடி நீரையும் சேமித்து சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, இயற்கை வளத்தை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவரும் பழகிக்கொள்ள வேண்டும்.

இளைஞர்களும் யுவதிகளும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஆர்வத்துடன் செயற்பட்டால் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றார். (எ-311)

# பின்தங்கிய இடத்தில் கடமையாற்றும் எவரும் தண்டனையாக நினைக்க கூடாது

## வடக்கு மாகாண முன்னாள் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஜன.3

பின்தங்கிய பிரதேசங்களுக்குக் கடமையாற்ற அனுப்பப்படுவதைத் தண்டனையாக நினைக்கக் கூடாது என வடக்கு மாகாணத்தின் முன்னாள் செயலாளர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முகாமைத்துவப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களையும், ஓய்வு பெற்ற அதிகாரிகளையும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு சிவசுவாமி தெரிவித்தார். அங்கு அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நெடுந்தீவு போன்ற பின்தங்கிய பகுதிக்கு கடமைக்காக அனுப்பப்படும் போது அதைத் தண்டனையாக நினைத்திருக்கிறார்கள். ஒருதடவை உத்தியோகத்தர் ஒருவரை அங்கு செல்லுமாறு கேட்டபோது என்னை எனது சொந்த ஊருக்கு அனுப்பாமல் நெடுந்தீவுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு சதி முயற்சி என்று தெரிவித்தார்.

காணிபோன்ற முக்கிய விடயங்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமானால் கஷ்டப் பிரதேசங்களுக்குச் சென்றால்தான் அவை குறித்த விடயங்களை முழுமையாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். யாழ்.மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை தெரிவு செய்துள்ளார்கள். இப்போது தெரிவு செய்யப்பட்ட அவர்கள் கஷ்டப்பட்ட பிரதேசங்களுக்குத் தான் செல்லப் போகிறார்கள்.

முகாமைத்துவப் போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் சிறந்த தலைமைத்துவம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பதிவுகளை நல்ல முறையில் வைத்திருப்பது அவசியம்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு மதீப்பீட்டுக்குழு சென்ற போது பிரதேச செயலர் சில விடயங்களை நாங்கள் எவ்வாறு திருத்திக் கொள்ளலாம் எனக் கேட்டார். இது ஒரு நல்ல வளர்ச்சிக்கான அறி குறி. சந்தேகங்களைக் கேட்டுத் திருத்திக் கொள்வது முக்கியம். முகாமைத்துவப் போட்டியில் வெற்றிபெறாமல் இருக்கலாம் என்ப தற்காக நீங்கள் சிறப்பாக செயற் படவில்லை என்பதல்ல- என்றார்.

(எ-7)

## சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்.திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர் - கி.துரைசிங்கம், போசகர்- இ.குணசிங்கம், செயலாளர் ஞா.குருபரன், பொருளாளர்- இ.மோகன்ராஜ், உபதலைவர் இ.குணநேசன், உபசெயலாளர் ச.கிரிகரன், கணக்காய்வாளர்- சி.தனுசன் .

(எ)

## பெண்களுக்கான செயலமர்வு

இலங்கைப் பெண்கள் சட்டத்தரணிகள் சங்கமும் தேவைநாடும் மகளிர் அமைப்பும் இணைந்து ''பெண்களுக்கான சட்ட வலுவூட்டல்'' செயலமர்வு ஒன்றினை அண்மையில் யாழ்.தியாகி அறக்கொடை நிறுவனத்தில் நடாத்தியுள்ளன.

யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் இந்த நிகழ்வில் குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்கள், இளம் பெண்கள் உட்பட 180 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

(எ)

# மாணவர் சிறந்த பெறுபேற்றைப் பெற பெற்றோர் ஊக்கப்படுத்தல் அவசியம்

## துணுக்காய் யோகபுரம் ம.வி. அதிபர்

யாழ்ப்பாணம், ஜன.3

மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பாடசாலை மட்டும் தனது பணியினை வழங்கினால் போதாது. பெற்றோரின் ஊக்கப்படுத்தலும் கட்டாயம் தேவையாகும்.

மாணவர்களின் கல்விக்கு வழங்கும் ஊக்குவிப்பு, அவர்களை மேலும் அறிவுடையவர்களாக வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையை அவர்களுக்குள் உருவாக்கிக் கொடுக்கும் என துணுக்காய் யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் த.யோகானந்தராசா தெரிவித்தார்.

மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே யோகானந்தராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மாணவனின் பரீட்சைப் பெறுபேறுகள் அவனது கல்வியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. எனவே பரீட்சைக் காலங்களை மட்டும் மையப்படுத்தி மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளைத் திணிக்கக் கூடாது.

ஆரம்ப காலம் முதல் படிப்படியாக மாணவர்களுக்கு தகுந்ததான கற்றல் செயற்பாடுகளை வழங்க வேண்டும். இவ்வாறான தொரு செயற்பாடு இருக்குமானால் பரீட்சைக்காலம் நெருங்கும் போது மாணவர்கள் தாமாகவே சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்னும் எண்ணத்துடன் பரீட்சையை எதிர்கொள்வார்கள்.

அத்துடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடு என்பது பாடசாலையில் மட்டும் தங்கியிருப்பது இல்லை. பெற்றோரின் ஊக்குவிப்பிலும் பெரிதும் தங்கியுள்ளது.

பெற்றோர்களிடம் மாணவர்கள் தங்கியிருக்கும் நேரங்களே அதிகமாக இருக்கும். எனவே சிறந்த வழிகாட்டல்களை பெற்றோரே கற்றுக் கொடுக்க வேண்டும்.

மாறாக மாணவர்களின் தனிப்பட்ட செயல்களுக்குத் தகுந்தால் போல் கல்வியைத் தொடர அனுமதிக்கும் போது அதற்கான ஆர்வம் அவர்களிடம் குறைந்து விடும்.

எனவே மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்ந்த கல்வி நிலையை அடைவதற்கு பாடசாலை சமூகத்துடன் ஒன்றிணைந்து பெற்றோரும் ஊக்கப்படுத்தலை வழங்க வேண்டும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் மாணவர்கள் கல்வியில் முன்னேறுவதுடன் தொழில் வாய்ப்பையும் பெறக் கூடியதான சூழல் ஏற்படும்.

எனவே மாணவர்களாகிய நீங்களும் உணர்ந்து கல்வியை கற்பதன் மூலம் சிறந்ததொரு எதிர்காலத்தை அடைய முடியும் என்றார்.

(எ-313,410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல் -
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-5679731

மின் அஞ்சல் செய்தி :
news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 567 3377,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# செய்ய வேண்டியது என்ன?

அரசுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சுக்கள் திருப்தி தருவதாக இல்லை; மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கு எதையும் தருவார் என்ற நம்பிக்கை இல்லை -என்று பேச்சில் ஈடுபடும் தமிழ்த் தலைவர்கள் நம்புகின்ற போதும் பேச்சை விட்டு வெளியேற அவர்களால் முடியவில்லை. வெளியே வந்து என்ன செய்வது என்பதுதான் அவர்களின் முன்னுள்ள பெரிய கேள்வி.

பேசிப் பேசி எதையாவது அடைய முடியுமா? ஏதாவது ஒரு வழி தென்பட்டுவிடாதா என்று பார்ப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை என்று தமிழ்த் தலைவர்கள் நம்புகிறார்கள். பத்தாதத்துக்கு இந்தியாவும் வெளிநாடுகளும்கூட அவர்களிடம் இதே கேள்விகளையே கேட்கின்றன. மேலும் ''பேச்சில் இருந்து நீங்களாக வெளியேறி விட்டீர்கள் என்றால், தீர்வு காண்பதில் உங்களுக்கு அக்கறை இல்லை என்று இலங்கை அரசு கூறிவிடும். அதன் பின்னர் அது கிள்ளிக் கொடுக்கும் அதிகாரங்கள் கொண்ட ஒரு தீர்வு நடைமுறைப்படுத்தப்படும். அதனை ஆதரிப்பதைத் தவிர வேறு வழி எதுவும் எமக்கு இருக்காது'' என்ற ரீதியில் இந்தியாவும் மேற்குலக நாடுகளும் கூட்டமைப்பின் தலைவர்களிடம் பேசுகின்றன.

இத்தகைய நிலையில் பேச்சை விட்டு வெளியேறிவிட்டு என்ன செய்வது? இதுவே எல்லாத் தமிழ்த் தலைவர்களிடமும் இப்போது இருக்கும் கேள்வி. இந்தக் கேள்விக்கு விடை காண்பதிலேயே தமிழர்களின் அரசியலுக்கான அடுத்த நகர்வு தங்கியிருக்கிறது. நடப்பதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பதா? இல்லை நடக்க வேண்டியதற்கு என்ன செய்யலாம் என்று யோசிப்பதா?

காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தர முடியாது என்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியாது என்றும் ஊடகங்களிடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவும் அமைச்சர்களும் கருத்துத் தெரிவித்தபோதும் இந்த மாத நடுப்பகுதியிலும் கூட்டமைப்புடன் அதே அதிகாரங்கள் பற்றிப் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. அதற்கான உடனடி முக்கிய நோக்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை விவகாரம் விவாதத்துக் வருவதைத் தடுப்பதே என்று இராஜதந்திரிகள் கூறுகிறார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை விவாதத்தைத் தடுப்பதற்கான மற்றொரு நாகாஸ்திரமாக வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் அரசு கையில் வைத்திருப்பதாக அரசியல் அவதானிகள் சிலர் கருதுகின்றனர். தெற்கில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் ஜெனீவாவில் மார்ச் மாதத்தில் அரசுக்கு ஒரு கண்டம் இருப்பதாகவே எதிர்வு கூறுகின்றன. அதனை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று அவை மஹிந்தவைக் கேள்வி கேட்கின்றன.

வழக்கம்போலவே பேச்சையும், அதிகாரங்களைப் பகிர்வதற்கான முயற்சி என்று மாகாண சபைத் தேர்தலையும் காட்டி, சீனா மற்றும் ரஷ்ய நாடுகளின் துணையுடன் பிரச்சினைகளைச் சமாளித்துவிடலாம் என்ற பாணியிலேயே அரசு முன்னேறி வருகின்றது.

அரசின் இத்தகைய முயற்சிகளைத் தடுத்து, ஜெனீவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரை தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான அழுத்தப் புள்ளியாகிக் கொள்ள தமிழர்களும் தமிழ்த் தலைமைகளும் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது.

இல்லையேல், போர் முடிந்த கையோடு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் கைவிடப்பட்டு, போரில் புலிகள் அழிக்கப்பட்டதற்கு வாழ்த்துத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேறியமை போன்றே மார்ச்சிலும் நடக்கும்.

இலங்கை அரசு மீது மேற்கு நாடுகள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் ஒரு கை பார்த்துவிடும் என்ற கனவுடன் நாம் சும்மா வாளாவிருந்துவிட்டால், குறைந்தது இன்னும் ஒரு தசாப்தத்துக்கு தீர்வுக்காகத் தமிழர்கள் காத்திருப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# கண்காணிப்பைத் தீவிரப்படுத்துங்கள்

**சுயந்தன்**



யாழ்ப்பாணத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையான 5 மாத காலத்தில் 18 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகள் 75 பேர் முறையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்துள்ளனர் என்று பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. சிறுவர்கள் எதிர்பார்க்கின்ற பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்காததால் அதனைத் தேடி தவறான வழியை இளமட்டத்தினர் நாடுவதும் சிறுமிகள் கர்ப்பம் அடைவதற்கான காரணம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவிகள் இந்த விடயத்தில் அதிகளவில் பாதிக்கப்பட்டமைக்குக் காரணம் ஆசிரியர்களும் பெற்றோர்களுமே என வைத்திய அதிகாரி திருமதி திருமகள் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### முன்னைய நிலை

முன்னைய காலங்களில், தமது பிள்ளைகளை நல்லமுறையில் வழி நடத்தி கொண்டுவருவதில் பெற்றோரை விட பாட்டன் பாட்டியின் ஈடுபாடு அதிகமாக இருந்தது.

முன்னைய காலங்களில் வானொலி, தொலைக்காட்சி, சினிமா, சித்திரக் கதைப் புத்தகங்கள், தத்துவம் நிறைந்த நாவல்கள், அரசியல் சார்ந்த கட்டுரைப் புத்தகங்கள் காணப்பட்டு இருந்தாலும் இவற்றைப் பிள்ளைகள் அணுகுவதற்கு பெற்றோரின் கட்டுப்பாடுகள் நிறைய இருந்தன. இவை தொடர்பிலான பிள்ளைகளின் நடத்தையிலும் கண்காணிப்பு மிகுந்திருந்தது.

முன்னைய காலங்களில் ஊரைச் சேர்ந்தவர்களே அந்தந்தப் பகுதிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். இதனால் அன்றைய ஆசிரியர்களுக்கு அந்தப் பகுதியின் பௌதீகச் சூழல் பிள்ளைகளின் குடும்பச் சூழல் என்பன தெரிந்திருந்தன. மாணவர்களை அவர்கள் தமது பிள்ளைகளாகக் கணித்தனர்.

இவற்றில் எல்லாம் ஏற்பட்ட கடுகதி மாற்றங்கள் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட்டன. இதுதான் இன்றைய பிறழ் நடத்தைகளுக்குக் காரணங்களாகியும் விட்டிருக்கின்றது.

### இன்றைய நிலை

இன்று நவீன அறிவியல் பாய்ச்சலுடன் மாணவர்களின் கல்வியும் சரி வாழ்க்கையும் சரி முன்னேறுகின்றது. அவர்களுக்கு எல்லாமே இலகுவாகக் கிடைக்கின்றது. சினிமா, தொலைக்காட்சி, கையடக்க தொலைபேசி, பாவனை, கணினி வசதி எல்லாவற்றையும் கட்டுப்பாடுகள் இன்றியும் கண்காணிப்பு இன்றியும் மாணவர்கள் அணுகும் சூழலே இன்றுள்ளது.

கல்வி இப்போது பல மாணவர்களுக்கு ஒரு பொழுது போக்காக மாறிவிட்டது. ஏனெனில் அவர்களது கவனக் குவிப்புக்கள் வேறு வேறு விடயங்களில் அதிகம் செல்கின்றன.

நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாள்வதில் மாணவர்களுக்கு உள்ள மோகம் சொல்லி மாளாது. சாதாரண பொருளாதார நிலைமை என்று சொல்லப்படுகின்ற குடும்பங்களில் கூட கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி இல்லாமல் இல்லை.

பெற்றோரோ பிள்ளைகளுக்காக ஓடியோடி வேலைக்குப் போய்க் கொண்டிருக்கையில், பிள்ளைகளின் கைகளில் கிடைத்த தகவல் தொழில்நுட்பம் படும் பாட்டைக் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு எங்கே நேரம்? அதனால் கண்காணிப்போ கட்டுப்பாடோ இன்றி பிள்ளைகளின் நேரம் காலம் அவற்றுடனேயே கழிகின்றது.

### அலைக்கழிக்கும் கைப்பேசி

கையடக்கத் தொலைபேசியில் தொடர்ந்து கதைத்தல்; அடிக்கடி புது நண்பர்களிடம் தொடர்பை ஏற்படுத்தல், குறுஞ் செய்தி அனுப்புதல், சினிமாப் படங்கள் அல்லது சினிமாப்பாடல்களை தொலைபேசியில் சேமித்து அடிக்கடி பார்த்தல் அப்படத்தை வேறொருவருக்கு காட்டுதல், பின்னர் புளூருத் மூலம் பரிமாறுதல் என்பனவே இன்றைய இளசுகளின் நேரத்தை அதிகம் விழுங்கும் முக்கிய விடயமாக இருக்கின்றது.

இந்தப் பழக்கம் வளர்ந்து நீலப் படக் காட்சிகள் கைப்பேசிகளின் நினைவகங்களை நிரப்பும் வரைக்கும் வளர்ந்து செல்கிறது. ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விசம்போல் ஒரு மாணவனின் தொலைபேசிக்கு இத்தகைய படம் ஒன்று கிடைத்தால் ஒன்றில் அது மற்றையவர்களின் தொலைபேசிகளுக்கும் பரிமாறப்படுகிறது அல்லது குறைந்த பட்சம் ஏனையவர்களால் பார்க்கப்படுகின்றது.

கூடுதலான பாடசாலைகளில் மாணவ மாணவிகள் கையடக்கத் தொலைபேசிப் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் ஒரு சில மாணவ மாணவிகள் மிகவும் இரகசியமாக அதனைப் பாடசாலைகளில் பயன்படுத்துகிறார்கள். அதனைக் கண்டும் காணாமலும் செயற்படகின்ற ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய முதல் சீர்கேடு.

இவ்வாறான செயற்பாடுகளால் மாணவ மாணவிகளின் தவறான வழிக்கு ஆசிரியர்களே உடந்தையாகி விடுகிறார்கள்.

### கொண்டாட்ட ஆபத்து

இதைவிட சில மாணவ மாணவிகள் சக மாணவ, மாணவிகளின் களியாட்ட நிகழ்வுகள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்றன இன்று அதிகரித்து விட்டன. இந்த நிகழ்வுகள் நடப்பது தவறல்ல. ஆனால் அத்தகைய நிகழ்வுகளில் என்ன நடக்கிறது என்ற பெரியோரின் கண்காணிப்பு இல்லாமல் போவதே சிக்கலானதாகிறது.

இத்தகைய நிகழ்வுகளில் சில சமயங்களில் மாணவர்கள் சோடா மட்டுமின்றி பியர் ரின்களையும் பயன்படுத்துகின்றனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. பல இடங்களில் சிகரெட்டுக்கள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் இரகசியமாகவும் மிகவும் அவதானத்துடனும் மாணவர்களால் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன. கண்காணிப்பு இருக்கக்கூடும் என்பதில் மாணவர்கள் காட்டும் எச்சரிக்கையை இவ்வாறான நடத்தைகளில் பிள்ளைகள் ஈடுபடக்கூடும் என்று பெற்றோர் காட்டாமல் இருக்கிறார்கள் என்பதே இன்றைய பிரச்சினையாகி உள்ளது.

இதைவிட மாணவ மாணவிகள் பாடசாலைக் கல்வியை விட பிரத்தியேகமாக சில பாடங்களுக்கு ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் முறையை இன்று எல்லா இடங்களிலும் ஒரு நாகரிகமாக வளர்ந்துள்ளது. இத்தகைய தனிநபர் வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவிகளின் நடத்தை மீதான கண்காணிப்பையும் இறுக்குவது இன்றைய தேவை என்று பல துறைசார் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்தகைய தனிநபர் வகுப்புக்களை எடுக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் இளவயதினர் என்பது இங்கு கவனத்திற்குரியது. அவர்கள் தவறு செய்ய விரும்பாவிட்டாலும் தவறு செய்ய வைக்கும் வயது அவர்களுடையது.

எல்லா ஆசிரியர்களும் தத்தமக்குரிய உயரிய பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும் ஒரு சிலர் தவறு செய்யும் நிலை காணப்படுகின்றது. இதில் பாதிக்கப்படுவது மாணவியின் வாழ்க்கையாகவே இருக்கின்றது. இது கவலைக்குரியது.

### தேவை கண்காணிப்பு

எனவே, பிள்ளைகள் மீதான கண்காணிப்பை தீவிரப்படுத்துவது அவர்களை மற்றவர்கள் தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் துணையிருக்கும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அன்பு; அரவணைப்பு செலுத்துவதற்கான நேரங்களை ஒதுக்கவேண்டும். உங்களுடைய ஊக்கம்; முயற்சி மூலமாக ஆரம்பிக்க கல்வியில் இருந்து ஆரம்பித்து இடைநிலைக் கல்வி வரை உங்கள் பிள்ளைகளை சரியான முறையில் வளர்வதை உறுதிப்படுத்த வேண்டும். இடை நிலைக் கல்வியில் இருந்து உயர் நிலைக் கல்வி வரும் வரை தத்தமது பிள்ளைகளை கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும்.

இங்கு கண்காணிப்பு என்பது அவர்களைத் தொடர்ந்து விசாரணை செய்வதையோ அவர்களின் பின்னால் அலைவதையோ குறிக்கவில்லை. பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்குவதையும், அவர்களின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து, அதற்கான காரணங்களைத் தேடி ஆராய்ந்து தீர்வு காண்பதையுமே குறிக்கின்றது.

இந்த விடயத்தில் பொறுப்பு பெற்றோருக்கு மட்டுமல்ல. ஒவ்வொரு பிள்ளையும் தனது மாணவப் பருவத்தில் பெற்றோருடன் செலவிடும் நேரத்தைவிட அதிக நேரத்தை பாடசாலையில் ஆசிரியர்களுடனேயே செலவிடுகிறது. எனவே ஒவ்வொரு ஆசிரியருமே தமது பொறுப்புணர்ந்து செயல்படுவது அவசியம். இந்தக் கவசத்தில் ஓர் இடத்தில் ஓட்டை விழுந்தாலும் அது ஓசோனில் விழுந்த ஓட்டையைப் போன்றதே. அதை உணர்ந்து செயற்படுவதே அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலேசான காற்றும் பலம்மிக்கதே

வி.எஸ்.ரீ

நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்த நாட்டின் சகல இனத்தவர்களுக்கும் ஏற்புடைய சகல இனத்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க தீர்வாக அமைய வேண்டும். இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டாதவரை இந்த நாட்டில் அமைதியும் அபிவிருத்தியும் ஏற்படப் போவதில்லை'' என்கிறார் இந்த நாட்டின் பௌத்த மத உயர் பீடத்தைச் சேர்ந்த பத்தேகம சமித தேரர்.

பொதுவாகச் சிங்கள பௌத்தவர்கள் தமது மதத் தலைவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து கருத்தில் எடுத்துக்கொள்வர். என்ற போதிலும் சிங்களப் பேரினவாதச் சிந்தனையாளர்கள் தேரரின் கருத்துக்களைக் கணக்கில் கொள்வார்களா என்பது கேள்விக்குரியதே.

ஆனானப்பட்ட சர்வதேச சமூக நாடுகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு விடுக்கும் அழுத்தங்களையே எள்ளி நகையாடி, ஆட்சேபிக்கும் சிங்களப் பேரினவாத அரசு, தேரரின் ஆலோசனைகளுக்குக் காது கொடுக்குமா என்பதும் சந்தேகத்துக்கு உரிய தொன்றே.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. பல மட்டங்களில் பேச்சு, மாநாடு என்பன நடத்தப்பட்டுள்ளன. ஆயினும் இவை எவற்றாலும் இன்றுவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. எது எவ்வாறானபோதும் இனப் பிரச்சினைக்கான தீர்வு அரசியல் ரீதியாகவே காணப்படவேண்டும்; காண இயலும் என்பது மட்டும் தெளிவு. ஆரம்பகாலம் முதலே பலர் அத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆயினும் இதனைப் பலர் தவறான கோணத்திலேயே அர்த்தப்படுத்துகின்றனர்.

இத்தகைய கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் சிங்களவர்கள் பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க நேர்கிறது. இனத் துரோகிகள் என அவர்கள் ஏளனப்படுத்தப்படுகிறார்கள். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிடுபவர்கள் என்று தூற்றப்படுகிறார்கள். ஆயினும் இன்று சமூகத்திலுள்ள கற்றறிந்தோர், புத்திஜீவிகள் பலர்கூட நாட்டின் இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்றே அவசியம் என்கின்றனர்.

மூன்று தசாப்த காலமாக இந்த நாட்டில் இடம்பெற்ற போர் முடிந்துவிட்டது. இன்றைய சூழ்நிலையில் மீண்டும் ஒரு போர் ஏற்பட இடமளிக்கலாகாது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான உடனடி முயற்சிகளே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய

> “வடக்கிலோ கிழக்கிலோ மீண்டும் அகிம்சை ரீதியிலான போராட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்கு சர்வதேச ஒத்துழைப்புக் கிட்டும் என்பதை நாம் மறக்கலாகாது.

தேவை தற்போது சகல துறைகளிலும் எழுந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இழுபடுவதாலேயே சர்வதேச ரீதியிலும் நாடு பல அழுத்தங்களை எதிர்நோக்கி வருகிறது. அதிலிருந்து விடுபடுவதற்கு அரசியல் தீர்வு முக்கியம்.

எமது பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினையாகாமல் இருப்பதற்கு அதனை நாமே தீர்த்துக் கொள்வது சிறந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாயின் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும். இதனைப் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இந்த அடிப்படை உண்மையைச் சிங்களவர்கள் புரிந்துகொள்ளாத வரையில் தீர்வு சாத்தியமாகாது.

தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்பதை, போரின் பின்னர் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.

நாட்டு நிர்வாகத்தைச் சீராக்கி, நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று ஒரு சாரார் நம்புகின்றனர். ஆனால் அது தவறு என்பதை எமது அண்மைக் கால அனுபவங்கள் நிரூபித்துள்ளன.

இன்றைய அரசு, போரின் முடிவுக்குப் பின்னர், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தியது. பெருமெடுப்பில் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அப்படி இருந்தும் வடக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் அரசை நிராகரித்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அங்கு வெற்றி பெற்றது.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது என்ற பெயரில் தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் தகுதி எங்களுக்குக் கிடையாது என்பது இதன் மூலம் தெளிவாகிறதல்லவா? தமிழ் மக்களின் மனங்களை வெல்லவேண்டுமானால் அவர்களுக்கும் இந்த நாட்டில் உரிமைகள் உள்ளன என்பதைச் சிங்களவர்கள் ஏற்றாகவேண்டும்.

அதாவது, தமது பிரதேசங்களை நிர்வகிப்பதற்கான அதிகாரங்கள் தமக்கு வழங்கப்படவேண்டும் என்ற விருப்பம் தமிழ் மக்களிடம் இருக்கின்றது என்பதைச் சிங்களவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கொழும்பிலிருந்து எடுத்துச் செல்லும் தீர்வைத் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது தெளிவான உண்மை.

புலிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்ததையடுத்து நாட்டில் சண்டை இல்லாத நிலையை அனுபவிக்க முடிந்துள்ளது. விடுதலைப் புலிகளின் அழுத்தங்களில் இருந்து தமிழ் மக்கள் இப்போது விடுபட்டுள்ளனர். இதனைச் சகல அரசியல் தரப்புக்களும் ஏற்றாக வேண்டும். இந்த உண்மையை மறுப்பது தீர்வுக்கு ஒருபோதும் உதவாது.

> “தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்பதை, போரின் பின்னர் நடத்தப் பட்ட உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து பேச வேண்டும். தீர்வு காண்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணையத் தவறுவோமானால், மீண்டும் ஒரு தடவை இந்த நாடு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கும் நிலை உருவாகும். இலேசான காற்றும் பலம்மிக்கதே என்ற உண்மையை நாம் ஏற்றேயாக வேண்டும்.

வடக்கிலோ கிழக்கிலோ மீண்டும் அகிம்சை ரீதியிலான போராட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குச் சர்வதேச ஒத்துழைப்புக் கிட்டும் என்பதை நாம் மறக்கலாகாது. இலங்கை அரசு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதில்லை என்று சர்வதேசம் உணருமானால் சிங்கள மக்கள் சிக்கலுக்கு முகம் கொடுக்கவேண்டிவரும்.

# கூட்டமைப்பு பதிவு: எப்போது முடியும் இழுபறி?

புத்திரசிகாமணி



காத்தாட ஒரு கட்சிக் கலந்துரையாடல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலையே நீடிக்கிறது. இந்த விவகாரத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கிடையே மாறுபட்ட கருத்துக்கள் தொடர்கின்றன.

தற்பொழுது கூட்டமைப்பின் ஒரே சின்னத்தில் போட்டியிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளோடு வெளியில் இருந்து ஆதரவை வழங்கிவரும் கட்சிகளையும் இணைத்து ஒரு கூட்டமைப்பாகப் பதிவு செய்வதின் மூலம் கூட்டமைப்பை மேலும் உறுதியானதாக மாற்ற முடியும் என்று ஒருசாரார் வாதிடுகின்றனர்.

இல்லை, இல்லை தமிழரசுக் கட்சிதான் தாய்க் கட்சி; இப்படி ஒரு கூட்டமைப்பைப் பதிவு செய்வதின் மூலம் தாய்க் கட்சியின் தனித்துவம் மழுங்கடிக்கப்படலாம் என்கின்றனர் மறுசாரார்.

கடந்த 30ஆம் திகதி திருகோணமலையில் நடந்த தமிழரசுக் கட்சியின் கூட்டத்திலும் இந்த விவகாரம் ஆராயப்பட்டது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தனின் வீட்டு 'வளவில்' கூட்டம் நடைபெற்றது.

கட்சிகளின் செயற்குழுக் கூட்டங்கள் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடைபெறுவதே வழமை. கூட்டம் முடிந்ததும் தீர்மானங்கள், ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து தலைவர்கள் பின்னர் செய்தியாளர்களுக்கு விளக்குவார்கள். ஆனால், தமிழரசுக் கட்சியின் கூட்டமோ பாலை மரத்தடியில், திறந்த வெளியில் நடைபெற்றது. தகவலறிந்து ஊடகவியலாளர்களும் அங்கு படையெடுத்தனர். அவர்களுக்கும் கூட்டத்தில் தடையேதும் இல்லை. பின்வரிசையில் அமர்ந்து கொண்டனர். ஒரு கட்டத்தின் பின்னர்தான் நிலைமையைப் புரிந்து கொண்ட தலைவர்கள் ஊடகவியலாளர்களை வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். பின்னர் அழைப்பதாகவும் கூறினர்.

பத்திரிகையாளர்கள் ஒதுங்கி நின்று கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். கூட்டம் தொடர்ந்து நடந்தது. பத்திரிகையாளர்கள் கூட்டத்தில இல்லாத போதும் காரசாரமான விவாதங்களின் போதும் சிலர் தமது குரலை உயர்த்திப் பேசும் போதும் விவரங்கள் தாமாகவே காதில் விழுந்தன.

ஒரு பெண் உறுப்பினர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார். ''கூட்டமைப்பைப் பதிவு செய்ய ஏன் பயப்படுகிறீர்கள்? தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிலைச் சின்னத்தில் பதிவு செய்யப்படவில்லையா? அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணி பதிவு செய்யப்படவில்லையா?'' என்றார் அவர். [illegible] டாலும் அவற்றில் பிரதான இடத்தை வகிக்கும் கட்சி தனது தனித்துவத்தைத் தொடர்ந்து பேணிக்கொண்டு தானே இருக்கிறது என்றும் அவர் விளக்கினார்.

இன்னும் ஒரு உறுப்பினர், ''தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் ஓர் இடத்திலும் கூட்டணியின் சின்னத்தில் வேறு ஒரு இடத்திலும் போட்டியிடுகின்றனர். இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. எனவே கூட்டமைப்புக்கு என்று ஒரு சின்னம் அவசியம்'' என்றார்.

''மாறுபட்ட கருத்துக்கள், மாறுபட்ட கொள்கைகள் உள்ள ஒரு கூட்டணி[illegible] பதிவு [illegible] பல சிக்கல்கள் வரும். தனிக் கட்சிகளின் தனித்துவம் இல்லாமல் போய்விடும்'' என்று வேறு சிலர் வாதிட்டனர்.

மற்றோர் இளம் உறுப்பினரோ, ''கூட்டமைப்பைப் பதிவு செய்வதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. ஆனால் இப்போது இருப்பதுபோல் செயலாளர் நாயகம் என்ற பதவி தமிழரசுக் கட்சியிடமே இருக்கவேண்டும்'' என்றார்.

இந்தப் பிரச்சினையில் கட்சி எந்த முடிவையும் எடுக்கவில்லை. விவாதம் இப்படியே தொடர்ந்தது.

இவ்வாறான நிலைமையில் கூட்டமைப்பைப் பதிவு செய்வது தொடர்பில் உறுதியான முடிவு எடுக்க முடியாத நிலை தொடர்கின்றது என்று பின்னர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார் மூத்த தலைவர் ஒருவர்.

> “அநேகமாக அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்படலாம்

''என்ற போதிலும் கூட்டமைப்பைப் பதிவு செய்யும்போது அதில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடனும் பொதுயாப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். ஒவ்வொரு கட்சியின் தலைவர்களுடனும் பேசி அவர்களின் கருத்தையும் அறிந்துதான் ஒரு முடிவுக்கு வரமுடயும் அநேகமாக அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்படலாம்'' என்று தமிழரசுக் கட்சியின் சார்பில் கூறப்பட்டது.

வடமாகாணசபைத் தேர்தலைப் போன்றே இந்த விவகாரமும் பின்போடப்படுமா? மாகாண சபைத் தேர்தலின் முன்பாவது பதிவு இடம் பெற்றுவிடுமா என்று கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்று கூறுபவர்கள் கேட்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமாற்றம்

ஒரு திருடன் ராஜாவின் அரண்மனையில் திருடுவதற்காக நடுராத்திரி வேளையில் சென்றான். அவன் மெதுவாக அரண் மனைக்குள் நுழையும் போது அந்தப்புரத்தில் யாரோ பேசிக் கொண்டிருக்கும் உரையாடல் கேட்கிறது.

அது யார் என்று கவனித்தான். ராஜாதான் ராணியுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் என்ன சொல்கிறார்? என்று மெதுவாகக் காது கொடுத்துக் கேட்கிறான்.

''எங்கள் பெண்ணுக்கு கல்யாணம் செய்யவேண்டாமா?'' என்று ராணி கேட்கிறார். அதற்கு ராஜா ''அவசியம் செய்யவேண்டியது தான். மாப்பிள்ளை யார் என்று நான் முடிவு செய்துவிட்டேன்'' என்றார்.

''யார் மாப்பிள்ளை?'' என்று ராணி கேட்டார். ''எமது ஊரில் உள்ள ஆற்றங்கரையில் சாதுக்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அதில் ஒருத்தருக்குத்தான் எனது மகளைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகின்றேன்'' என்றார் ராஜா.

அரசன் கூறிக்கொண்டிருந்த இந்த விடயம் அங்கே ஒளிந்து கொண்டிருந்த திருடன் காதில் விழுந்தது. அவ்வளவுதான் அவன் அங்கேயே முடிவு செய்துவிட்டான்.

''ஆகா! அருமையான யோசனை. அதிர்ஷ்டம் தானாக வருகிறது. இதை விட்டுவிடலாமா? என்று யோசித்தான்.

''நாளைக்கே நாம் ஒரு சாதுவேடம் போட்டுக்கொண்டு ஆற்றங்கரையில் போய் உட்கார்ந்து விடவேண்டும் என்று முடிவு செய்துவிட்டான்.

''ஒருவேளை தனக்கு யோகம் அடித்தால் இளவரசியே மனைவியாக வரலாம் என்பது அவன் நினைப்பு. அவ்வளவுதான். திருடன் மெதுவாக அரண்மனையை விட்டு வெளியே வந்தான். மறுநாள் காலை ஒரு காவி வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். சந்நியாசிகள் கோலத்தில் சாதுக்களில் ஒருவனாகத் தானும் போய் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரம் கழித்து அரண்மனையிலிருந்து சில அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு சந்நியாசியிடமும் போய் மன்னனின் மகளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டார்கள். ஆனால் இதற்கு யாரும் சம் மதிக்கவில்லை.

அரண்மனை அதிகாரிகள் மிகவும் கெஞ்சிக் கேட்டுப்பார்த்தார்கள். சாதுக்கள் யாரும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒருவர் இதைப் பார்த்துக்கொண்டு மிகுந்த ஆவலுடன் உட்கார்ந்திருக்கிறார் - 'இன்னும் அவர்கள் என்னிடம் வர வில்லையே' என்ற ஏக்கம் அவனுக்கு.

கடைசியாக அந்த அதிகாரிகள் இவனிடம் வந்து ''இளவரசியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்'' என்று பயபக்தியோட கேட்டார்கள். அவன் பதில் கூறமால் உட்கார்ந்திருந்தான். அதிகாரிகள் அரண்மனைக்குத் திரும்பிப் போய் விட்டார்கள்.

அங்கே ராஜா ''என்ன நடந்தது?'' என்று கேட்டார். அதிகாரிகள் ''ஒரு வாலிப சந்நியாசி அங்கே உட்கார்ந்திருக்கிறார். ஒருவேளை அவர் இதற்குச் சம்மதிப்பார் என்று தோன்றுகிறது; மற்றைய சந்நியாசிகள் எல்லோரும் மறுத்துவிட்டார்கள்'' என்று கூறினார்கள்.

அதன் பின் ராஜாவே அந்த ஆற்றங்கரைக்குப் போய் அந்தக் கபட சந்நியாசிடம் ''தயவுபண்ணித் தாங்கள் என் மகளை ஏற்று அங்கீகரிக்க வேண்டும்; கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்'' என்று மனப் பூர்வமாக, பணிவாக வேண்டிப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

சந்நியாசி வேடத்தில் இருந்த திருடன் மெதுவாக ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்தார். அவ்வளவு பெரிய ராஜாவே அவனுக்கு முன்னால் கையைக் கட்டிக்கொண்டு அடக்கமாக நின்று கொண்டு இருப்பதைக் கவனித்தான். கொஞ்ச நேரம் யோசிக்க ஆரம்பித்தான். 'நான் உண்மையில் சந்நியாசி இல்லை; சாதுமாதிரி உடை மட்டுமே அணிந்து இருக்கிறேன். இதற்கே ராஜா என்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்.

பணிவாக நின்று பேசுகிறார். அப்படியென்றால் நாம் நிஜமாகவே சாது ஆகிவிட்டால் இதை விடப் பெரிதாக ஏதேதோ காத்துக்கொண்டிருக்கும் போல் இருக்கிறது' எனத் திருடனுக்கு சிந்தனை தெளிவாகியது. அவன் மனப்போக்கு மாறியது. போலி வேடத்தைக் கலைத்தான். கடுமையான முயற்சி செய்தான். நிஜமாகவே சாது ஆகிவிட்டான். பிற்காலத்தில் அவனே ஒரு பெரிய மகான் ஆகிவிட்டான்.

போலி வேடம் கூடச் சில சமயம் எதிர்பாராத நன்மையைக் கொடுக்கும் என்பதை விளக்குவதற்காக ஸ்ரீராம கிருஷ்ணர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்.

இதற்காக நீங்களும் உடனே ஒரு காவி வேட்டியைக் கட்டிக் கொண்டு ஆற்றங்கரையில் போய் கொஞ்ச நேரம் உட்காரலாம் என்று யோசிக்காதீர்கள். அதனால் என்ன நடக்கும் தெரியுமா? அரசனும் உங்களைத் தேடி வரமாட்டார். அதற்குப் பின் நீங்கள் திரும்பி உங்கள் வீட்டிலேயேயும் அடியெடுத்து வைக்க முடியாது.



இரண்டும் கெட்டானாகப் போய் விடும் அர சனை நம்பிப் புருஷ சனைக் கைவிட்ட கதை என்று சொல்வார்களே! அதைப் போன்று இளவரசியை நம்பி மனைவியை கைவிட்ட கதையாக உங்கள் கதையும் மாறிவிடும்.

எதற்கும் எச்சரிக்கை அவசியம் காலத்துக்கேற்றவாறு சிந்தித்துச் செயற்பட்டால் எந்த முயற்சிக்கும் வெற்றி கிடைக்கும் என்று கூறுகின்றார்கள் அனுபவத்தால் உணர்ந்து கொண்ட சான்றோர்கள்.

**கோ. சுவாமிநாதன்**

## பொன்விழாவில் சொந்த நிலத்தில் இயங்கிய திருநாவலூர் சனசமூக நிலையம்



திருநாவலூர் கிராமத்தவர் நாவலர் சனசமூக நிலையத்துக்கு அபிவிருத்தி தேவை என்று பெரி யளவில் நிதி எதனையும் அன்பளிப்புச் செய்வதும் இல்லை. நிலைய நிர்வாகமும் இதற்கான நேரத்தைச் செலவிடுவதும் இல்லை என்பதே உண்மையாகும்.

பாலர் பாடசாலைக்கு காணி வாங்கிக் கட்டடம் அமைத்தல், தற்போதைய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் அமைக்கப்பட்ட கட்டடத்துக்கான காணிக் கொள்வனவிற்கான நிதியை வழங்கல், சனசமூக நிலையத்தின் சார்பாக மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்துக்குக் காணி அன்பளிப்புச் செய்தல் அருகே இருக்கும் மகாமாரி தேவஸ்தான கட்டடத்துக்கான திருத்தவேலைகள் மேற்கொள்ள நிதி அளித்தல் என்று வரிசையாக அடுக்கிக்கொண்டேபோகலாம்.

இந்தக் கிராமத்து உறவுகளின் அர்ப்பணிப்பான நன்மைதரும் பயன்பாடுகளைப் பற்றி உண்மையிலேயே தியாக உள்ளம் கொண்ட நன்மனம் படைத்த கற்பகதருக்கள் என வாழ்த்துக் கூறி வரவேற்க வேண்டிய கடப்பாடு கிராமத்தவர்களுக்கு உண்டென்றே கூறவேண்டும்.

> திருநாவலூர் கிராமத்து இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரின் அயராத முயற்சியால் சன சமூக நிலையத்தின் பொன் விழாக் காலத்தில் சொந்த நிலத்தில் மாடிக் கட்டடத்தில் அது செயற்படத் தொடங்கியது.

நாவலர் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு கால வளரச்சியிலே ஆரம்ப காலத்தில் செயற்பட்ட பின்னர் வெளிநாடு சென்ற சி.வேதநாயகம்பிள்ளை ஒரு லட்சம் ரூபா நிதியை தனது பெயரில் வைப்பிலிட்டு அதன் வட்டிப் பணத்தை மாதாந்தம் நிலையக் கணக்குக்குப் பதிவு இடம் பெறத்தக்க நடவடிக் கைகளை 10 வருடங்களுக்கு மேலாக மேற்கொண் டுள்ளார். இவை நல்ல ஆரம்பம் நல்ல தொடக்கம். இதே வகையான நல்ல சிந்தனைகளையும் அனைவரிடமிருந்தும் இந்த சனசமூக நிலையம் எதிர்பார்க்கின்றது.

இந்த கிராமத்தைச் சேர்ந்த வெளிநாட்டு உறவுகள் தங்களால் பணத்தை மட்டும் தான் அன்பளிப்புச் செய்ய முடியுமேதவிர சனசமூக நிலையத்தை நேரிய பாதையில் இலட்சிய நோக்கோடுகொண்டு செல்லக் கூடிய ஆற்றலும், ஆளுமையும் இந்தக் கிராம இளைஞர்களை சார்ந்ததாகும் என்று அவர்கள் தெரிவிப்பது உண்மையிலும் உண்மையாகும். ஏனென்றால் வெளிநாட்டு உறவுகளால் அனுப்பப்படும் நிதியை ஏனோ தானோ என்று செலவு செய்யாது சனசமூக நிலையம் நிலைத்து நின்று செயற்படக் கூடியவகையில் நிதியைச் சேமித்து தன் காலில் நின்று செயற்பட வைத்தவர்கள், வைப்பவர்கள் இந்தக் கிராம இளைஞர்களும் பெரியோர்களுமே.

வெளிநாட்டு இளைஞர்களின் உதவியுடன், இந்தச் சனமூக நிலையத்துக்கென பாலர் பாடசாலைக்கான கட்டடம் கடந்த 2001ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு கட்டடம் தோற்றம் பெற்றுக் கொண்டிருக்கையில் 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதப் பிற்பகுதியில் சுனாமி பேரிடர் ஏற்பட்டது. சுனாமி பேரிடர் கீழ் இந்தச் சனசமூக நிலையத்துக்கென பாலர் பாடசாலை அமைக்க நிதி வழங்க நிறுவனம் ஒன்று முன்வந்தது. இதனைப் பயன்படுத்தி சனசமூக நிலையத்துக்கு அண்மித்த இடத்தில் அந்த நிறுவனத்தின் உதவியுடன் பாலர் பாடசாலைக் கட்டடம் உருவானது. இது பற்றி ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

பாலர் பாடசாலைக்கென வெளிநாட்டு இளைஞர்களின் உதவியுடன் கட்டப்பட்ட கட்டடம் சனசமூக நிலையத்துக்கான கட்டடமாக மாற்றி அமைக்கப்பட்டது. அந்தக் கட்டடம் மாடிக்கட்டடமாக உருவானது. 4 லட்சம் ரூபா செலவிலும் சுற்றுமதிலுடன் கூடியதாக சனசமூக நிலையம் மாடிக் கட்டடமாக உருவானது.

நாவலர் சனசமூக நிலையத்துக்கான புதிய மாடிக் கட்டடம் உருவாக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் இந்தக் கிராம இளைஞர்களும், குறிப்பாக விவேகானந்தன் என்பவர் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் கட்டட நிதியாக வழங்கியிருந்தார். இந்தக் கட்டடம் புனர்வாழ்வு அமைச்சகம் இரண்டு லட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது. மொத்தமாக 10 லட்சம் ரூபா செலவில் தோற்றம்பெற இந்தச் சனசமூக நிலையத்துக்கான புதிய மாடிக் கட்டடம், சனசமூக நிலையத்தின் பொன் விழாக்காலமான கடந்த 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

புதிய மாடிக்கட்டடத்தில் தற்போது இயங்கி வரும் திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையத்தை கட்டடத்தின் கீழ்த்தளம் பத்திரி கைகள் வாசிக்கும் வாசிப்புக் கூடமாகவும், நூல் நிலையமும் கொண்டதாகவும் மேல் மாடி ஒன்று கூடல் மண்டபமாகவும் இயங்கி வருகின்றது. தற்போது ஒன்று கூடல்கள் பொது விடயங்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் மேல் மாடியில் கணினி வகுப்பு ஒன்றை இந்தக் கிராமத்து வளரும் இளைஞர், யுவதிகளின் நலன் கருதி ஆரம்பிப்பதற்கு சனசமூக நிலையம் தீர்மானித்துள்ளது. கணினிப் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்க இந்தக் கிராமத்து புலம் பெயர் நாடுகளில் வதியும் இளைஞர்களின் நிதி எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தக் கிராமத்தின் கல்வி, கலாசாரம், வாழ்வியல் முன்னேற்றங்களுக்காக புலம்பெயர் நாடுகளில் வசித்து வரும் இளைஞர்களின் கடுமையான உழைப்பு, உதவிகள் தான் இந்தக் கிராம முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இருந்து வருகின்றது என்றால் அது மிகையாகாது.

சனசமூக நிலையத்தின் பொன் விழாக் காலத்தில் சொந்த நிலத்தில் சொந்தப்பணத்தில் கட்டிய மாடிக்கட்டடத்தில் சனசமூக நிலையத்தை மாற்றம் பெற வைத்த பெருமை இந்தக் கிராமத்து இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரையும் சேர்ந்ததாகும்.

திருநாவலூர் நாவலர் சனசமூக நிலைத்துக்கு பயணம் மேற்கொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்தச் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை நேரில் அவதானித்து பாராட் டுக்களைத் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல் இந்தக் கிராம மக்களின் வாசிப்பு அறிவை மேம்படுத்துமுகமாக, கடந்த ஐப்பசி மாதம் முதல் உதயன் நாளிதழை இலவசமாக வழங்கி வருகின்றார்.

தமிழையும், சைவத்தையும், விவசாயத் தொழிலையும் மூச்சாகக்கொண்டு இந்தக் கிராம மக்கள் வாழ்கின்றனர் வரும் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாசிப்புத் தேவைகள், நூலகத் தேவைகள், சமூகத்தேவைகள், கல்வித் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை நிறைவேற்றி கிராம மக்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல தமிழையும், சைவத்தையும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வழியில் உதித்து பல்லாண்டு காலமாக அளப்பரிய சேவைகளைப் புரிந்துவருகிறது. திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையம். இது தன்னாலான பணிகளைக் காலம் காலமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

(முற்றும்)

**கர்ணன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளவே முடியாது

கொழும்பு,ஜன.3

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப் படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இயங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் முஸ்லிம் வாக்காளர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு நன்மைகள் கிடைக்கப் போவதில்லை என்று அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சில் ஈடுபடுகின்றபோது வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

> வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு நன்மைகள் கிடைக்கப் போவதில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் ரிசாட் பதியூதீன்



# மாணவர் சங்கத்துக்கு தடை நீக்கப்பட்டது

கொழும்பு,ஜன.3

பேராதனைப் பல் கலைக்கழக மாணவர் சங்கத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணை வேந்தர் உள்ளிட்ட குழு கலந்தாலோசித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இரு நிபந்தனைகளின் அடிப்படையில் மாணவர் சங்கத்திற்கு தடை நீக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

மாணவர்களின் உயிருக்கு பாதுகாப்பற்ற வகையிலான செயற்பாடுகளை தவிர்த்தல் மற்றும் பல்கலைக்கழக கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படாது செயற்படல் ஆகியன நிபந்தனைகளின் அடிப்படையில் தடை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பு நோக்கி பேரணி செல்ல முயற்சித்த நிலையில் அதனை பொலிஸார் நீதிமன்ற செயற்பாடுகள் ஊடாக தடை செய்தனர். இதற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக பல்கலைக்கழக சங்கத்துக்கு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொலிஸ் நிலையங்களில் இணையங்கள்

கொழும்பு,ஜன.3


இலங்கையின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இணையத்தளங்களை அறிமுகப்படுத்தும் திட்டம் இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தமக்கிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் பொதுமக்கள் தமது தகவல்களைப் பரிமாறிக்கொள்ளமுடியும் என்று அவர் தெரிவித்தார். இதனால், நாட்டில் நடைபெறுகின்ற விடயங்களை அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய வசதி ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாடுகளை இணையங்களின் மூலம் பெற்றுக் கொள்ளும் உடன் நடைமுறைக்கு வராது என்று அவர் தெரிவித்தார். இந்தப் புதிய திட்டத்தின் மூலம் பெருமளவில் நன்மைகளைப் பெற முடியும் என்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்ப டுத்த முடியும் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அபராதங்களை குறுஞ்செய்தி மூலம் செலுத்தும் முறை ஒன்றையும் இலங்கையின் பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தின் உத்தியோகபூர்வ கொடி நேற்று திங்கட்கிழமை கொழும்பில் ஏற்றப்பட்டது. இலங்கைக்கான இந்தோனேஷிய தூதர் தபார் ஹுசைன், இலங்கைக்கான வியட்நாம் தூதர் மயோ லிவின், இலங்கைக்கான மலேஷிய தூதர் அஸ்மி செய்னுடின் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

# இரட்டைக் கொலை வழக்கில் கணவன், மனைவி கைது

கொழும்பு, ஜன.3

நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை மனிதாபிமானமற்ற முறையில் கொலை செய்ய உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு தம்புத்தேகம நீதிவான் எம்.சீ.கெக்கிரிதெனிய உத்தரவிட்டார்.

நாவற்குளம், காளிவுல்வெல பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார்.

இந்தக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் கணவர் என்று நொச்சியாகம பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ச)

# கைதிகளின் உற்பத்திகளை விற்பனை செய்ய புதிய கட்டடம்

கொழும்பு,ஜன.3

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள சிறைக் கைதிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்காக வெலிக்கடை சிறைச்சாலைக்கு அண்மையில் இரு மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் டபிள்யூ.பி.கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டடத்தின் கீழ் தளத்தில் சிறைக் கைதிகளால் உற்பத்தி செய்யப்படும் பலதரப்பட்ட உணவுப் பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்படும். மேல் தளத்தில் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் தும்புத்தடிகள், விளக்குமாறுகள், நில விரிப்புக்கள் உட்பட வீட்டுத் தளபாட வகைகள் விற்பனை செய்யப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்கான தளபாடங்கள் சுகாதாரப் பாதுகாப்பு கொண்டவையாக, உறுதியானவைகளாக மற்றும் தர நிர்ணயங்களுக்கு அமைந்தவைகளாகத் தயாரிக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பொருள்கள் கட்டுபடியாகும் விலைகளுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# உணவுக்கு ஒவ்வாத வர்ணம்: இரு வர்த்தகருக்கு எதிராக வழக்கு

கொழும்பு,ஜன.3

கொழும்பு, காலிமுகத் திடலில் உள்ள விற்பனை நிலையங்களில், உணவுப் பொருள்களுக்குப் பயன்படுத்த முடியாத வர்ணக் கலவைகளைப் பயன்படுத்திய இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகர பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே இவை கண்டறியப்பட்டதாக மாநகரசபையின் பிரதம பொதுச் சுகாதார அதிகாரி பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார். புடைவைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒருவகை வர்ணம், உணவுகளில் சேர்க்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் காலிமுகத் திடலில் விற்பனையில் ஈடுபடுகின்றவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விற்பனையாளர்களுக்கு விசேட சீருடை வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். இதனிடையே இவ்வாறான கலப்படங்களில் ஈடுபடுபவர்கள் கண்டறியப்பட்டால் கடும் தண்டனை பெற்றுத்தரப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# தேர்தலுக்கான அட்டவணை இல்லை

கொழும்பு, டிசெ, 3

இந்த ஆண்டில் தேர்தலுக்கான அட்டவணையொன்று இல்லை. ஆனால், வடக்கின் மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு தீர்மானிக்குமாயின் அது தொடர்பாக தயாராகவே இருக்கிறோம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் வேட்புமனுக்கள் கோரப்பட்டு இரு தடவைகள் பிற்போடப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் மார்ச் 10 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்டிருந்தாலும் கூட அவை கடந்த ஆண்டின் தேர்தல் அட்டவணைக்கு உரியதே எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22)

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக செனட்சபை அமைக்க அரசு திட்டம்

கொழும்பு, ஜன.3

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக செனட்சபை ஒன்றை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக ஆளும்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக செனட்சபை உறுப்பினர்களையும் தெரிவுசெய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செனட்சபைக்காக புத்திஜீவிகளை நியமிப்பதுடன், இன விகிதாசார அடிப்படையில் உறுப்பினர் தெரிவு மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார். செனட்சபை மூலம் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க முடியும் என்ற வகையில், உலகின் சில நாடுகளில் நடைமுறையில் காணப்படும் செனட்சபை முறைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதும், நாட்டுக்கு பொருத்தமானதுமான செனட்சபை முறைமையை விரைவில் அறிமுகம் செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மனைவி தாக்கி கணவன் மரணம்

கொழும்பு,ஜன.3

பதுளை - மெதபத்தான பகுதியில் கணவனை மனைவி பொல்லால் அடித்துக் கொலை செய்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் வந்த கணவன் மனைவியுடன் கலகத்தில் ஈடுபட்டு தாக்குதல் நடத்தியுள்ளார். இதன் போது அடியை தாங்கிக் கொள்ள முடியாது ஆத்திரமடைந்த மனைவி கணவனை பொல்லால் தாக்கியுள்ளார். [illegible] கணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (ச)

# ஆளில்லா உளவு விமானம் தயாரிப்பு

கொழும்பு,ஜன.3

இலங்கை விமானப் படையினர் ஆளில்லா உளவு விமானமொன்றை வெற்றிகரமாகத் தயாரித்துள்ளனர். இந்த விமானத்தைப் பயன்படுத்தி நூறு கிலோ மீற்றர் தூரம் வரையில் ஆளில்லாமல் உளவுப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஆளில்லா உளவு விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அதிக பணம் தேவைப்படும் என்ற காரணத்தினால், [illegible] யினர் உள்நாட்டிலேயே ஆளில்லா உளவு விமானத்தை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

பத்து முதல் பதினைந்து கிலோ மீற்றர் வரையில் பறந்து சென்று உளவுப் பணிகளில் ஈடுபடக்கூடிய ஓர் விசேட உளவு விமானம் ஒன்றையும் விமானப் படையினர் தயாரித்துள்ளனர்.

சைபர் தாக்குதல்களை முறியடிக்கக்கூடிய விசேட கணினி ஆய்வுகூடமொன்றை விமானப்படையினர் உருவாக்கியுள்ளனர். இந்த ஆய்வுகூடம் நாட்டின் முக்கிய கணினிக் கட்டமைப்புக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்காணித்து அவற்றை முறியடிப்பதற்கு பயன்படுத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பஸ் விபத்தில் 28 பேர் படுகாயம்

கொழும்பு,ஜன.3

இரத்தினபுரி - கஹவத்தை வீதியில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற பஸ் விபத்தில் 28 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடக்கவெல இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் 38 கிலோ மீற்றர் பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதியில் இலங்கையரைக் காணவில்லை

சவூதி அரேபியாவில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த (வயது 57) இலங்கையைச் சேர்ந்த ஆணொருவர் கடந்த மாதம் 19 ஆம் திகதியிலிருந்து காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கடந்த 10 வருடங்களாகக் குறித்த நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர் என்று இலங்கையில் உள்ள அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

குறித்த இலங்கையர் விபத்து ஒன் றில் சிக்கியதாக முன்னர் தகவல் வெளியாகியிருந்தது.

தமது தந்தையின் நிலை குறித்து அவருடன் தொழில்புரிந்த பிறிதொருவர் ஊடாகவே அறிந்து கொண்டதாக மகன் தெரிவித்துள்ளார்.எனினும், தொழில்புரிந்த நிறுவனத்தில் இருந்து எந்தவித உத்தியோகபூர்வ தகவல்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

## அரங்கேற்ற விழா





சங்கீத ரத்தினம் எம்.சிதம்பரநாதன் அவர்களின் மாணவனும்

திரு திருமதி பரஞ்சோதி சாரதா

தம்பதியரின் புதல்வனுமான

செல்வன் பரஞ்சோதி சாரங்கன்

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்

காலம் : 04.01.2012 புதன்கிழமை பி.ப 2.30 மணி

இடம் : துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்

**தலைவர்**
கலாநிதி ஆறு, திருமுருகன்
(அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்)

**ஆசியுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய -ஸ்வாமிகள்
(நல்லை ஆதின முதல்வர்)
பிரம்மஸ்ரீ சி.ஜெயானந்த சர்மா(பிரதமகுரு, வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம் - மூளாய்)
வணபிதா ப.தேவமித்திரன் (இசையாசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி )

**முதன்மை விருந்தினர்**
திரு.நோயல் A.விமலேந்திரன் (JP)
(அதிபர் , யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை )

**சிறப்பு விருந்தினர்**
பேராசிரியர் வி.சிவசாமி
(முன்னாள் தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், சங்கீதம்)

**கௌரவ விருந்தினர்**
திரு.மு.திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற நீதிபதி)
திரு.ச. கைலாயநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பளை)

**அரங்கிசைக் கலைஞர்கள்**
பாட்டு: சங்கீத பூஷணம் எஸ்.பத்மலிங்கம்
வயலின் : இசைஞான திலகம் ஆர். இராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: செல்வன் ப.சாரங்கன்
கஞ்சிரா: கலாவித்தகர் வி.ரமணா
முகர்சிங்: கலாவித்தகர் என்.சதீஸ்குமார்
மதிப்பீட்டுரை : சங்கீத வித்துவான் A.K. கருணாகரன்
(விரிவுரையாளர், இசைத் துறை-யாழ். பல்கலைக்கழகம்)

மூளாய், சுழிபுரம்
0777487976

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பரஞ்சோதி குடும்பத்தினர்.

# மானிப்பாய் பிரதேச சபை 'பட்ஜெட்' பார்வைக்கு

நவாலி, ஜன.3

மானிப்பாய் பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்கப்பட் டுள்ளது. இவற்றைப் பொது மக்கள் தலைமைஅலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் காரியாலய நேரங்களிலும் பார்வையிடலாம் என்று பிரதேச சபையின் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (வ-100)

## பொருள்கள் அகற்றல்

நவாலி, ஜன.3

மானிப்பாயிலுள்ள வர்த்தக நிலையங்கள் முன்பாக விற்பனைக்கு வைக் கப்பட்டிருந்த பொருள்கள், பொலிஸாரின் உதவியுடன் மானிப்பாய் பிரதேச சபையினரால் அகற்றப்பட்டுள்ளன.

இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சபையின் உப தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-100)

## வீதி புனரமைப்பு

குருநகர், ஜன.3

குருநகர் பாங்ஷால் வீதி காப்பெற் வீதியாக தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை யாழ். பிரதான வீதியில் குன்றும் குழியுமாகக் காணப்படும் இடங்கள் தார்க் கலவை கொண்டு செப்பனிடும் பணிகள் இடம்பெறுகின்றன.

இதனால் இந்தப் பகுதி மக்கள் சிரமமின்றி போக்குவரத்துச் செய்ய முடிவதாகத் தெரிவிக்கின்றனர்.

(வ-51)

## வாழ்த்துகின்றோம்



இறைபக்தி, அன்பு, பண்பு, பேச்சாற்றல், கலைஞானம்
அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற

உயர்திரு இராசையா ஸ்ரீதரன்
அவர்கள்

கலாபூஷணம் விருது பெற்றமையையிட்டு
நாம் பெருமை கொள்வதுடன்
அவருக்கு எமது வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
தொடரட்டும் ஐயா உங்கள் பணிகள்!

(ச/8566) (2,6,7)

யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோயில்,
நிர்வாக சபையினரும், அத்தியடி வாழ் மக்களும்

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



(17.12.2011) சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்
'கலாபூஷண' விருது
பெற்ற கலைவாணர் நாடக மன்றக் கலைஞர்
இராசையா பீதாம்பரம்
(பற்குணம் அண்ணா)
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல
சிறப்புக்களைப்
பெற்று நீடூழி வாழ
கோண்டாவில் ஸ்ரீ தில்லையம்பதி சிவகாமி
அம்பாள்அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

(12380) (2,6,7)

வாழ்த்துபவர்கள்:-
மூத்தொளி

## யதுர் என்ரபிறைஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி

**வேலைத்தளத்தில் கடமையாற்ற கீழ்வருவோர் உடன் தேவை**

1) இரவு, பகல் தங்கி நின்று காவலாளி கடமைபுரிய காவலாளி (மாதச் சம்பள அடிப்படை - சமைத்துச் சாப்பிடக்கூடியவர்)
2) கொங்கிறீட் மிக்சர், போக்கர், வைபிரேட்டர், சிறிய றோலர் முதலிய சிறிய இயந்திரங்கள் இயக்கக் கூடிய மெக்கானிக் அனுபவம் உள்ள சிறிய இயந்திர இயக்குநர்.
3) மேசன் உடன் கூலியாள்கள் - (தங்கி நின்று குழுவாகச் சமைத்துச் சாப்பிடக்கூடியவர்கள். சம்பளம் நாள்கூலி அடிப்படை)
4) காபெண்டர் பால வேலை சட்டரிங் தெரிந்தவர்கள் - கிளிநொச்சியில் தங்கி நின்று சமைத்து சாப்பிடக்கூடியவர்கள் - சம்பளம் நாள்கூலி அடிப்படை.
5) வவுனியா அலுவலகத்தில் பெண் எழுதுவினைஞர் ஆங்கிலம், கொம்பியூட்டர் - M.S. office, Photoshop, கணக்கியல் ஆகியவற்றில் சிறந்த அனுபவத்துடன் சிங்களம் பேசத் தெரிந்தவர் விரும்பத்தக்கது.
6) லொறி /டிப்பர் சாரதி - வவுனியா நாள் கூலி அடிப்படை.

**தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்:- காலை 8 மணி - மாலை 4.00**
**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 024 5671232**
யதுர் என்ரபிறைஸ், 57/29, ஆதிவிநாயகர் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா. உரிமையாளர்.

(12389) (2-6-7)

## திருமறைக் கலாமன்றம்





வழங்கும்

இந்தோ-கனடா நடன அக்கடமி அதிபரும் கனடா திருமறைக் கலாமன்ற நடன
ஆசிரியருமான நர்த்தன வித்தகி ஸ்ரீமதி பத்மினி ஆனந் அவர்களின்
மாணவிகளும் திருமறைக் கலாமன்ற கலைஞர்களுமாகிய
செல்வி சுகாஸ்னி ஸ்ரீகுமார்
செல்வி சௌமி ஸ்ரீகுமார்
ஆகியோரின்

## சலங்கையின் நாதம்

காலம் :நாளை (04.01.2012) புதன்கிழமை
நேரம் : பி.ப 4 மணி
இடம் கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்
செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
(முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

முதன்மை விருந்தினர்
திரு. வெ. மகாலிங்கம்
(இந்திய துணைத்தூதர், இந்திய துணைத்தூதரகம், யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்கள்
நாட்டிய பேராசான் கலைஞர் வேல். ஆனந்தன்
(ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், அழகியற்கல்வி
முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபை, திருகோணமலை)
ஸ்ரீமதி. பத்மினி செல்வேந்திரகுமார்
(ஆசிரிய ஆலோசகர் (நடனம்), யாழ். வலய கல்வித் திணைக்களம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றமும், ஸ்ரீகுமார் குடும்பத்தினரும்

(சி/8562)(6,7,8)

## NEW SCIENCE HALL PHYSICS

**2012**

மின்னியல் - செவ்வாய் : 3.00 - 5.30 (PM)
ஆரம்பம் : 03.01.2012

காந்தப்புலம் - சனி, ஞாயிறு 6.15-7.15 (AM)
ஆரம்பம் : 07.01.2012

இலத்திரனியல் - பிரிவு 1 : சனி, ஞாயிறு 7.15 - 8.30 (A.M)
பிரிவு 2: சனி, ஞாயிறு 11.00 - 12.15
ஆரம்பம் : 07.01.2012

**2013**

அலைவுகளும் அதிர்வுகளும் - புதன், வெள்ளி - 6.30-7.30(A.M)
ஆரம்பம் : 04.01.2012

ஒளியியல் - சனி, ஞாயிறு 9.30 - 10.45 (A.M)
ஆரம்பம் : 07.01.2012

**2014**

அடிப்படை பௌதிகவியல் பிரிவு 1: சனி , ஞாயிறு 12.30- 1.30(PM)
ஆரம்பம் : 07.01.2012
பிரிவு 2 : செவ்வாய், வியாழன் 7.30 - 8.30 (AM)
ஆரம்பம் : 03.01.2012

BY: R குகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பாடசாலைகளின் ஜி.சீ.ஈ உயர்தரப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நீண்ட இழுபறிக்குப் பின்னர் வெளியகியுள்ளன. இதனடிப்படையில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப் பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளவற்றில் சில.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்**

ரா.தனுசா-3 ஏ, சி.சுகந்தினி-3 ஏ, ந.லொசாந்தினி-ஏபிசி, கு.கல்யாணி-ஏ பி சி, ஆ.கஜேந்தினி-ஏ சி எஸ், செ.காயத்திரி-பி 2 சி,லி.டயானி-பி 2 சி, சி.தாரணி- 2பி எஸ்;ர.பிருந்தன்- பி சி எஸ், லோ.திலக்சனா- பி சி எஸ், வ.சிவராகினி-பி சி எஸ், ரா.துளசிகா-3 சி, சி.நிவேதா-3 சி,ம.கலைச்செல்வி-3 சி, உ.டிலானி-2 சி எஸ், க.யசிந்தா-2 சி எஸ், செ.நிரேகா-2சிஎஸ்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

**கணிதப்பிரிவு**

க.பிரதீப்-3 ஏ, த.ஆரண்யா- 2ஏ பி, மே.ஜோ.ரோஜர் ருவீனஸ்- ஏ பி சி, ந.ராகவன்- பி சி எஸ், சி.ஜெயராணி-பிசிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

உ.பிரணவதர்சன்- ஏ பிசி, பே.அபிதா-2பி சி, கி.அபர்ணா -பி 2சி,கு.துஷாந்-பி சி எஸ், ப.நிஷானி-3 சி,கி.சுஜாதா-பி சி எஸ், சி.கௌதமி-பி 2 எஸ், சி.சரண்யா- 2 சி எஸ், த.ஹம்ஷாலினி-2சி எஸ், தே.பாமினி-2பி எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

ப.பரதன்-ஏபிசி, இ.துஷ்யந்தன்-ஏபிசி,தி.தர்ஷிகா- ஏபி எஸ், இ.அருண்- 2பி சி,வி.பிரியங்கா- பிசி எஸ்.

**கலைப்பிரிவு**

அ.சஞ்சீவன்-3 ஏ, கு.நிஷாளினி-2ஏ பி,ச.ஆர்த்தியா- ஏ 2பி, அ.ஞா.லூக்காஸ் நீல்-ஏ 2பி, ஞா.ரேணுகா-ஏ 2பி, சி.கவிப்பிரியா-ஏ 2பி,ஆ.நரேன்- ஏ 2பி, பொ.தேனுஜா-ஏ பி சி, வி.ஆஷா- ஏபிசி, ஆ.நிரோஜினி-ஏபிசி.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

**உயிரியல் துறை**

க.கபீர்த்தனா-ஏபிசி,த.நிதர்சனா-2சிஎஸ்,யோ.தர்சிகா-2சி எஸ்,கு.ஜசோதரன்-சி 2 சி, இ.டிலானி-சி 2எஸ்.

**கணிதப்பிரிவு**

ந.ஜதீஸ்கரன்- ஏ சி எஸ், வி.கோகுலன்-பி சி எஸ், ஜெ.சந்துருகேசன்-பி2சி,கா.அனுதீபன்- 2சி எஸ்,கா.கவிவர்ணன்-2சி எஸ், பா.சுஜீந்தன்-2சி எஸ், சி.ரமணீகரன்- சி 2எஸ்.

**வணிகத்துறை**

ஆ.சிறீரங்கன்-பி 2சி, ஆர்.தரணீதரன்-பி2 சி.

**கலைத்துறை**

க.ஸ்ரீரஜிதன்-2ஏ பி, யோ.ஜெயகணேஸ்-ஏ 2பி,ப.டயூரா- ஏ 2பி,த.தக் சகரி-ஏ2பி, க.சிந்துஜா-3பி, க.கஜந் தினி-ஏபிசி, க.லவன்ராஜ்-ஏபிசி, ப.நிரோசன்-ஏபிசி, பா.சுவர்ணியா-ஏ 2சி, ஆர்.தஜீவன்-ஏ 2சி, ஜெ.கஜஸ்ரன்-ஏ 2பி, எஸ்.தசாங்கன்-ஏ பிசி, கே.கலிபனா-ஏ 2சி.

**கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

ஆர்.நிரோன்-2பி சி, செ.வர்மிலா- ஏ2பி, ஆர்-குமுதன்-2ஏபி,என்-பவீந்திரன்- 3பி, த.மதுசூதனன்-ஏ 2சி,மு.கௌதமன்-3சி, ஆர்.விதுசன்-சி 2எஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

ஆர்.றஞ்சினி-3ஏ, ரி.துவாரகன்-2ஏ பி, ஆர்.ஆர்த்தியா-பி 2சி, எம்.யமிலா-பி சிஎஸ்,சொ.சாமந்தி-2பி சி.

**வர்த்தகப்பிரிவு**

க.செல்வச்சந்தி ரன்- ஏ2பி, ப.தியாளன்-ஏ 2பி,ஆர்.வினோத்-2ஏ சி, சி.பிருந்தா- ஏபிசி, செ.விஸ்ணுப்பிரியா-பி 2சி,என்.ஆரூரன்-2பி சி.

**கலைப்பிரிவு**

கே.திவாகரன்-2ஏ பி,ஆர்.விக்கிரமன்-ஏபிசி, கே.மயூரி-ஏபிசி, எஸ்.மேரிஜெனிற்றா-ஏபிசி,ஆர்.தனுசா-ஏ2சி, ரி.நிருசாந்-2பிசி,கே.பானுரேகா-ஏ2பி, ஆர்.தாட்சாயினி-2ஏ சி, எஸ்.ரகுவரன்-ஏபிசி.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

**ஆங்கிலமொழி**

எஸ்.செல்வநித்திலன்-3ஏ, ஜெ.ஜோய் மாதவன்-2பி சி.

**தமிழ் மொழி**

எஸ்.அனிஸ்லி பிலிப்-2ஏபி, ரி.பிராங்ளின் நிராஜ்-ஏ2பி, ஜெ.ஜெனார்த்தன்-ஏபிசி.

**உயிரியல் பிரிவு**

**தமிழ் மொழி**

ஏ.நிசாந்தன்-2ஏபி,ஏ.வி.வெனிஸ்லோஸ் துஷான்-பி2சி,எஸ்.சி.அன்ரோஜிந்-2பி எஸ், வை.சுகந்தன்-3சி.

**வர்த்தகப்பிரிவு**

ரி.கேசவன்-3பி,கியூசி மரீன் கௌதம்-பி 2சி,கே.சியாம்ராஜ்-பி 2சி, பி.லோரன்ஸ் குணநாதன்-3சி.

**கலைப்பிரிவு**

ஜே.ஆர்.றொனால்ட்- 3ஏ, ஜே.ஜே.ஜீவகன்-ஏ 2 பி, இ.ஜீ.ஜொனின்சன்-ஏ2பி, என்.ராஜ பிரதாபன்-ஏ 2பி,ஆர்.ஜனத் அபிஷேக்-ஏபிசி,ஆர்.ஏ.மியூலன் டிறோசி- ஏபிசி, எஸ்.யூட் கமில்டன்-ஏபிசி, எஸ்.எட்வின் நரேஷ்- ஏபிஎஸ், எம்.எம். றூவின் நிதர்சன்-ஏ2சி, ஜே.ஜே.வின் சன் டிப்பி நிற்றோ-ஏ2சி, சி.ஜொனி சன்-ஏசிஎஸ், ஏ.அமலதாஸ்-ஏசிஎஸ், எல்.எம்.நெல்சன் விமல் ராஜ்-ஏசிஎஸ்,ஏ.நிசாந்தன்-ஏசிஎஸ், பி.நிஸ்ஷாந்-ஏ 2எஸ்.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

இ.அர்ச்சனா-3ஏ, கி.இலக்கியா-2ஏபி, அ.அனுசியா-2ஏபி,இ.றோமிகா-2ஏபி, த.லாவண்யா-2ஏ.பி,சி.சுரேக்கா-2ஏபி, தே.சாளினி-2ஏபி,யோ.தபோதினி-2ஏசி, க.பிரியங்கனா-2ஏ சி, சு.கோபிகா- ஏ2பி, ஜெ.ஜெயதீபா-ஏ 2பி, கி.டிசானி-ஏ 2பி

கௌதமி-ஏபிசி,சு.கௌசிகா-ஏபிசி,பு.கஜரட்சினி-ஏபிசி,பா.சாளினி-ஏபிசி, சி.அனுலா-ஏ2சி, வி.கௌசிகா-எ 2சி, தி.மயூரதி-ஏசிஎஸ், ச.கயானி-3பி, சி.ரசிகா-2சி எஸ்,ம.நித்திகா- 2பிசி, சி.ஜிந்து- 2பிசி, க.மேரி அல்பேட்டா-ஏபிஎஸ், ரா.இந்திரோமா-2பிசி, எ.எலினோ கஜேந்தினி-2பிசி, சௌ.அகிலா-2பிசி, ரா.டினோசா-2பிசி, ர.தர்சிகா-2பிசி, க.மோகனாம்பிகை-2பிசி, சி.கீர்த்திகா-2பிசி, ஆ.சரண்யா-2பிசி, க.ரஜித்தா-2பிஎஸ், லோ.லக்சனா-2பிஎஸ், அ.றஜினா-2பிஎஸ், பா.செபரூபவஞ்சனி-பி2சி,ம.வக்சலா-பி2சி, கு.வைஷ்ணவி-பி2சி.

சி.கல்சிகா- பி2சி, ரா.குலதீபா-பி2சி, ம.மதுரா யினி-பி2சி, சி.பிரதீபா-பி2சி, க.சுயனி-பி2சி, பா.தர்சிகா-பி2சி, அ.குயிலினி-பி2சி, யோ.நிவேகா- பி2சி, வி.நிவிசா-பிசிஎஸ், ப.வாகினி- பிசிஎஸ், ச.கேமலதா-பிசிஎஸ், க.றோமிகா- பிசிஎஸ், கு.பௌசிகா- பி சிஎஸ், இ.ஜெனனி- பிசிஎஸ், செ.நிரோஜா- பிசிஎஸ், ப.தாட்சாயினி-பிசிஎஸ், ம.ஆசா- 3சி, க.கேமாவதி-3சி, உ.டிசானி-3சி, க.கிறே சினி-3சி, செ.லசிந்தா- 3சி,ச.அஜந் தலா-3சி.

**வர்த்தகப்பிரிவு**

ல.பிரமிலா-ஏபிஎஸ்,தி.திவ்யா-2சி எஸ்,நா.சுபாஜினி-3சி, ப.அருட்செல்வி-2சிஎஸ், ற.டிலக்சா-2சி எஸ், வ.நிரோஜினி-2சிஎஸ்,செ.கேமாவதி-2சி எஸ் பா.சஜித்தா சி 2எஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

லோ.நிவேக்கா-பி2சி, த.சஜிதா-பி 2சி, யோ.தர்மிலி-3சி, கி.தர்சனா-சி 2எஸ்.


**TEACHERS IMMEDIATE VACANCIES**

**Jaffna Branch**

1. Montessori Teachers-AMI qualified only (female)
(Experienced Pre-school trained teachers will be considered too.)
- Fluency in English
- 2-3 year Experience
- Attractive salary waits the right Candidate.

Forward your application, along with your CV, Photograph & contact number to

Director,
LAKELAND INTER-AMERICAN SCHOOL
MONTESSORI & DAY CARE CENTRE
No. 154, Brown Road, Jaffna.
TP NO : 0212226242, 0214923390
E-mail : aerotours@aerolanka.aero

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் (பெற்றோல் சைட் ஒழுங்கையில் 5 அறைகள் 2 வரவேற்பறைகள் கூடிய சகல வசதிகளுடன் 6 வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு:
0756715762, 0779149221

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி வடக்கு, குறுக்கு றோட்டில் தெற்குப் பக்கமாக உள்ள 8 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
0776147340

**ஞானோதய அக்கடமி - சாவகச்சேரி**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

அநேக மாணவர்களின் பல்கலைக்கழக கனவை நனவாக்கிய அதிதிறமையும் அனுபவமும் வாய்ந்த முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்


**A/L 2014 - A/L 2012 Day Calss**

*(கலை, வர்த்தக,கணித, விஞ்ஞான பிரிவுகள்)*

ஆரம்பம் : 05.01.2012 வியாழன் மு.ப 9.00
மாணவர்களே உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்க!
- பல முன்னணிப் பெறுபேறுகளை அள்ளித் தந்த ஒரே நிறுவனம்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த சிறப்புத் தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டல்
- நீண்டகாலமாக தென்மராட்சி மாணவர்களுக்கு கல்வி சேவையை வழங்கி வரும் ஒரே நிறுவனம்.

நிர்வாகம்.


**நெஞ்சை விட்டகலா நினைவலைகள்**



மலர்வு 1931 - 04 - 11
உதிர்வு 1985 - 03 - 29

அமரர் **குமாரன் இராமசாமி**



மலர்வு 1941 - 02 - 25
உதிர்வு 2010 - 12 - 16

திருமதி **இராமசாமி பொன்னம்மா**

அன்புக்கு இலக்கணமாய்
அறிவுக்கு அகல்விளக்காய்
பண்புக்கு இருப்பிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
அமைந்த உம் திருமுகத்தை
காண ஏங்குகின்றோம்
ஓடி வர மாட்டீரோ...!

80/1, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(12145)(2-8-9)

**வீட்டுக் கிருத்திய அழைப்பு**

திருமதி **செல்வராணி சிவசுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற கணித ஆசிரியை)



04.12.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் இறுதிக் கிரியையிற் கலந்து துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றி. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத்தில் 03.01.2012 செவ்வாய்க்கிழமை காலை வீட்டுக் கிருத்தியம் நடைபெற்று தொடர்ந்து மதியபோசனம் இடம்பெறும். இந்நிகழ்வில் நேரில் அழைப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் இதனைத் தனிபட்ட அழைப்பாகக் கருதி நிகழ்வில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ரமணி குடும்பத்தினர்.

[12434][9-7-8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்ப பிரச்சினை ஒன்றில், முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். நீங்களே பணப்பற்றாக்குறையைச் சந்திக்கும் நேரத்தில் மற்றொருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். ஆன்மிக விடயங்களில், தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். நண்பர்கள் சிலருடன் முக்கிய வேலையாக வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

**இடபம்:** சிறியளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். தாய் வழியில் உருவான தொல்லைகள், செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். கிடைக்குமோ கிடைக்காதோ என்று நினைத்த பொருள் ஒன்று கிடைக்கலாம்.

**மிதுனம்:** குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களை அறிந்து செயற்படுவீர்கள். சக ஊழியர்களிடம் லாபகமாகப் பேசி உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். தம்பதியர் இடையே அன் யோன்யம் அதிகரிக்கும். போட்டிகள், எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள்.

**கடகம்:** முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். வியாபாரிகள் பழைய சரக்குகள் விற்பனை மூலம் கணிசமான லாபம் பெறலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் தெம்பு குறையும். நண்பர் ஒருவர் தனக்கு நேர்ந்த அனுபவம் ஒன்றை உங்களிடம் விவரிக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம்.

**சிங்கம்:** செய்ய வேண்டிய வேலைகளை நேரத்துக்குச் செய்யாமல் அவசரம் அவசரமாக பின்னர் செயற்படலாம். ஒருவரிடம் வாங்கிய பணம் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த சில வேலைகள் முடிவுக்கு வராமல் நீங்களே அதை செய்ய நேரிடலாம்.

**கன்னி:** மனதில் நினைத்ததைச் செய்ய முற்படுவீர்கள். பழகிய சிலர் மூலம் எதிர்பாராத விதமாக பணவரவுகளைப் பெறலாம். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** உங்களை குறை சொல்லிய சிலரே பாராட்டுவர். உறவினர்கள் மூலம் சில வேலைகளை முடித்துக் கொள்ள முற்படுவீர்கள். நீண்டநாள்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்று இன்று கைக்கு கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளை பெறலாம். ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்:** சிலர் ஏட்டிக்குப் போட்டியாகப்பேசி உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். அயலார் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். சிறிய தவறு ஒன்றைச் செய்து விட்டு, பின் அதற்காக கவலை அடைவீர்கள். கனவுத் தொல்லை உண்டு.

**தனுசு:** கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். இதுவரை வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். பண விடயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். பெரிய மனிதர்கள் சிலரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். உங்களின் ரகசிய செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொண்டு விமர்சிக்கலாம்.

**மகரம்:** நினைத்த ஒரு விடயம் நடக்காமல் போனாலும், நினைக்காத ஒரு விடயம் நடக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். எந்த வேலையையும் மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் செய்வீர்கள். உடல் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம்.

**கும்பம்:** அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதுபோக்குவதில் நாட்டம் செல்லும். சிலரை விமர்சனம் செய்து அதில் மகிழ்ச்சி காண்பீர்கள். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவு ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பீர்கள். மன அமைதி பாதிக்கலாம்.

**மீனம்:** சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும் நாள். இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பழைய நண்பர்கள் சிலர் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். ஆசைகள் பூர்த்தியாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 7 | | | 2 | 1 | | 6 |
| | | 2 | 1 | | | 4 | 7 | |
| | | | | 7 | 9 | | 2 | |
| | | | | 9 | | | 3 | |
| 2 | 6 | 3 | | 4 | | 8 | 9 | 5 |
| | 1 | | | 6 | | | | |
| | 5 | | 3 | 2 | | | | |
| | 2 | 8 | | | 7 | 9 | | |
| 7 | | 6 | 9 | | | | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் நிரப்பப்படவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நீங்காத நினைவில் ஓராண்டு



அமரர்

## கனகரெட்ணம் தவராஜா

**23-07-1950 14-01-2011**

விழிகள் மூட மறுக்கிறதே
விதிவரைந்த பாதையாய் . . .
கரம் பிடித்தஉ ம் இனியவள் எனையும்
எம் இனிய பிள்ளைகளையும்
பாதியிலே விட்டு நீர் பிரிந்து
ஓராண்டு கழியுதப்பா இன்றுடன் . . .
எம் தந்தை நீர் சிரித்த சிரிப்பு
எம் கண் முன்னே இன்னும் நிழலாடுதப்பா
அறுபது அகவையிலே நீங்கள்
படமாகி நின்றாலும் . . .
எம் மனப் புத்தகத்தில்
உமக்காய் ஓர் கோவில்
உதயம் பெற்றே நிற்கிறதப்பா . . .

134, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மனைவி (கமலாதேவி)
பிள்ளைகள் (றூபேஸ், ராகேஷ், கோபிராம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கூட்டுக் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சு

கொழும்பு, ஜன.3

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரத்தில் ஆளும்கட்சியின் அங்கத்துவ கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்என்று ஆளும்கட்சியின்அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி உட்பட்ட கட்சிகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பாக கடந்த வாரத்தில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டிருந்ததை அடுத்தே ஜனாதிபதி ஆளும் - பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் ஆளும்கட்சி சர்வதேசத்தின் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன்னார் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார். (ச)

## இந்திய கலாசார மையம் யாழில்

யாழ்ப்பாணம் ஜன.03

யாழ்ப்பாணத்தில் இந்திய கலாசார மையம்அமைப்பதற்கான பணிகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

ஒரு வருடத்தில் அது கட்டி முடிக்கப்படும் என்றும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். மையத்தின் கட்டடத்துக்கான வரைபடம் உறுப்பினர்களுக்குக் காட்டப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

மாநகர சபையின் ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கலாசார மையம் தொடர்பாக முதல்வர் விளக் கமளித்தார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ்ப் பாணத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் வகையில் இது அமைந் திருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 2011 இல் வவுனியா மாவட்டத்தில் 88 சிறுவர் துஷ்பிரயோகம் பதிவு

### சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர் தகவல்

கொழும்பு, ஜன.3

2011 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் 88 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட இணைப்பாளர் த.செல்வகுமார் தெரிவித்தார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 25 வன்புணர்வு ரீதியான துஷ்பிரயோகங்களாகவும், 15 உடல் ரீதியான துஷ்பிரயோகங்களாகவும், 26 தற்கொலை முயற்சிகளாகவும், 19 புறக்கணிப்பு சார்ந்த முறைப்பாடுகளாகவும், 3 காணாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி அழைப்பினூடாக 16 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், மக்கள் மத்தியில் தற்போது விழிப்புணர்வு ஏற்பட்டதன் விளை வாகவே சிறுவர் துஷ்பிரயோகம் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக தகவல்களை அறியத் தருவதாகவும் சுட்டிக் காட்டினார்.

கிராமப்புற மக்கள் மேலும் விழிப்படைய வேண்டிய தேவை காணப்படுவதாகத் தெரிவித்தார். சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஏற்படுமிடத்து 1929 சிறுவர் உதவி தொலைபேசி அழைப்பினூடாகவும் 024-2224444 என்ற இலக்கத்தினூடாகவும் முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சிறுவர் துஷ்பிரயோ கத்தில் ஈடுபட்டோருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் உள, சமூக மற்றும் மருத்துவ உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (சி)

## திறப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.03

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை திறப்பு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## வலி. தென் மேற்குப் பிரதேசங்களில் விளம்பர சேவைக்கு அனுமதியில்லை

சண்டிலிப்பாய், ஜன.03

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் விளம்பர சேவை நடத்துவதற்கு அனுமதி கோரி பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் சுற்றுச் சூழல்பாதுகாப்பை முன்னிட்டு பிரதேச சபை உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வர்த்தக நிலையங்கள் அதிகரித்துள்ளன.

படித்துவிட்டு வேலையின்றி வீண் பொழுதைக் கழிக்கும் இளைஞர்கள் வருமானத்தை நோக்கமாகக் கொண்டு ஏதாவது ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின் றார்கள். இதேவேளை மக்களும் வர்த்தக நிலையங்களில் கூட்டமாக இருப்பதைக் காணமுடிகிறது.

**பிரதேச சபைக்கு வருமானம் தேடும் அதே நேரத்தில் மக்களின் நலனையும் கவனிக்க வேண்டும்.**

இந்த நிலையில் மக்களைக் கவருவதற்குச் சில வியாபாரிகள் தங்கள் வர்த்தக நிலையங்கள் பற்றி விளம்பரம் செய்ய முன்வந்துள்ளனர்.

இந்த நிலையில் மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய நகர்களில் விளம்பர சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரி இருவர் வலி. தெற்மேற்குப் பிரதேச சபைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விளம்பர சேவை பற்றி விரிவாக ஆராயப்பட்டது. பிரதேச சபைக்கு வருமானம் தேடும் அதேநேரத்தில் மக்களின் நலனைக் கவனிக்க வேண்டிய நிலையும் இருப்பதால் போக்குவரத்து உட்பட சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தாலும் சபை உறுப்பினர்களின் கருத்துக்கமைய இந்த விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டன எனக் கூறப்பட்டது. (ம-155)

என்னிடம் அளவையியலும், விஞ்ஞான முறையும், அரசறிவியல் ஆகிய பாடங்களை கற்று அந்தப் பாடங்களில் A,B,C முதலான சிறந்த பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்த மாணவச் செல்வங்களை மேன் மேலும் கல்வியில் மேன்மையடைய வாழ்த்துகின்றேன்

அளவையியலும் விஞ்ஞானமுறையும்

| | |
|---|---|
| சி. சுகிர்தா - A-3A மா.வ.நி. 25 | சு.செந்தூரி - C |
| ந.துவாரகா - A-3A மா.வ.நி. 31 | ம.நிலாந்தினி - C |
| சி.துவாரகா - A-2AB மா.வ.நி. 126 | யோ.சுவா - C |
| து.சிவதர்சினி - A-2AB மா.வ.நி.167 | பி.பிரசாந்தி - C |
| சி.தமிழினி -A-2B மா.ம.நி.141 | வே.அகிலன் - C |
| சி.லக்சிகா -A-2AC மா.வ.நி.169 | சி.சிறிலக்ஷிகா - C |
| த.பிலிப் -A-2AC மா.வ.நி.216 | ச.இந்துசன் - C |
| ஜெ.ஜெறீனா - A-2AC மா.வ.நி.260 | சி.சுகிதாஸ் - C |
| சி.கோகுலவாசன் -A | சு.ராகவேந்தன் - C |
| மு.சுகன்ஜா - A | க.கலைவேணி - C |
| சி.ராதிகா - A | சி.சிந்துஜா - C |
| ந.சுதர்சினி - A | சி.அருள்நிலா - C |
| இ.நித்தியா - A | ம.பிரியா - C |
| அ.அச்சுதன் - A | ச.குபிதா - C |
| சி.ஆனந்தசுசி - A | சி.சர்மிளா - C |
| இ.துஷ்யந்தி - A | ப.கோகுலன் - C |
| சி.நிஷாந்தன் - A | ப.கபிலன் - C |
| பே.ரேகா - A | சி.நிஷானா - C |
| த.நேதினி - A | ம.அனுஷியா - C |
| இ.வாசுகி - A | க.நிதர்சனா - C |
| ச.சர்மிளா - A | ம.சிந்து - C |
| சு.ஜெயந்தன்- B | தி.அறிவழகன் - C |
| வ.வசந்தா - B | ப.நிலாநேசன் - C |
| க.சுகந்தா - B | சி.லக்ஷானா - C |
| தி.உதயசித்திரா - B | |
| கு.சோபனா - B | |
| லோ.கிர்த்திகா - B | |
| சி.அனுசியா - B | |
| K.கரிகாலன் - B | |
| கு.துஷ்யந்தி - B | |
| ம.பூங்கோதை - B | |
| ம.பகீரதி - C | |
| க.பிரியங்கா - C | |
| அ.யசோதா - C | |
| ப.ஸ்ரீஎட்மட் - C | |
| கு.மந்சுதன் - C | |
| கு.பிரியதர்சினி - C | |
| இ.பிரசாந்தினி - C | |

அரசறிவியல்

| | |
|---|---|
| வ.பிரதீபன் A-3A மா.வ.நி. 7 | சி.மீரா -C |
| தே.மாலதி A-3A மா.வ.நி. 12 | மா.நவநீதன் - C |
| த.மேனகா A-2A,B மா.வ.நி. 60 | சி.சிந்துஜா - C |
| ச.பிரிடா A-B,C மா.வ.நி. 81 | அ.அனனஜா - C |
| ம.சத்தியா A-A,2C மா.வ.நி.106 | ப.நிலோஜினி - C |
| வ.குணசீலி A-A,2C மா.வ.நி. 181 | சி.நெல்சலா - C |
| மா.சுகன்ஜ - A | கு.கார்த்திகா - C |
| ப.ராகவன் - A | கு.பிரியதர்சினி - C |
| கு.தேனுயா - A | சி.சிறிலக்ஷிகா - C |
| இ.தமிழினி - A | பா.பாலேந்திரா - C |
| ந.கஜனி - B | க.பிரசாத் - C |
| ந.கலைமகள் - B | வீ.நிஷாந்தன் - C |
| துளசிமாறன் - B | சி.வினோஜா - C |
| யசோதன் - B | கு.கார்த்தீபன் - C |
| சர்மிளன் - B | ம.சுரேக்கா - C |
| றஜீகரன் - B | க.பிரியங்கா - C |
| ப.கலைவேந்தன் - B | தே.கௌதமி - C |
| நா.துளசி - B | வ.வனஜா - C |
| ம.ரமணன் - B | சி.சர்மிளா - C |
| ப.சுரேந்திரன் - B | கு.வித்தியா - C |
| மா.வினோஜா - B | சி.சுதர்சினி - C |
| க.நிஷாந்தன் - C | க.கபிலன் - C |
| தே.எழிலரசி - C | ந.கார்த்திகா - C |
| ரகின்சன் - C | க.ரகு- C |
| | பா நிஷாந்தினி - C |
| | ர.நந்தினி, - C |
| | பா.நிலோஜன் - C |
| | சி.ஜசிதரன் - C |
| | சி.புவர்ணா - C |
| | கு.நாகேந்திரன் - C |
| | சி.நிமலன் - C |
| | பா.ராகவன் - C |
| | வா.அமுதா - C |
| | ப.கம்சாயினி - C |
| | ந.பார்த்தீபன் - C |
| | நா.நகுலன் - C |
| | ப.திவியா - C |

ஆசிரியர்: திரு.வன்னிமரம் - அரவிந்தன்,
B.A.hons. IInd upper.
Political Science spcial.
M.A. (R) public .Admi.

ஆசிரியர் கற்பிக்கும் இடங்கள்:
- ★ N.C.A கல்வி நிலையம், பருத்தித்துறை.
- ★ Sathapons கல்வி நிலையம், மாலுசந்தி அல்வாய்,
- ★ குகன் கல்வி நிலையம், ஆவரங்கால்
- ★ நியூட்

பரீட்சைக்கு தோற்றியோர் 231 மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை

### 2012 ஆம் ஆண்டுக்கான பட வரைஞரை பதிவு செய்தல்

எமது சபையின் எல்லைகளுக்குள் 2012 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னராக சபையில் விண்ணப்பப் படிவத்தை பெற்று தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
(C/8565)(6-7-8)

சி. சிவராசா
தவிசாளர்.



## Computer Express
Institute of Information Technology

**A/L பரீட்சை முடிவுகள்......???**
**O/L பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களே !!!**
அடுத்த காலடிகளை வெற்றிப்பாதையில் நகர்த்துங்கள்

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

புத்தாண்டில் ஓர் அரிய வாய்ப்பு
அனுமதிக்கு முந்துங்கள்...

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html,
ஆகிய Programming Language [illegible]
University of Madras Bsc [illegible]
[illegible]

Batch I 04-01-2012 :- 9 am or 3Pm Batch II 06-01-2012 :- 9 am or 3Pm
Batch III 07-01-2012 :- 9 am or 3Pm Batch IV 08-01-2012 :- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422 , 0774907444


# அனுமதி பெற்ற பின்பே மலசலகூடம் அமைக்க வேண்டும்

தென்மராட்சி,ஜன.3

தென்மராட்சிப் பிரதேசத்தில் மலசல கூடங்களை அமைப்போர் உள்ளூராட்சி சபைகளின் அனுமதி அவசியம்பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி பயனாளிகள் 450 பேருக்கு மலசல கூடங்கள் சமுர்த்தி அதிகார சபையினரால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வயல், சங்கத்தானை, மட்டுவில் வடக்கு, அல்லாரை, மந்துவில், நுணாவில் சந்திரபுரம், இராமாவில், கோயிற்குடியிருப்பு, இயற்றாலை, கைதடி, கரம்பைக் குறிச்சி, சரசாலை, மீசாலை, கொடிகாமம், மிருசுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் தலா 40 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ம-207)


## விற்பனைக்கு

லிஸ்ரர் எஞ்சினுக்கு பாவிக்கும் காஸ்கட் றிங்ஸ்செற் தாவடியில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777102200



## றிச் கேக்

றிச் கேக் ஓடருக்கு செய்து தரப்படும்
விலை: 35/-

T.P. 021 4900836



## தவறிவிட்டது

அரசரத்தினம் ஸ்ரீரங்கன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த (25.12.2011) அன்று திருநெல்வேலிக்கும் [illegible] இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 2912359 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். சென்றல் கல்லூரி பழைய மாணவரும், இளைப்பாறிய சிறி லங்காப் பொலிஸ் பரிசோதகருமான, புத்தூர் ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த

**S. குணரட்ணம்**

அவர்கள் மொழிபெயர்ப்பாளராக யாழ். மாவட்ட நீதி மன்றத்தினால் சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டமை குறித்து அவரை பாராட்டி வாழ்த்துபவர்கள்

மகன் -ஜனார்த்தனன் (அபான்ஸ் முகாமையாளர்)
தர்சினி (விபுலானந்தா மகாவித்தியாலய, ஆசிரியை-வவுனியா

(12593)(6.8.20)



## விற்பனை முகவர்கள் தேவை
(Sales Rep)

திறமையும், நேர்மையும்,
உடல் ஆரோக்கியமும் உடையவர்கள் தேவை
(அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது).
உங்களுடைய சுயவிவரங்களை
பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
இல. 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர்
சு. தியாகலிங்கம் அவர்களின் மாமன்

**தியாகராசா அருணாசலம்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தியை அறிந்து மிக்க துயருறுகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
பழைய மாணவர் சங்கம்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(12392)(6-7-8)





## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அவர்களின் 29 ஆவது ஆண்டு

# பீடாரோஹண பெருவிழா



இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், ஜேர்மன், லண்டன், கனடா,
பிரான்ஸ் ஆகிய உலக நாடுகளுக்குச் சென்று 4200 ஐயப்ப பக்தர்களுக்கு விரதமாலை அணிவித்து மலையாத்திரைக்கு அழைத்துச் சென்று கடந்த 29 ஆண்டுகளில் 126 தடவைகள் (வருடத்தில் 5 தடவை) சபரிமலை புனித யாத்திரை சென்று வரும் எங்கள் குருசாமி சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலை
ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி சிவாகம விஸாரத் சிவாகம கலாநிதி ஆன்மீக அருள்ஜோதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் J.P.**

அவர்களின் 29 ஆவது பீடாரோஹண விழா

இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார், சங்கானை ஆதீன குரு முதல்வர் சிவப்பிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்த சிவாச்சார்யார் ஆகியோரின் அருளாசியுடன் நாளை (04.01.2012) புதன்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை கொழும்பு - 13 தம்பையா சத்திரம் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அத்தருணம் ஆலய தர்மகர்த்தாக்கள், பக்தர்கள், அனைவரும் வருகை தந்து குருபாத பூஜை செய்து குருவருள் ஆசி பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ.சுதானந்த ஸ்ரீ சுபஸ்வர சர்மா,**
**ஸ்ரீ சாஸ்தாபீடம், கொழும்பு 13**

**சாமிமார்களும் தொண்டர்களும்.**
**(விழா குழுவினர்)**

(L/7890)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்கப் போட்டியில் வென்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனம் நடத்திய யாழ். சதுரங்க விழா கடந்த வாரம் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் இடம்பெற்றது.



இதில் சர்வதேச தரப்பட்டியலில் இடம் பெறுவதற்கான சதுரங்கப் போட்டி மற்றும் ருவென்ரி-20, மின்னல் வேக சதுரங்க போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வருமாறு

ருவென்ரி -20 சதுரங்கம்

9 வயதுபிரிவு - பெண்கள்

சர்மினி ஜெயராஜா (தங்கப் பதக்கம்), சாகித்தியா பார்த்தீபன் (வெள்ளிப் பதக்கம்), செம்பூவனி பாஸ்கரன் (வெண்கலப் பதக்கம்),

9 வயதுபிரிவு - ஆண்கள்

வி.ஆர். பிரபாகரன் (தங்கப் பதக்கம்), ஜெயராஜா சயானந்த - (வெள்ளிப் பதக்கம்), ஜெயகுமார் ரிஷி கோபன்(வெண்கலப்பதக்கம்)

11 வயதுப்பிரிவு - பெண்கள்

கம்சாயினி ரவீந்திரன் (தங்கப்பதக்கம்), உமையாள் சிவகுமாரன் (வெள்ளிப்பதக்கம்), எஸ்.மிருதி (வெண்கலப்பதக்கம்).

11 வயதுப்பிரிவு - ஆண்கள்

ரவீந்திரன் வெரோஷன் (தங்கப்பதக்கம்), பரமேஸ்வரன் சிவா பாலஸ்ரீ (வெள்ளிப்பதக்கம்), ரவீந்திரா நிகேஷ் (வெண்கல பதக்கம்)

13 வயது பிரிவு - பெண்கள்

தீபனா கோவித்த ராஜா (தங்க பதக்கம்), லாவண்யா லோகேஸ்வரன் (வெள்ளிப் பதக்கம்), துஷாரா மணிசேகரன் (வெண்கலப் பதக்கம்)

13 வயது பிரிவு ஆண்கள்

சுதாகரன் சுதர்சன் (தங்கப் பதக்கம்), ராஜசூரிடினோஜன் (வெள்ளிப்பதக்கம்), சுதாகரன் சுமன் (வெண்கலப்பதக்கம்),

15 வயது பிரிவு பெண்கள்

புவிதா சூரியமூர்த்தி (தங்கப் பதக்கம்), பிரமிளா சீறிரஞ்சன் (வெள்ளிப்பதக்கம்), உமையார் சிவகுமாரன் (வெண்கலப்பதக்கம்)

15 வயது பிரிவு - ஆண்கள்

எஸ். சஞ்சயன் - (தங்கப்பதக்கம்), திருமநாதன் தனுசியா (வெள்ளிப்பதக்கம்), சிறிகந்தராஜா விஜயசாந்த் (வெண்கலப்பதக்கம்)

17 வயது - பெண்கள்

நிதர்ஷனா வேலாயுதம் - (தங்கப்பதக்கம்) சாரங்கி கனகலிங்கம் (வெள்ளிப் பதக்கம்), வவித்ரா அருள்ராஜசிங்கம் (வெண்கலப்பதக்கம்)

17 வயது பிரிவு - ஆண்கள்

எஸ்.நிர்மலராஜா (தங்கப் பதக்கம்), அலோசியஸ் அன்ரூ - வெள்ளிப்பதக்கம்), தவராஜா மதுரன் (வெண்கலப்பதக்கம்)

மின்னல் வேக சதுரங்கம்

திறந்த பிரிவு போட்டி - பெண்கள்

பிரமிளா சிறீரஞ்சன் (தங்கப் பதக்கம்), வவித்ரா அருள்ராஜசிங்கம் (வெள்ளி பதக்கம்), சௌந்தர்யா பரமேஸ்வரன் (வெண்கலப் பதக்கம்).

திறந்த பிரிவு போட்டி ஆண்கள்

சோதிநாதன் சஞ்சயன் (தங்கப் பதக்கம்), எஸ்.எ.சந்திசிறீ - (வெள்ளிப்பதக்கம்), சந்திரபாலன் நிர்மலராஜா (வெண்கலப் பதக்கம்)

சர்வதேசத் தரப்படுத்தல் திறந்த பிரிவு - பி

குமாரசிசிர (தங்கப்பதக்கம்),வித்தியாதரிணி (வெள்ளிப் பதக்கம்), சி.எஸ்.குமாரவடு (வெண்கலப் பதக்கம்)

சிறந்த பிரிவு ஏ

டீ.சில்வா ரஷீன் (தங்கப் பதக்கம்) ,பிரபாஜித் (வெள்ளிப் பதக்கம்), டபிள்யூ.எஸ்.என்.சந் திரரத்ன (வெண்கலப்பதக்கம்). (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் நடத்தி வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்கிழமை இடம் பெறும் மூன்றாவது காலிறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி அணி மோதவுள்ளது. (த-26)

* * *

யாழ்ப்பாணம், ஜன.3

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டங்கள், வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில், மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

# வெற்றிபெற்ற வீரர்கள்



யாழ்ப்பாணம், ஜன.3

முன்னாள் தமிழக முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆரின் 24 ஆவது ஆண்டு நிறைவும், முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் அமரர் பொன்.மதிமுகரா ஜாவின் 13 ஆம் ஆண்டு நிறைவையும், ஆழிப்பேரலைப் பேரிடரினால் இறந்த உறவுகளின் 7 ஆம் ஆண்டு நிறைவையும் ஒட்டி இடம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளின் விவரங்கள் வருமாறு:-

40 மைல் சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்)

முதலாமிடம் - துரைராஜா றஜீம், இரண்டாமிடம் - இராசையா இதயன், மூன்றாமிடம் - அப்பு காந்தி சலட்சன், நான் காமிடம் - பொன்னையா. பாலரஜீவ், ஐந் தாமிடம் - ஜே.எச்.எம். சாஜன் அதிகாரி.

15 மைல் சைக்கிள் ஓட்டம் (பெண்கள்)

முதலாமிடம் - இராமேஸ்வரன். ஜனனி, இரண்டாமிடம் .- குமாரராசா தனுஷா, மூன்றாமிடம் - விஜயரூபன் பத்மா, 10 மைல் மரதன் ஓட்டம் (25 வயதுக்கு உட்பட்டவர்கள்) முதலாமிடம் - கிருஷ்ணன் ஜெயந்தன். இரண்டாமிடம் - குமார் நவனீதன். மூன்றாமிடம் - தம்பிதாசன் தனுசன்.

ஆண்களுக்கான கயிறு இழுத்தல்

முதலாம் இடம் எ. மகாத்மா, இரண்டம் இடம் பி.காந்தி.(த-23)


## நீங்காத நினைவலையில் மூன்றாண்டுகள்

மண் மகிழ
17.01.1956



அமரர்
நாகலிங்கம்
கந்தசாமி

[ESP பேரம்பலம்
கம்பனி முன்னாள்
முகாமையாளர்]

திதி: 03.01.2012
செவ்வாய்க்கிழமை



கண் நெகிழ
06.01.2009

கலங்கரை விளக்கான குலதெய்வமே!
காலனவன் சதிவேலையால் எமைப் பிரிந்தீரோ?
ஆண்டுகள் மூன்று கரைந்தோடினாலும்
ஆசையப்பா உமதிடத்தை யார் நிரப்புவார்?
மறுபிறவி உண்டென்பது உண்மையானால்
மீண்டும் பிறந்திடுவோம் இப் புவியில்
தங்கள் ஆத்மா சாந்தியடைய
நித்தம் பிரார்த்திப்போம் இறைவனை

(12396)2-6-7

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## சின்னையா வடிவேலு



கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வடிவேலு (01.01.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதியரின் மருமனும் கணேசமணியின் அன்புக்கணவரும், நளாயினி (ஆசிரியை - யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), சபேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவநேசன் (பிரதேசசபை - கொடிகாமம்), சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன், அபிராமி, அருண், டறண், தருண் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சிவக்கொழுந்து (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், பரமேஸ்வரி (ராசு-கனடா), கனகரத்தினம், யோகநாதன், தபோநிதி (ரவி) குலேந்திரன் (ராசா) ஞானம், காலஞ்சென்ற ஜீவகுமார் மற்றும் றஞ்சா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருந்தவராசா, கமலாதேவி, சிவராசா, பாலசுப்பிரணியம், தங்கராசா (யாழ். போதனாவைத்தியசாலை) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 1மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(C/2901)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது ஆசிரியர் செல்வி க.சாந்தகுணேஸ்வரி அவர்களின் அன்புத் தந்தையார்

### வீ.கந்தையா

அவர்கள் இறைவனடி சேர்ந்த 31 ஆம் நாள் நினைவிலே அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்.

யா/புனித ஜோண் பொஸ் கோ வித்தியாலயம்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### சின்னர் சின்னத்தம்பி

தோற்றம்
09-10-1921

மறைவு
21-11-2011

கடந்த 21.11.2011 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை (04.01.2012) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(12443)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தின ஐயர் மனோன்மணி அம்மா



மாதகலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியைப் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தின ஐயர் மனோன்மணி அம்மா நேற்று (02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாச்சாமி ஐயர்- சின்னம்மா ஆகியோரின் மகளும் இரத்தினஐயரின் அன்பு மனைவியும் மாணிக்கவாசகக் குருக்கள், சுந்தரேஸ்வர சர்மா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் கௌரியம்மா(புனிதம்), தெய்வநாயகி (சக்தி), மகாலிங்கக்குருக்கள், காலஞ்சென்ற உஷாதேவி மற்றும் கல்யாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலம்மா, சாம்பசிவக் குருக்கள் ஆகியோரின் சகோதரியும் வெங்கடாசலஐயர், திலீபன் குருக்கள், லலிதா, புவனேஸ்வரி, திருப்பதி, மதிவதனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரமேஸ்வர சர்மா, கௌரீஸ்வரக் குருக்கள், மயூரநாதக் குருக்கள், அகிலநாதக் குருக்கள், சிவப்பிரிய சர்மா, வைத்தியநாதக் குருக்கள், சுவர்ணா,சிந்துஜா, உமாப்பிரசாத் சர்மா, திவ்யாங்கன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் வர்சாயுத சர்மா, பிரத்யுன்னிய சர்மா,வர்சாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அளவெட்டி அழகொல்லையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அஞ்சலி நிகழ்வுகளின் பின்னர் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அழகொல்லைப்பிள்ளையார் கோயில்,
அளவெட்டி.

தகவல்:
சு.இரத்தினஐயர்
(கணவர்).

## கல்வியங்காடு விபத்தில் பெண்மணி சாவு

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுப் பிற்பகல் மரணமானார்.

மூன்றாம் கட்டை, கல்வியங்காட்டைச் சேர்ந்த காசிநாதன் சாந்தினி (வயது 57) என்பவரே மரணமானவர் ஆவார்.

நேற்றுக்காலை வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் இந்தப்பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்தவர் பின்புறமாக மோதியதில் படுகாயமடைந்த நிலையில் குறித்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாராணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10-04)

## கச்சாயில் பெண்ணின் பாதிச்சங்கிலி பறிபோனது

யாழ்ப்பாணம், ஜன.3

சைக்கிளில் வந்துகொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.இந்த சம்பவம் கச்சாய்வீதி தம்பு தோட்டம் பகுதியில் நேற்று மாலை 3மணிக்கு நடைபெற்றுள்ளது.

குறித்த பெண் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது ஹெல்மட் அணிந்து மோட்டார் சைக்கிளில் அவரைப் பின்தொடர்ந்து,சைக்கிளைத் தள்ளி விழுத்தி அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துள்ளனர். இதன் போது பாதி சங்கிலியையே அவர்கள் அறுக்க முடிந்தது. இதன் போது குறித்த பெண் சைக்கிளில் இருந்து வீழ்ந்து சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ங-10)


## வீடு விற்பனைக்கு

குருநகர் 6ஆம் குறுக்குத்தெரு 24ம் இலக்க சிறிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0779398896.

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRAHA No-01 புறொயிலர் குஞ்சுகள் 05.01.2012 அன்று விநியோகிக்கப்படும்
பதிவுகளை மேற்கொள்ளவும்.
றாஜீவ் நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P.No.0776090926.

## NIRU TUITION CENTRE
KONDAVIL

A/L 2014

வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 05.01.2012- வியாழன் 3.30
கலைப்பிரிவு
ஆரம்பம் - 08.01.2012 ஞாயிறு 8 மணி

## படிவம்

க.பொ.த (உ.த) ஆகஸ்ட் 2011 பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான படிவர் விற்பனைக்கு உண்டு.

முடிவுத் திகதி
08.01.2012

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வெங்கடேஸ்வரி கணேசலிங்கம் (மணி அக்கா)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெங்கடேஸ்வரி கணேசலிங்கம் (01.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் மகேஸ்வரி, ராஜேஸ்வரி, மீனேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் சகோதரியும் தக்ஷினி, லோஜன்,கோபிதன்ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார்,அபிராமியின் அன்பு மாமியாரும், இந்து ஷாணி, சிவா,ராம்ஜி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(02.01.2012)திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

302/1 நாவலர் ,
வீதி,ஆனைப்பந்தி.

தகவல்:
கணேசலிங்கம்
(கணவர்).

### ஆறுமுகம் நடராசா



(நடராசா ஸ்ரோர்ஸ், பன்குளம்)

காரைநகர், களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா நேற்று (02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியத்தின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் கௌசலாதேவி (லண்டன்), ரத்தினாதேவி (லண்டன்), கார்த்திகாயினி, குகதர்சினி, ஹரிகிருஷ்ணா, ராமகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் செல்வநாயகி, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் தருமலிங்கம், சரஸ்வதி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பத்மாவதி, தவநாயகி, கணேசபிள்ளை, சந்திரமலர், மார்க்கண்டு (லண்டன்), மனோகரன் (மனோஜ் எக்ஸ்பிறஸ், கொழும்பு), தனலட்சுமி, அரசரத்தினம் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் சிவலிங்கம் (லண்டன்), நாகேந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் மதுரா, மிதுரா, வேணுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (05.01.2012) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, கலட்டி அம்மன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னப்பு பார்வதி



புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு பார்வதி நேற்று(02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.01.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இ.சுப்பிரமணியம்
பழைய தபாற்கந்தோர் வீதி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### றெஜினா பூமணி செல்லத்துரை



13, மவுண் கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றெஜினா பூமணி செல்லத்துரை நேற்று (02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

13, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.


மோட்டோ லங்கா நிறுவனத்தின் ரூபா. 10,000 விலைக்குறைப்பு




வாகன வரி
காப்புறுதிப் பத்திரம்
தேவையில்லை

சாரதி அனுமதிப் பத்திரம் தேவையில்லை
பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்.
மோட்டருக்கு 2 வருட உத்தரவாதம்.
சலுகை 15 ஆம் திகதி வரை மட்டுமே
Hot line: 0770868079

ELECTRIC
BIKES
யப்பான் ரேடர்ஸ்
(முட்டாஸ்கடைச் சந்தி அருகில்)
10 – 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டற்ற மகிழ்ச்சி

வரலாற்று சிறப்புமிக்க தென்னாபிரிக்க மண்ணில் வைத்து இலங்கை பெற்றுக்கொண்ட முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் வெற்றி குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாக முன்னாள் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி அனைத்து வீரர்களுக்கும் உரியது என்றும், அவர்களின் திறமைகளை பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ள சனத் ஜெயசூரிய இதுபோன்று எதிர்வரும் ஆட்டங்களிலும் இலங்கையணி பிரகாசிக்க வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

> நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஓய்வு பெற்றதன் பின்னர், இலங்கையணி பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றியாகவும், புதிய அணித் தலைவர் திலகரட்ன டில்சானின் முதலாவது வெற்றியாக இது விசேடமாக கருதப்படுகின்றது.



நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஓய்வு பெற்றதன் பின்னர், இலங்கையணி பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றியாகவும், புதிய அணித் தலைவர் திலகரட்ன டில்சானின் முதலாவது வெற்றியாக இது விசேடமாகவும் கருதப்படுகின்றது.

நீண்ட நாட்களாக டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களில் சற்று தடுமாற்றத்தை எதிர்கொண்ட இலங்கைக்கு இந்த வெற்றி புத்துணர்ச்சி அளித்துள்ளதாகவும் கிரிக்கெட் விமர்சகர்கள் குறிப்பிட்டனர். டேர்பனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் 208 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை தோற்கடித்து இலங்கை வரலாற்று வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இதற்கு முன்னர் 1998 ஆம் ஆண்டு இங்கிலாந்து மண்ணில் வைத்து இலங்கை பெற்றுக்கொண்ட டெஸ்ட் வெற்றியே, வெளிநாட்டில் வைத்து இலங்கையணி பெற்றுக்கொண்ட முதலாவது டெஸ்ட் வெற்றியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## வட்மோர் இராஜினாமா

ஐ.பி.எல். அணிகளில் ஒன்றான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பயிற்றுநர் பதவியிலிருந்து டேவ் வட்மோர் நேற்று முன்தினம் ராஜினாமா செய்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக வட்மோர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பயிற்றுநர் பதவியிலிருந்து அவர் ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரு வருடங்காக நைட் ரைடர்ஸ் அணிக்கு வட்மோர் பயிற்சியளித்தார். அவரின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் டிசெம்பர் மாதமே முடிவடைகிறது.

எனினும் மீண்டும் தேசிய அணியொன்றின் பயிற்றுநராக செயற்படும் வட்மோரின் விருப்பத்திற்கு நாம் ஆதரவளிக்கிறோம். அவருக்கு எமது வாழ்த்துக்கள், என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியான வெங்கி மைசூர் கூறியுள்ளார். பாகிஸ்தான் அணியின் பயிற்றுனர் பதவி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அடுத்த வாரம் பாகிஸ்தான் வருமாறு கிரிக்கெட் சபை வட்மோருக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஏற்கெனவே இலங்கை, பங்களாதேஷ் அணிகளின் பயிற்றுநராக டேவ் வட்மோர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (15)

# இலங்கையருக்கு இடமில்லை...!

கடந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர்களுக்கான பதினொருவர் அணியை 'கிரிக் இன்போ' இணையத் தளம் வெளியிட்டுள்ளது. 'கிரிக் இன்போ' இணையத் தளம் சார்பில் ஆண்டு தோறும் டெஸ்ட் ஆட்டத்தில் சிறந்து விளங்கும் வீரர்களை கொண்ட பதினொருவர் அணி தேர்வு செய்யப்படும். கடந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் பதினொருவர் அணியில் இந்திய அணியின் மூத்த வீரர் ராகுல் டிராவிட் மட்டும் இடம் பெற்றுள்ளார்.



கடந்த ஆண்டு இவர் 12 டெஸ்டில் பங்கேற்று 5 சதம், 4 அரைச் சதம் உட்பட 1145 ஓட்டங்கள் எடுத்து, அதிக ஓட்டங்கள் சேர்த்தவர்கள் வரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், லக்ஸ்மன், சேவாக், டோனி உட்பட இந்திய வீரர்களுக்கு பதினொருவர் அணியில் இடம் கிடைக்கவில்லை. அத்துடன் இலங்கை அணியின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரரும், ஐ.சி.சி துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில் முதலிடத்திலிருக்கும் சங்ககாரவும் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

பதினொருவர் அணியில் அதிகபட்சமாக இங்கிலாந்து சார்பில் ஆறு வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். இதில் குக், ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்டுவர்ட் புரோட், கெவின் பீற்றர்சன், இயன் பெல், மட் பிரையர் ஆகியோர் உள்ளனர்.

பாகிஸ்தான் சார்பில் முகமது ஹபீஸ் மற்றும் சயீட் அஜ்மல் இடம் பெற்றுள்ளனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டரன் பிராவோ, தென்னாபிரிக்காவின் ஸ்ரெயின் ஆகியோரும் பதினொருவர் அணியில் உள்ளனர்.

> கடந்த ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட் பதினொருவர் அணியில் இந்திய அணியின் மூத்த வீரர் ராகுல் டிராவிட் மட்டும் இடம் பெற்றுள்ளார்.

சிறந்த ஒருநாள் ஆட்டத்துக்கான பதினொருவர் அணியில் இந்திய வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளது. இந்தியா சார்பில் சேவாக், விராத் ஹோக்லி, டோனி, யுவராஜ் சிங், சகிர்கான் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான் சார்பில் தலா இரண்டு பேர் இடம் பிடித்துள்ளனர்.

டெஸ்ட் அணி:

அலெஸ்டர் குக்(இங்கிலாந்து), முகமது ஹபீஸ்(பாகிஸ்தான்), ராகுல் டிராவிட்(இந்தியா), கெவின் பீற்றர்சன்(இங்கிலாந்து), இயன் பெல்(இங்கிலாந்து), டரன் பிராவோ(மேற்கிந்தியத் தீவுகள்), மட் பிரையர்(இங்கிலாந்து), ஸ்டுவர்ட் புரோட்(இங்கிலாந்து), ஸ்ரெயின் (தென்னாபிரிக்கா), சயீட் அஜ்மல்(பாகிஸ்தான்), ஜேம்ஸ் அண்டர்சன்(இங்கிலாந்து).

ஒருநாள் அணி:

சேவாக்(இந்தியா), ஷேன் வொட்சன் (ஆஸ்திரேலியா), விராத் ஹோக்லி(இந்தியா), மஹேல ஜெயவர்த்தன (இலங்கை), யுவராஜ் சிங்(இந்தியா), டோனி(இந்தியா), அப்ரிடி (பாகிஸ்தான்), மிட்சல் ஜோன்சன்(ஆஸ்திரேலியா), லசித் மலிங்க (இலங்கை), சகிர்கான்(இந்தியா), சயீட் அஜ்மல் (பாகிஸ்தான்). (15)

# இன்று யாருக்கு சாதகம்?

சிட்னி ஆடுகளம் 'சுழலுக்கு ஒத்துழைக்குமா அல்லது வேகத்துக்கு கைகொடுக்குமா' என்ற குழப்பம் நீடிக்கிறது. இது ஆஸ்திரேலிய அணியில் பிளவை ஏற்படுத்தியுள்ளது. நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கி இந்திய அணியை சிதறடிக்க, அணித்தலைவர் மைக்கல் கிளார்க் திட்டமிடுகிறார். அதே நேரத்தில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், ஒரு சுழற்பந்துவீச்சாளர் கட்டாயம் வேண்டுமென வலியுறுத்துவதால், பிரச்சினை வெடித்துள்ளது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. மெல்போர்னில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

இரண்டாவது டெஸ்ட் இன்று சிட்னியில் தொடங்குகிறது. இங்குள்ள ஆடுகளம் பொதுவாக சுழலுக்கு ஒத்துழைக்கும். ஆனால், கடந்த ஆண்டு நடந்த இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மோதிய 'ஆஷஸ் டெஸ்ட் ஆட்டத்தில் மொத்தம் வீழ்ந்த 30 இலக்குகளில், 3 இலக்கைத்தான் சுழற்பந்து வீச்சாளர்கள் கைப்பற்றினர். சிட்னி ஆடுகளம் வேகத்துக்கு சாதகமாக மாறியிருப்பதை இது சுட்டிக் காட்டியது. இதே நிலை இந்த முறையும் தொடரலாம். இதன் காரணமாகதான் ஆஸ்திரேலிய அணியில் அவசர அவசரமாக வேகப்புயல் ரியான் ஹரிஸ் சேர்க்கப்பட்டார். இதையடுத்து பீட்டர் சிடில், ஹில்பெனாஸ், பற்றின்சன், ஹரிஸ் என்று நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கி இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்க, அணித்தலைவர் மைக்கல் கிளார்க் திட்டம் வகுத்து இருக்கிறார். இதற்கு பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தரப்பில் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது. 'எல்லாம் வேகம் என்ற கொள்கையில் தனக்கு உடன் பாடில்லை' என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆர்தர் கூறுகையில், பந்துவீச்சாளர்கள் தொடர்பாக இன்னும் முடிவு எடுக்கவில்லை. சிட்னி ஆடுகளம் பாரம்பரியமாக சுழலுக்கு ஒத்துழைக்கும். என்னை பொறுத்தவரை சுழற்பந்து வீச்சாளர்கள் இல்லாமல் களமிறங்குவதை ஏற்க முடியாது. மெல்போர்ன் டெஸ்டில் நதன் லயோன் சுழலை இந்திய வீரர்கள் எளிதாக சமாளித்தனர். வலுவான இலக்கை நிர்ணயிக்கும் பட்சத்தில் எதிரணிக்கு இவர் நிச்சயமாக சவால் கொடுப்பார் என்றார்.

ஆடுகள பராமரிப்பாளர் டாம் பார்க்கர் கூறுகையில், கடந்த ஆண்டு ஆஷஸ் ஆட்டத்துக்கு அமைக்கப்பட்ட ஆடுகளம் போல் இருக்கும். இரு அணிகளுக்கும் சாதகமாக அமையும். இதன் தன்மை, வானிலையை பொறுத்து மாறும். மேகமூட்டத்துடன் காணப்பட்டால், பந்துகள் நன்கு 'ஸ்விங்' ஆகும். போகப் போக சுழலுக்கும் கைகொடுக்கும் என்றார்.

**போதை தெளியாத பிளட்சர்!**

புத்தாண்டு கொண்டாட்டங்களை முடித்த இந்திய வீரர்கள், நேற்று முன்தினம் தீவிர வலை பயிற்சியில் ஈடுபட்டனர். தனது தற்காப்பு ஆட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தினார் டிராவிட். 100 ஆவது சர்வதேச சதம் அடிக்கும் நோக்கில் சச்சின் கவனமாக ஆடினார். சேவாக் பயிற்சியை, அவருக்கு மிக அருகே நின்று கண்காணிக்க முயன்றார் பயிற்சியாளர் பிளட்சர், இதையடுத்து 'என்னால் பந்தை சரியாக பார்க்க முடியவில்லை என்றார். உடனே இன்னும் அருகில் வந்தார் பிளட்சர். இதனால் நொந்து போன சேவாக், முதல் நாள் இரவு குடித்த போதையில் இருந்து இன்னும் மீளவில்லையா என்று நகைச்சுவையாக குறிப்பிட்டார். இதனை கேட்ட பிளட்சர் இடத்தை விரைவாக காலி செய்தார். (15)

# நான் ரெடி? நீங்க ரெடியா?

தனது முதலாவது டெஸ்டில் விளையாட எப்போதும் தயாராக இருப்பதாக, இந்திய வீரர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா (வயது - 24). இதுவரை இவர் 72 ஒரு நாள் (1810 ஓட்டங்கள்), 22 சர்வதேச 'ரி-20' (415 ஓட்டங்கள்) ஆட்டங்களில் விளையாடி உள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இவர், மெல்போர்னில் நடந்த முதல் டெஸ்டில், விளையாடும் பதினொருவர் அணியில் இடம் பெறவில்லை.

இந்த ஆட்டத்தில் விராத் ஹோக்லி (11, 0) இரண்டு இன்னிங்சிலும் ஏமாற்றினார். இதனால் சிட்னியில் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்டில், ரோகித் சர்மாவுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் எனத் தெரிகிறது. ஒருவேளை ரோகித் தேர்வு செய்யப்படும் பட்சத்தில், அது இவரது அறிமுக டெஸ்ட் ஆட்டம்.

இதுகுறித்து ரோகித் சர்மா கூறியதாவது:

எனது முதலாவது டெஸ்டில் விளையாட தயாராக உள்ளேன். விளையாடும் பதினொருவர் அணியில் இடம் பிடிப்பது பற்றி கவலைப்பட மாட்டேன், வாய்ப்பு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், ஆட்டத்தில் விளையாட நூறு சதவீதம் தயாராக இருப்பேன். ஏனெனில், ஆட்டத்தின் போது சில நேரங்களில் காயம் உள்ளிட்ட பிரச்சினைகளால் சகவீரர்கள் வெளியேறக் கூடும். இதனால் முன்னெச்சரிக்கையாக களத்தில் இறங்க தயாராக இருப்பேன். சிட்னி டெஸ்டில் விளையாடும் வாய்ப்பு கிடைக்குமா என்பது பற்றி தற்போது கூற முடியாது.

இதுகுறித்து இறுதி முடிவு இன்று (நேற்று) தெரிய வாய்ப்பு உள்ளது. மெல்போர்ன் டெஸ்டில் கண்ட தோல்விக்கு, சிட்னி டெஸ்ட் மூலம் பதிலடி கொடுத்து எழுச்சி பெற முயற்சிப்போம். இதற்காக இந்திய வீரர்கள் சிறந்த முறையில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். முதல் டெஸ்டில் செய்த தவறுகளை கண்டறிந்து, அதற்கேற்ப பயிற்சி மேற்கொண்டு வருகிறோம்.

மெல்போர்ன் டெஸ்டில், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் முதல் இன்னிங்சில் சிறப்பாக செயல்பட்டனர். ஆனால் இரண்டாவது இன்னிங்சில் சோபிக்கத்தவறியதால், தோல்வி அடைய நேரிட்டது. இதேபோல இந்திய பந்து வீச்சாளர்கள் துல்லியமாக பந்துவீசியதால், ஆஸ்திரேலிய அணியின் இமாலய இலக்கிற்கு முட்டுக்கட்டை போட முடிந்தது. ஆனால் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் அசத்தியதால், தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று. ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு, பற்றின்சன், ஹில்பெனாஸ், சிடில் உள்ளிட்ட வேகங்கள் முக்கிய காரணம். - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது கல்லூரி ஆசிரியர்

**செல்வி ஞானேஸ்வரி திருஞானசம்பந்தன்**

அவர்கள் தேசிய ரீதியில் நடைபெற்ற 2011ஆம் ஆண்டின் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டித் தொடரில் சிறுகதை எழுதுவதில் 1ஆம் இடத்தைப் பெற்று தேசிய விருதைப் பெற்றுள்ளார்.

எமது கல்லூரி ஆசிரியர் சமூகத்துக்குப் புகழ் சேர்த்த ஆசிரியரை தமது வாழ்நாளில் மேலும் பல விருதுகளைப் பெற்று நீடூழி வாழ அன்புடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/யாழ்ரன் கல்லூரி,
காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்.

## புத்தூர் கிராமத்தை வளப்படுத்திய புத்தூர் பிரதேச சபை

**புத்தூர் பிரதேச சபைக்கு உட்பட்ட எமது வளர்மதி கிராமத்தில் காணப்பட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் மயானம் அமைக்கப்பட்டு இருந்தது. அதனை மின்சாரத்தில் தகனம் செயய்யத்தக்க வகையில் நவீனமயப்படுத்துவதோடு அதன் ஒரு பகுதியில் எமது கிராமத்தின் நீண்டகால தேவையாக விளங்கிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கும் முன்மொழிந்து முடிவு எடுத்தமைக்கு புத்தூர் பிரதேச சபைக்கும் தவிசாளர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

*வளர்மதி சனசமூக நிலையம்,*
*வளர்மதி விளையாட்டுக் கழகம்,*
*ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை,*
*வளர்மதி முன்பள்ளி,*
*வளர்மதி சிறுவர் கழகம்.*

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா மகாலிங்கம்

**(முன்னாள் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்)**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகாலிங்கம் 01.01.2012 ஞாயிற்றுக்கிழமை இந்தியா பேரூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பதுமநிதியின் அன்புக் கணவரும் வசந்தி ராஜகோபால் (இந்தியா), ஆனந்தி தேவரஞ்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயந்தி விபுலானந்தசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.01.2012) திங்கட்கிழமை அவரின் பேரூர்இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8, பிளச்சஸ் ஒழுங்கை,*
*சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
க.பரராஜசேகரன்
*(மைத்துனர்).*

### தியாகர் அருணாசலம்

**(முன்னாள் உரிமையாளர், வெள்ளி விலாஸ்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொட்டடி மற்றும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகர் அருணாசலம் 30.12.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகர்- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும் திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் (உபபீடாதிபதி, கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), வைத்தியகலாநிதி மைதிலி அருளேந்திரன் (லண்டன்), திருமதி மனோரமா குகானந்தன் (முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தற்போது ஜேர்மனி), செல்வி மாலதி அருணாச்சலம் (இலங்கை மின்சார சபை- யாழ்ப்பாணம்), மகபதி (ஜேர்மனி), திருமதி மஞ்சுளா ஸ்ரீரங்கநாதன் (ஆசிரியை, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகலிங்கம் (அதிபர், யா/ இந்து ஆரம்பப் பாடசாலை), வைத்திய கலாநிதி அருளேந்திரன் (லண்டன்), குகானந்தன் (ஜேர்மனி), திருமதி விஜிதா (ஜேர்மனி), ஸ்ரீரங்கநாதன் (ஆசிரியர், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ் சென்றவர்களான கந்தையா, இராசம்மா மற்றும் சாமிநாதன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, காங்கேயன் மற்றும் திருமதி மீனாட்சி, திருமதி விசாலாட்சி (கனடா), வைத்திய கலாநிதி திருநாவுக்கரசு (சட்டத்தரணி, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வரதலிங்கம் (அதிபர்) மற்றும் திருமதி தவமணிதேவியின் (கனடா) மைத்துனரும், திருமதி வரதலிங்கம், சரஸ்வதி (லண்டன்), கனகராசா (கனடா) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கணபதிப்பிள்ளை, இராசம்மா, மாசிலாமணி, மார்க்கண்டு மற்றும் கிருஸ்ணபிள்ளை (கனடா), திருமதி பாக்கியம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆரணி (ICBT Campus, கொழும்பு), தியாசாயணி (கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), மயூரசாகித்தியன் (யாழ்.இந்துக் கல்லூரி), கிருஸ்ணவி, சங்கவி (லண்டன்), லுக்சியா, டினுஜன், பவனிகா (ஜேர்மனி), ஜனுசன், நந்தகிஷோர், பிரதாயினி (திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:* குடும்பத்தினர்.

*117/4, அரசடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

சு.தியாகலிங்கம்.
*(அதிபர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)*

## மர்மப் பொருள் வெடித்து சாவு

அக்கரைப்பற்று, ஜன.3

அக்கரைப்பற்று பதூர்நகர் பிரதேசத்தில் வெற்றுக்காணி ஒன்றில் கிடந்த மர்மப் பொருள் ஒன்றை இரு சிறுவர்கள் நேற்று பிற்பகல் இரும்புப் பந்து என எறிந்து விளையாடிய போது அது வெடித்து ஒரு சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் உள்ள பதூர்நகர் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள இந்த சம்பவம் இடம்பெற்றதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெற்றுக்காணியில் அனாதரவாக கிடந்த மர்மப் பொருள் ஒன்றை உறவினர்களான சகோதர சிறுவர்கள் எடுத்து மாறிமாறி எறிந்து விளையாடியபோதே இந்தப் பயங்கரம் நடந்தது.

இந்த விபத்தில் பதூர்நகரைச் சேர்ந்த நிலாஸ் (12 வயது) சிறுவன் உயிரிழந்ததுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த இக்கினாஸ் (16 வயது) சிறுவன் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-10)

## சைக்கிள் திருடிய வயோதிபர் பிடிபட்டார்

சுமார் 65 வயதுடைய வயோதிபர் ஒருவர் நேற்று பட்டப் பகலில் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் நின்றிருந்த சைக்கிளை 'நைசாக' எடுத்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளை அந்தப் பகுதியில் நின்றிருந்தவர்களால் மடக்கிப் பிடித்து நையப்புடைக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயில் முன்பாக உள்ள கடையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடையின் பின்புறமாக பூட்டாமல் நின்ற சைக்கிளையே குறித்த வயோதிபர் களவாக எடுத்துக் கொண்டு தப்பியோட முற்பட்டுள்ளார். எனினும் இதனைக் கவனித்த கடையில் நின்றவர்கள் உடனடியாக மடக்கிப் பிடித்துப் பின்னர் பொலி ஸாரிடம் ஒப்படைத்தனர்.

(ஒ-323-100)

CHEMISTRY
s.vasu
A/L DAY CLASS
ஆரம்பம் 04.01.2012
wed 3.30 p.m.
A/L 2014
ஆரம்பம்
04.01.2012
Wed 4.30 p.m.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

CeyLabs CeyLabs Solutions (Pvt) Ltd.
204,Brown Road, Jaffna.
Hot Line : 021 222 1807, Web: www.ceylabs.com
Hunting: 077 251 7223, 075 577 0629
உங்களது தேவைகளிற்கேற்ப சகல விதமான மென்பொருட்கள், இணையத்தளங்கள், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் பாதுகாப்புக் கண்காணிப்புக் கருவிகள் போன்றவற்றை உயர்தரத்தில் உளச்சுத்தியுடன் வழங்குகின்றோம்.
Department of Software & Web Development
Stock Control System
ERP System
Website Development
E-Commerce System
Payroll System
Student Management System
E-Learning System
Online Reservation System
Point of Sale System
HRM System
Department of IT & Security System Installation
CCTV Camera Installation
Finger Print System
Alarm System (Motion Detection, Fire, Smoke Sensors)
Local Area Networking
எமது உயர்தர சேவையை மலர்ந்த புதுவருடத்தில் புதுப்பொலிவுடன் வழங்கும் உங்கள் CeyLabs.

## யாழ். மண்ணின் கல்வி வளர்ச்சிக்கு புத்துயிர் கொடுத்த சாதனையாளனை வாழ்த்துகிறோம்

## கமலக்கண்ணன் கமலவாசன்



யாழ்.மண்ணின் கல்விப் பின்னடைவு கண்டே
கலங்கித் தவித்தனர் கல்வியாளர்
கல்வியில் சோடை போகவில்லை யாழ்.மண்
கட்டியம் கூறியது உன் சாதனை
நீ நடந்த பாதையிலே தொடர்வார் சாதனையாளர்
ஒளிமயமான எதிர் காலம் மலரும் யாழ்.மண்ணில்

**வாழ்த்துவோர்:**

இலக்குமி - அப்பம்மா,
கந்தசாமி - அப்பப்பா
குகன், தாசன், மலர்விழி-ஞானச்சந்திரன்,
ஜெயக்குமார் - மதிவதனி, துளசிராஜன்.

*முதலாம் கட்டை,*
*புலோலி மத்தி.,*
*பருத்தித்துறை.*

சாவகச்சேரியில்
20% தள்ளுபடியுடன்
மாபெரும்
மலிவு விற்பனை
அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள் சிறுவர்களுக்கான ஆடைகள்
மரியம்'ஸ்
பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்
இடம் : "கலா, காமென்ட்"
16 A, கண்டி வீதி, சாவகச்சேரி (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 03.01.2012 தொடக்கம் 14.01.2012 வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free
தொடர்புகளுக்கு: 0777140844,0718034848

## மரண அறிவித்தல்

### குமார் இராமச்சந்திரன்

தூதாவளையைப் பிறப்பிடமாகவும் சித்தம் பாதி, கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட குமார் இராமச்சந்திரன் 28.12.2011 அன்று காலமானார்.

அன்னார் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் இராயேஸ்வரன் (கனடா), ரமேஸ் (லண்டன்), றஜீவ் (பிரான்ஸ்), மாலதி (லண்டன்), சுதாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.01.2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்தம்பாதி,*
*கரணவாய்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பாடசாலையின் ஆசிரியர்கள் மாவட்ட பாடசாலைகளுக்கு மாற்றம்

## வெளிமாவட்டம் செல்ல அவர்கள் விரும்பாமையே காரணம்

அச்சுவேலி ,ஜன.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள தேசியப்பாடசாலைகளில் கடமை யாற்றிய ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள போதிலும் வெளிமாவட்டங்களுக்கோ, வேறு பாடசாலைக்கோ இடமாற்றம் பெறுவதற்கு விரும்பாமல் குறித்த பாடசாலைகளில் தேங்கி இருந்தமையினாலேயே மாவட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டது. அத்துடன் அவர்களை இடமாற்றம் செய்வதற்கான அனுமதி வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது எனக் கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேசியப் பாடசாலைகள் மத்திய அரசின் கீழ் செயற் படுகின்றன. தேசியப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை பிரிவினரால் அதற்குரிய இடமாற்றச் சபையினால் மேற்கொள்ளப்படும். தேசியப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் விரும்பி விண்ணப்பிக்கும் போது மட்டும் மாகாணப் பாடசாலைகளுக்கு விடுவிக்கப்படுவார்கள்.

ஆனால் இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி உட்பட யாழ்.மாவட்டத்திலுள்ள தேசியப்பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்கள் அவர்களின சுயவிருப்பத்துக்கு இடமளிக்காமல் யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை பிரிவு அதிகாரி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கணிசமான அளவு ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்தனர். அவர்களுக்கு உரியமுறையில் கடமைப் பொறுப்புக்களோ, பாடங்களோ, வழங்கமுடியாமல் இருந்தது. இவர்கள் வெளிமாவட்டங்களில் உள்ள தேசியப் பாடசாலைகளுக்கு இடம் மாறிச் செல்வதை விரும்பாமல் குறித்த தேசியப் பாடசாலைகளிலேயே இருக்க வேண்டும், யாழ்.மாவட்டத்திலேயே கடமை புரியவேண்டும் எனக் கடும் பிடியில் இருந்தனர்.

பொருத்தமான அளவு நேரம் கற்பிக்காமல், பொருத்தமான கடமைப்பொறுப்புக்களை மேற்கொள்ளாமல் ஒரே பாடசாலையில் தேங்கி இருப்பதை அனுமதிக்கமுடியாது. யாழ்.மாவட்ட தேசியப் பாடசாலைகளில் மேலதிகமாக தேங்கியிருந்த ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்'' எனத் தெரிவித்தார். (த-11)

# கிளிநொச்சி ஜெயபுரத்தில் வள்ளத் தொழிற்சாலை

கிளிநொச்சி , ஜன.3

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற் தொழிலாளர்களின் நலன் கருதி பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜெயபுரத்தில் வள்ளம் கட்டும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஐ.எல்.ஓ நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கான பொருத்தமான இடமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் இது சம்மந்தமான பயிற்சி வழங்குவதற்கு ஆறு மீனவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களுடைய வள்ளங்கள் மற்றும் உபகரணங்கள் சேதத்திற்குள்ளாகியது.

இதனால் மீள் குடியமர்த்தப்பட்ட மீனவர்களின் பெரும்பாலானவர்கள் தொழில் செய்வதற்கு வள்ளம் இல்லாததினால் தொழிலின்றி கஷ்டப்படுகிறார்கள்.

இந்த நிலையில் மீனவர்களின் நலன் கருதி வள்ளம் கட்டும் தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ள மேற்படி நிறுவனம் பூ நகரிப் பிரதேசத்தில் ஜெயபுரம் என்னும் இடத்தில் மன்னார் வீதிக்கருாமையில் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்துள்ளது.

வள்ளம் கட்டுவது தொடர்பான பயிற்சி நெறிக்கு ஆறு மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கொழும்பிலுள்ள நில்மறீன் என்ற வள்ளம் செய்யும் நிறு வனத்தில் இவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சிக் காலத் தின்போது இவர்களுக்குக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

ஜெயபுரத்தில் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதும் கிளிநொச்சியில் பிரசேத்திலுள்ள மீனவர்களுக்கு குறைந்த விலையிலும் இலகு கடன் அடிப்படையிலும் வள்ளங்கள் வழங்கப்படவுள்ளன. (த-115)

# புதியதொரு இலங்கையைக் கட்டியெழுப்ப அரச ஊழியரின் அர்ப்பணிப்புத் தேவை

அரச ஊழியர்கள் இவ்வருடத்தில் 245 நாள்கள் தான் பணிபுரியவேண்டியுள்ளது. எனவே, இக்காலப் பகுதிக்குள் மக்களின் தேவைகளை வினைத்திறனுடன் பூர்த்திசெய்யும் பொருட்டு அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தில் கடமைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் தமது உரையில் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டை ஆச்சரியமாக மாற்றிவரும் 'மஹிந்த சிந்தனை' இலக்குகளை அமுல்படுத்தும் முழுமையான பொறுப்பு அரச ஊழியர்களுக்கே உள்ளது.புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு முதலில் அரச சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் - என்றார்.

# அனைத்து மக்களுக்கும் சமவுரிமை இதுவே ஜே.வி.பியின் நிலைப்பாடு

கொழும்பு, ஜன.3

''நாட்டு மக்கள் அனைவருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து கிடைக்கப்பெற வேண்டும் என்பதுதான் ஜே.வி.பியின் உறுதியான நிலைப்பாடு. ஆனாலும், நடைமுறையிலுள்ள அரசு இவற்றை செய்யாது மாறாக, காலத்தையே இழுத்தடிக்கும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை''

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன எனக் கேட்டபோதே அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தையே அரசு கையாள்கின்றது.

அரசியல் தீர்வுப்பேச்சிலும் இதே பாணியையே அரசு பின்பற்றுகின்றது. ஒருமுறை அட்டவணை தயாரிப்பார்கள். அடுத்தமுறை அதனை மாற்றியமைப்பார்கள். இடையில் பேச்சு முறியும். இதுதான் தொடரப் போகும் கதையும் கூட.

அனைவருக்கும்சமஉரிமை, சம அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதுதான் எமது உறுதியான நிலைப்பாடு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சம உரிமை என்று சொல்லிவிட்டோம். எனவே காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பற்றி பேசிப் பயனில்லை. இதற்கு முதல் ஆட்சிப்பீடத்திலுள்ளவர்களால் கூட இதனை வழங்க முடியாமல் போய்விட்டதே. முழுமையானதொரு தீர்வைப்பற்றி பேசும்போது அவற்றை ஏன் கூறுபோட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவொன்றை அமைத்து காலத்தை இழுத்தடித்த அரசு, அதனை வைத்தே எதிர்காலத்தையும் கடத்தும்.

இனப்பிரச்சினைக்குத் தற்போதைய அரசு தீர்வைக் காணாது என்பது தெட்டத் தெளிவு. மாறாக அது காலத்தையே கடத்தும் - என்றார்.

# ஜே.வி.பி. கிளர்ச்சியாளரின் குடும்பம் கைதாகி விடுவிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினர் கைதுசெய்யப்பட்டமை குறித்து பல்வேறு கோணங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பூர்வாங்க விசாரணைகள் முடிந்ததும், குணரத்தினத்தின் பிள்ளைகளின் கடவுச்சீட்டுகள் அவர்களிடம் திருப்பி கையளிக்கப்பட்ட போதும், மனைவியின் கடவுச்சீட்டை தொடர்ந்தும் பாதுகாப்புத் தரப்பினர் தம்மகத்தே வைத்திருந்தனர் எனத் தெரியவருகிறது.

குணரத்தினத்தின் குடும்பத்தினர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக ஆஸ்திரேலியத் தூதரகத்துக்கு குணரத்தினம் தரப்பினர் அறிவித்தனர். குணரத்தினத்தின் மனைவி ஆஸ்திரேலிய பிரஜையாவார். வருட இறுதி விடுமுறையைக் கழிப்பதற்காகத் தனது இரண்டு பிள்ளைகள் சகிதம் அவர் இலங்கை வந்திருந்தார்.

இலங்கையில் சுற்றுலாப் பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் நாடு திரும்ப தயாராகும்போதே இவர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்டனர்.

விசாரணைகள் முடிவில் அவர்கள் நேற்றிரவு 7 மணியளவில் விடுவிக்கப்பட்டனர். எனினும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டவர் குணரத்தினத்தின் மனைவியா என்பதை தன்னால் உறுதிப்படுத்த முடியாதுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ங-சி)

# துஷ்பிரயோகம்

15 வயதான பாடசாலை மாணவி ஒருவரைக் கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பாலாவி நாயக்கார் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியே வன்புணர்வுக்கு உள்ளானவர்.

# சஜித் தரப்பினரின் பதவிகள் பறிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாசமானவர்கள் நியமிக்கப்படுவர் என்று கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அதேபோல், சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்தியவர்களுடன் தொடர்புபட்டவர்களுக்கும் பல ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்கொண்டிருப்பவர்களுக்கும் கூட தொகுதி அமைப்பாளர்கள் பதவி வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# இலங்கைக் கடலில் மூழ்கிய கப்பல்கள்; ஆய்வுகளை நடத்த சீனா விரும்புகிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துடன் சீன உயர்மட்ட அதிகாரிகள் ஏற்கனவே இராஜதந்திரமட்டத்திலான பேச்சுகளை நடத்தியுள்ளனர் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

இந்த ஆய்வின்போது பெறுமதியான தொல்பொருள் தளபாடங்கள் கண்டெடுக்கப்படும் பட்சத்தில் அவற்றை சரிசமமாகப் பகிர்ந்துகொள்வதற்கு இருநாட்டு அதிகாரிகளும் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை வரும் சீன அதிகாரிகளுக்கு உரிய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் இலங்கை தீர்மானித்திருக்கிறது என்று மேலும் அறியமுடிகிறது. (ஒ-சி)

# கிளிநொச்சிக்கு ரயில் சேவை இந்த ஆண்டின் இறுதிக்குள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் அதிகாரிகள் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

ஆண்டின் இறுதிக்குள் கிளிநொச்சி வரை ரயில் சேவையை நீடிப்படு என்ற இலக்குடன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது சில சமயம் முடியாமல் போனால் மாங்குளம் வரையாவது அந்தசேவையை நீடிப்பது என ரயில்வே திணைக்களம் தீர்மானத்திருக்கிறது.

எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குள் யாழ்ப்பாணம் வரை ரயில் சேவரைய நடத்துவதற்கும் அதன் பின்னார் காங்கேசன்துறை வரை அதனை நீடிப்பதற்கும் ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதற்காக ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பரந்தன் ரயில் நிலையத்தில் இருந்து மாங்குளம் வரையான ரயில் பாதை அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் பாதை புனரமைப்புப் பணிகளுக்காக ஒரு தொகுதி பொருள்கள் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன- என்றார் அந்த அதிகாரி. (த-26)

# வீடுகளை கிருஷ்ணா கையளிப்பார்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா யாழ்ப்பாணம் வருகிறார் என அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.இந்திய அமைச்சின் வருகை குறித்து அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசின் நிதியுதவியில் யாழ்.மாவட்டத்தில் முன்னோடித் திட்டத்தின் கீழ் 150 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அரியாலை நாவலடியில் அமைக்கப்பட்ட வீட்டினை பயனாளிகளிடம் கையளிப்பதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இங்கு வரவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அன்று காலையில் வீட்டுத்திட்டம் கையளிக்கப்படும் நிகழ்வு இடம்பெறும். மதிய வேளை இந்திய அரசின் நிதியுதவியுடன் ரயில் பாதை புனரமைப்பை யாழ்.மத்திய ரயில் நிலையத்தில் கிருஷ்ணா ஆரம்பித்து வைப்பார். இந்த வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது -என்றார் அரச அதிபர்மேலும் 16ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா 19ஆம் திகதி தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சந்தித்து பேசுவார் எனத் தெரியவருகிறது. (த-15)

# இந்தியா பாதுகாப்பு ரீதியாக இலங்கையை சார்ந்துள்ளது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கும்.

நான் ஜனவரி 16ஆம் திகதி கொழும்புக்குச் செல்லவுள்ளேன்.இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்தியப் பயணத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் காத்திருக்கிறேன்.

எமது அயல்நாடுகளுடன் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வது குறித்து நாங்கள் கரிசனை கொண்டிருக்கிறோம். மூன்றாவது நாடு (சீனா) ஒன்றுடனான அவர்களின் உறவுகள் கவலையளிக்கக் கூடியவை தான். ஆனால் எமது நலனை அவர்கள் மீது திணிக்க முடியாது.

அயல் நாடுகள் ஏனைய நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளின் அணுகு முறையை நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால் அவர்களுடனான எமது உறவுகளை நல்லெண்ணம் மற்றும் நல்ல அயலுறவுகளின் அடிப்படையில் வைத்துக் கொள்வதற்கு விரும்புகிறோம். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவரித் திணைக்களத்திடம் 2011 இல் மட்டும் மாட்டியோர் 225 – அபராதம் 11 1/2 லட்சம்

யாழ்.மதுவரித்திணைகளப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மதுவிற்பனை, 21 வயதுக்குட்படவர்களுக் கான புகைபொருள் விற்பனை என்பன தொடர்பாக கடந்தவருடம் 225 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளன.இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு 11 லட்சத்து 45 ஆயிரத்து 650 ரூபாஅபராதம் விதிக்கப் பட்டது-

இந்தத் தகவலை யாழ். மதுவரிப்பரிசோதகர் என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த 136 பேரும், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைபொருள்கள் மற்றும் போதைப் பொருள்களை விற்பனை செய்த கடைஉரிமையாளர்கள் 89 பேர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிட மிருந்தே மேற்குறித்த தொகை அபராதமாகப் பெறப்பட்டது.

இந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் மதுபானங்களைக் கொள்வனவு செய்து சட்டவிரோதமான முறை யில் விற்பனை செய்தவர்கள் ஆவர். விற்பனைக்கென குறிக்கப் பட்ட விலையை விடவும் அதிக விலையில் வீடுகள், இரகசிய இடங்கள், ஆள்நடமாட்டம் குறைந்த வீதிகள் என்பவற்றிலேயே இவ்வாறான சட்டவிரோத மதுபான விற்பனை அமோகமாக நடைபெற்றுள்ளது. குறிப்பாக யாழ்.நகர்ப்பகுதியிலும், கொக்குவில் பகுதியிலுமே அதிகளவிலானோர் இத்தகைய குற்றச்சாட்டுகளில் சிக்கிக் கொண்டனர்.

இதேவேளை கடந்தவருடம் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட மூன்று இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது -என்றார்.


வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப்பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க இன்றே நாடுங்கள்... 'உதயன்' வன்னிப் பணிமனை
(புனித தெரேசா பாடசாலை முன்பாக) கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

**கார் வாடகைக்கு உண்டு**
திருமண வைபவங்கள் மற்றும் அதி விசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய Allion கார் வாடகைக்கு உண்டு.



தொடர்புகளுக்கு: S.மதன்
0777289283

**நேற்று இன்று அல்ல என்றென்றும்**
வலி. மேற்கில் தனக்கென்று தனித்துவமான கல்வி நிறுவனம்
2014 A/L SUBRA 14
சித்தன்கேணி-வட்டுக்கோட்டை
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
05.01.2012
வியாழன் மாலை 4 மணி
(சுப வேளையில்)
தரமானதும் தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டலில்
A/L Day Class 02.01.2012 இல் ஆரம்பம்
(C/7191)(5.6)

**VCM INSTITUTE**
A/L 2014
இணைந்த கணிதம்
B.Raveendran B.Sc
ஆரம்பம்: ஜனவரி 5 மாலை 5 மணி

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
- A/L 2014 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் English & GIT
- Gr.1 முதல் O/L வரை
- Eng. med Gr.6 to 11
- Eng. Lit Gr.10 to 11
- புலமைப்பரிசில் Gr.5
- I.C.T (செயன்முறைகளுடன்)
- சிங்களம்
- Spoken English

விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் ஜேர்மன் - Deutsch, நெதர்லாந்து-Dutch, பிரெஞ்ச் புதிய பிரிவுகள் புத்தாண்டை முன்னிட்டு ஆரம்பமாகின்றன.

| | | | |
|---|---|---|---|
| Deutsch - | Batch I, | 31.01.2012 - | 9 a.m. |
| | Batch II, | 04.01.2012 - | 9 a.m. |
| Netherland | Batch I, | 04.01.2012 - | 11 a.m. |
| Dutch - | Batch II, | 05.01.2012 - | 11 a.m. |
| French - | Batch I, | 04.01.2012 - | 9 a.m. |
| | Batch II, | 05.01.2012 - | 9 a.m. |

**Vivekananda Academy**
No. 221/1, Power House Road, Jaffna.
Tel.: 021-222-0393/021-321-6928
Hotmail: 077-4842464

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**
இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தமையாலாகும்.
ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகம் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட உங்கள் தாய்மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தன் தாய்-தந்தையருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப்பட்டறையில் (work shop) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 07.01.2012 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள். (இம்முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப. 8 - 10 | பிரிவு III பி.ப. 01 - 03
பிரிவு II மு.ப. 10 - 12 | பிரிவு IV பி.ப. 03 - 05
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்) TEL:0776214567

**விற்பனைக்கு**



செங்கல், கருங்கல், சீமெந்து கல், அத்திவார கற்கள், சல்லி கற்கள், நிலப்பதிப்புக் கற்கள், பூவடிவ கற்கள், கொங்கிறீட் கதிரை செட், பூச்சாடிகள் கருங்கல் தூள் (டஸ்ட்)
வன்னி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்
பிரணவன் என்ரபிறைசஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

**DCM யாழ்.நகர்**
A/L 2014
கணக்கீடு P.பகீரதன் B.BA (Fm. Spl)
ஆரம்பம் - ஜனவரி 7

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L - 2014
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 07.01.2012 (8 மணி)




A/L - 2014
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:
ஜனவரி - 7
காலை 9.00 மணி
DMI Jaffna
(C/7166)(5)

A/L 2014 கலை வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.(பெருமாள் கோவில் அருகாமை)

A/L 2014 கலை வர்த்தகப்பிரிவு
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்
ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**Physics Park**
(வைத்தீஸ்வரா சந்தி அருகில்)
Physics
1. 2014 English medium Commences on 3rd January 2012 Tuesday at 4 p.m.
2. Repeat batch (paper class) கடந்தகால வினாக்களின் மீட்டல்
ஆரம்பம்
04.01.2012 புதன் பி.ப. 4.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.